# உதயன்

வானிலை
கூ.வெ. 32°C
கு.வெ. 23°C
தெளிவான காலநிலை

சுடர் 30 | கதிர் 140 | வள்ளுவர் ஆண்டு 2046 | சித்திரை 2, புதன்கிழமை 15.04.2015


## ஐரோப்பிய ஒன்றியத் தடை விரைவில் விலகும்

*கடற்றொழில் அமைச்சு நம்பிக்கை*

கொழும்பு, ஏப். 15
ஐரோப்பிய ஒன்றியத்துக்கான மீன் ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்டிருக்கும் தடை விரைவில் நீக்கப்படக்கூடும் என்று கடற்றொழில் அமைச்சு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.
ஐரோப்பிய ஒன்றியத்தால் பரிந்துரைக்கப்பட்ட உபகரணங்களைப் படகுகளில் பொருத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

பக்.05

# தயக்கம்

**பதிவுகளை மேற்கொள்ள மக்கள் பின்னடிப்பு: வலி.வடக்கில் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் காணிகள் அடையாளம் காண்பதில் சிரமம்**


கோப்புப்படம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 15
வலி.வடக்கில் விடுவிக்கப்பட்டுள்ள 7 கிராம சேவையாளர் பிரிவுகளில் மீள்குடியமர்வு நடவடிக்கைகளை ஆரம்பிக்க மக்கள் தயக்கம் காட்டி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இதுவரை 150 குடும்பங்கள் வரையிலேயே மீள்குடியமர்வுக்கான பதிவுகளை மேற் கொண்டுள்ளன. விடுவிக்கப்பட்ட பகுதிகளை பலர் பார்வையிட வருகின்றபோதும், அவர்களது காணிகளுக்குச் செல்வதற்குரிய பாதைகள் ஒழுங்காக இல்லாதுள்ளது. அதனால் மக்கள் பதிவுகளை மேற்கொள்வதில் தயக்கம் காட்டி வருகின்றனர்.
வலி.வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட 7 கிராம சேவையாளர் பிரிவுகள் கடந்த சனிக்கிழமை விடுவிக்கப்பட்டன. காங்கேசன்துறை தெற்கு (ஜே/235) கிராம சேவையாளர் பிரிவில், 109 ஏக்கரும்,பளை–வீமன்காமம்வடக்கு (ஜே/236) கிராம சேவையாளர் பிரிவில், 55 ஏக்கரும், பளை–வீமன்காமம் தெற்கு (ஜே/237) கிராம சேவையாளர் பிரிவில், 62 ஏக்கரும், தையிட்டி தெற்கு (ஜே/250) கிராம சேவையாளர் பிரிவில் 17 ஏக்கரும், கட்டுவன் (ஜே/238) கிராம சேவையாளர் பிரிவில் 10 ஏக்கரும், தென்மயிலை (ஜே/240) கிராம சேவையாளர் பிரிவில் 26 ஏக்கரும், வறுத்தலைவிளான் (ஜே/241) கிராம சேவையாளர் பிரிவில் 118 ஏக்கரும் விடுவிக்கப்பட்டுள்ளன.
இவற்றில்வறுத்தலைவிளான்,பளை வீமன்காமம் தெற்கு,

பக்.02

## விடுவிக்கப்பட்ட பகுதிகளில் திருடர் நடமாட்டம் அமோகம்

### நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 15
வலி.வடக்கில் அண்மையில் விடுவிக்கப்பட்ட பிரதேசத்தில் கொள்ளையிட முயன்றவர்களை தட்டிக் கேட்க முயன்ற கிராம சேவையாளரை கொள்ளையர்கள் மிரட்டிச் சென்றுள்ளனர். புதுவருடப் பிறப்புதின மான நேற்றும் அந்தப் பகுதியில் இரும்பு களவெடுக்கும் முயற்சியில் ஈடுபட்ட சிலர், அங்கு நின்ற பொதுமக்களால் விரட்டப்பட்டுள்ளனர்.
தொடர்ச்சியாக நடைபெற்று வரும் திருட்டை, பொலிஸார் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோருகின்றனர்.
வலி.வடக்கில் விடுவிக்கப் பட்ட 7 கிராம சேவையாளர் பிரிவுகளிலும், மக்கள் இன்னமும் மீளக் குடியமரவில்லை. காணிகளை வந்து பார்வையிட்டுச் செல்கின்றனர். அங்கு ஒரு சில வீடுகள் மாத்திரமே எஞ்சியிருக்கின்றன. அவ் வாறு

பக்.02

## தாமரைக் கோபுரம் தெற்காசியாவுக்கு அச்சுறுத்தல்!



கொழும்பு, ஏப்.15
இலங்கையில் நிர்மாணிக்கப்பட்டுவரும் தாமரைக் கோபுரம் சீன இலத்திரனியல் உளவு மையம் என்று குறிப்பிட்டுள்ளார் இந்தியப் பாதுகாப்புத் தந்திரோபாய ஆய்வாளர் ஒருவர்.
ஈபிள் கோபுரத்தை விடவும் 26 மீற்றர் கூடுதலாக உள்ள தாமரைக் கோபுரமானது தெற்காசியாவில் மிக உயர மான கோபுரமாக உருவாக்கப் படவுள்ளது.
இந்தக் கோபுரம் இந்தியாவுக்கும், தெற்காசியாவுக்கும் அச்சுறுத்தலாக மாறும் என்று அந்த ஆய்வாளர் எச்சரிக்கையும் விடுத்துள்ளார்.

பக்.05



மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத் தேர்த்திருவிழா கடந்த பத்து ஆண்டுகளின் பின்னர் புத்தாண்டு தினமான நேற்று மிகச் சிறப்பாக நடைபெற்றுள்ளது.

பக்.25

## பொறுப்புக்கூறல் தொடர்பாக இலங்கையுடன் அமெ. பேச்சு

கொழும்பு, ஏப். 15
இலங்கை அரசுடன் மனித உரிமைகள் – ஜனநாயகத்தை வலுப்படுத்தல் – வெளிப்படைத் தன்மை – பொறுப்புக் கூறல் ஆகிய விவகாரங்கள் குறித்து, அமெரிக்கா கலந்துரையாடியுள்ளது. அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.
அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின், ஜனநாயகம் – மனித உரிமைகள் – தொழில்ளாளர் விவகாரங்களுக்கான உதவிச் செயலராகப் பணியாற்றும், ரொம் மாலினோவ்ஸ்கி கடந்த 2 ஆம் திகதி தொடக்கம், 10 ஆம் திகதி வரை இலங்கை, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். அந்தப் பயணம் தொடர்பாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் செய்திக் குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.
அதில், உதவிச் செயலர் ரொம் மாலினோவ்ஸ்கி, இலங்கையில் மூத்த அரச பிரதிநிதிகளைச் சந்தித்து, மனித உரிமைகள், ஜனநாயகத்தை வலுப்படுத்தல், வெளிப்படைத்தன்மை,

பக்.02

## சுகாதார நியதிச் சட்டத்துக்கு இன்னமும் அனுமதி இல்லை

### சட்டமா அதிபரின் ஆலோசனையை நாடியுள்ளார் ஆளுநர்



யாழ்ப்பாணம், ஏப். 15
வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தை ஆரம்பிக்கும், வடக்கு மாகாண சபையின் நியதிச் சட்டம் ஆளுநரின் அங்கீகாரத்துக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இருப்பினும் இதுவரையில், ஆளுநர் அதற்கு அங்கீகாரம் வழங்கவில்லை என்று தெரிய வருகின்றது.
வடக்கு மாகாண சபையில் கடந்த மாதம் 17 ஆம் திகதி சுகாதார அமைச்சுக்குரிய நியதிச் சட்டம் சபையில் இரண்டாம், மூன்றாம் வாசிப்புக்கு விடப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. அதன்பின்னர், நியதிச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக, வடக்கு மாகாண ஆளுநரின் அங்கீகாரத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
கடந்த இரண்டு வாரத்துக்கு முன்னர் குறித்த நியதிச் சட்டம் ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதற்கு இன்னமும் ஆளுநர் பளிகக்கார அங்கீகாரம் வழங்கவில்லை. இது தொடர்பில் அவர், சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனையைக் கோரியிருப்பதாக அறிய முடிகின்றது.
சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து பதில் கிடைக்கப்பெற்ற பின்னரே, ஆளுநர் இதற்கான அனுமதியை வழங்குவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ந–5)



## லொறியை பற்களால் இழுத்து அசத்திய நபர்

பக்கம் 09

## இலங்கை அரசியலில் திடீர் திருப்பங்கள்!



பக்கம் 12

## உயர் நீதிமன்றத் தீர்ப்பு ஜனாதிபதிக்கு சாதகம்

பக்கம் 13

## இலங்கை சுற்றுலாப் பயணிகளுக்கு வருகை நுழைவிசைவு நடைமுறை

கொழும்பு, ஏப்.15
இலங்கையில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு, இந்திய விமான நிலையங்களில் வைத்து, வருகை நுழைவிசைவு வழங்கும் நடைமுறை நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று இந்திய அரசு அறிவித்துள்ளது.
இந்தியாவில் வருகை நுழைவிசைவு பெறும் 45 நாடுகளின் பட்டியலில் நேற்றுமுதல் இலங்கையும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது. கடந்த மாதம், இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இந்த உறுதிமொழியை வழங்கியிருந்தார். அதற்கமைய, இன்று முதல், வருகை

பக்.02

# விளையாட்டு அமைப்புகள் மீது அழுத்தங்கள் எதுவுமே இல்லை

## அமைச்சர் நவீன் திஸாநாயக்க கூறுகிறார்

கொழும்பு, ஏப். 15

விளையாட்டு அமைப்புக்கள் பேரவைகள் மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்படவில்லை என விளையாட்டுத்துறை அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கையின் புதிய அரசு விளையாட்டு அமைப்புக்கள் மற்றும் பேரவைகள் மீது அழுத்தங்களைப் பிரயோகித்து வருவதாகச் சர்வதேச ஒலிம்பிக் பேரவை உள்ளிட்ட சர்வதேச விளையாட்டுத்துறை அமைப்புக்கள் குற்றம் சுமத்தியிருந்தன.

எனினும் இவ்வாறான எந்தவொரு அழுத்தங்களையும் அமைச்சோ அரசோ விளையாட்டுத்துறை அமைப்புக்கள் நிறுவனங்கள் மீது பிரயோகிக்கவில்லை என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டுக்களை முற்று முழுதாக நிராகரிக்கின்றேன் என அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அமைச்சர் சர்வதேச ஒலிம்பிக் பேரவைக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

உலகத் தரத்திற்கு இலங்கையின் விளையாட்டுத்துறைச் சட்டங்களை திருத்தி அமைக்கும் முனைப்புக்களில் அரசு ஈடுபட்டுள்ளதாகவும் இதனைத் தவிர வேறு எந்த அழுத்தங்களும் பிரயோகிக்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அழுத்தங்களைப் பிரயோகித்தால் சர்வதேச உறுப்புரிமைகளை இழக்க நேரிடம் என சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம் மற்றும் சர்வதேச ஒலிம்பிக் பேரவை போன்றன கடுமையான எச்சரிக்கை விடுத்திருந்தன.

ஏற்கனவே சர்வதேச கிரிக்கட் பேரவையும் இவ்வாறான எச்சரிக்கை விடுத்திருந்தது.

விளையாட்டுத்துறை அமைப்புக்கள் பேரவைகளின் நிர்வாகங்களை எதேச்சாதிகாரப் போக்கில் கலைத்து புதிய நிர்வாகங்கள் உருவாக்கப்பட்டுள்ளதாக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எனினும், இவ்வாறு எவ்விதமான அழுத்தங்களும் பிரயோகிக்கப்படவில்லை எனவும் முறைகேடுகள் ஊழல் மோசடிகளை தடுக்கும் நோக்கில் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.



காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலயத்தில் தேர்த்திருவிழா சித்திரைப்புத்தாண்டு தினமான நேற்று சிறப்புற நடைபெற்றது. நூற்றுக்கணக்காண அடியார்கள் திருவிழாவில் கலந்துகொண்டு விநாயகர் அருளை வேண்டினார்கள். (ற-250)

## பங்குனித் திங்கள் உற்சவத்தில் 6 சங்கிலிகள் திருட்டு

தென்மராட்சி, ஏப்.15

மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் ஆலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஐந்தாம் திங்கள் பொங்கல் உற்சவத்தில் சிறுபிள்ளைகளுக்கு அணிந்திருந்த 6 தங்கச் சங்கிலிகளும், ஒரு காப்பும் திருடப்பட்டுள்ளன என்று தெரிவிக் கப்பட்டது.

அத்துடன் 3 கையடக்கத் தொலைபேசிகள், நான்கு பணப்பைகள் போன்றவையும் திருட்டுப் போயுள்ளன என்று ஆலய நிர்வாகத்தினர் தெரி வித்தனர். (ற-9)

## ஆலயத்துள் பணம் திருட்டு

தென்மராட்சி,ஏப்.15


வெளிநாட்டிலிருந்து ஆலயத்துக்கென அனுப்பிய பணத்தை ஆலய அலுவலகத்தில் செலுத்தி விட்டு வெளியே வந்தபோது அவரிடமிருந்த பணம் பறிபோனது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மட்டுவில்பன்றித்தலைச்சிகண்ணகை அம்மன் கோவிலில் நடந்துள்ளது.

வெளிநாட்டில் உள்ள ஒருவர் ஆலயத்துக்கென அனுப்பிய 35 ஆயிரம் ரூபாவை ஆலய அலுவலகத்தில் செலுத்திப் பற்றுச் சீட்டுப் பெற்றுக் கொண்டு வெளியே வந்த போது சேர்ட் பொக்கற்றுக்குள் வைக்கப்பட்டிருந்த ஆயிரத்து 500 ரூபா பணம் திருடப்பட்டிருந்தது. இது தொடர்பாக ஆலய அலுவலகத்துக்கு முறையிட்டார் என்று கூறப்பட்டது. (ற-9)

# எதிர்க்கட்சி தலைவராக தடை இல்லை

## நிமல் சிறிபாலடி சில்வா கூறுகின்றார்



கொழும்பு, ஏப் 24

சிறிலங்கா சுதந்திர கட்சி உறுப்பினர்கள் அமைச்சர் பதவி பெற்றுக் கொள்வதனால் தனக்கு எதிர்க் கட்சித் தலைவராகச் செயற்படுவதற்கு எவ்வித தடையும் இல்லை என எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திர கட்சி உறுப்பினர்கள் சிலர் அரசில் அமைச்சர் பதவி பெற்றுக்கொண்ட சந்தர்ப்பத்தில் தான் எதிர்க்கட்சித் தலைவராக நான் நியமிக்கப்பட்டேன்.இதனால் நான் எதிர்க்கட்சித் தலைவராக்ச் செயற்படுவதற்கு எவ்வித தடையும் இல்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (த)

# சுதந்திரக் கட்சியில் இருந்து நீக்கப்பட்டோருக்கு அழைப்பு

கொழும்பு, ஏப். 15

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுவில் இருந்து நீக்கப்பட்ட ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்களையும் தமது கட்சியில் இணைந்து கொள்ளுமாறு ஜனசெத்த பெரமுன கட்சியின் தலைவர் கோரியுள்ளார்.

கட்சியின் தலைவரான பத்தரமுல்ல சீலரத்தின தேரர் இந்த அழைப்பை விடுத்துள்ளதாகதெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் இடமில்லையென்றபோதும் தமது கட்சியில் ஐந்து பேருக்கும் இடமிருப்பதாகத் தேரர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுவில் இருந்து நீக்கப்பட்ட ஐந்து பேரும் மீண்டும் மத்திய செயற்குழுவில் இணைத்துக் கொள்ளப்படலாம் என்ற ஊகங்களும் அவர்களுக்கு பதில் புதியவர்கள் நியமிக்கப்பட்டு விட்டார்கள் என்ற செய்திகளும் வெளியாகியுள்ளன. (த)

# கடந்த 24 மணித்தியாலத்துக்குள் 279 பேர் வைத்தியசாலைகளில்

கொழும்பு, ஏப். 15

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் கடந்த 24 மணித்தியாலயத்துக்குள் 279 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வருடங்களை விட இவ்வருடம் குறைந்தளவிலானோரே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அவசர சிகிச்சைப் பிரிவின் வைத்திய பணிப்பாளர் கபில விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளிகளில் அதிகளவிலானோர் வாகன விபத்துக்களினால் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வருடத்தில் வெடி விபத்துக்களினால் பாதிக்கப்பட்டவர்கள் எவரும் இதுவரை அனுமதிக்கப்படவில்லை என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (த)

## இலங்கை

நுழைவிசைவுத் திட்டத்துக்குள் இலங்கையும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது.

குறுகிய நாள்கள் இந்தியாவில் சுற்றுலாப் பயணம் மேற்கொள்வது, உறவினர்கள், நண்பர்களை சந்திப்பது, குறுகிய கால மருத்துவ சிகிச்சை, போன்றவற்றுக்கு இந்த நுழைவிசைவைப் பயன்படுத்த முடியும். குறைந்தது ஆறு மாதங்கள் செல்லுபடியாகத்தக்க கடவுச்சீட்டைக் கொண்டிருக்க வேண்டும். குடிவரவு அதிகாரிகள் முத்திரையிடுவதற்கு குறைந்தது இரண்டு வெற்றுப் பக்கங்கள் கடவுச்சீட்டில் இருக்க வேண்டும். இந்தியாவில் தங்கியிருந்து செலவிடுவதற்கான பணம் மற்றும், இருவழிப் பயணச் சீட்டு ஆகியவற்றைக் கொண்டிருக்க வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, 30 நாள்களுக்கு செல்லுபடியாகத் தக்க வருகை நுழைவிசைவு வழங்கப்படும். எனினும், தமிழ்நாட்டில் உள்ள எந்த விமான நிலையங்களிலும் இந்த வருகை நுழைவிசைவு வசதி இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## பொறுப்புக்கூறல்

பொறுப்புக்கூறல் ஆகிய விடயங்கள் குறித்து விரிவாக கலந்துரையாடினார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அவர், மனித உரிமைகள் மத மற்றும் சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேச்சு நடத்தினார் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ற-5)

## தயக்கம்

கட்டுவன் ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் மாத்திரம் மக்கள் மீள்குடியமர்வுக்கான பதிவுகளை மேற்கொண்டுள்ளனர். இதுவரை இவ்வாறு 148 குடும்பங்கள் வரையிலேயே பதிவுகளைச் செய்துள்ளன.

பலர் விடுவிக்கப்பட்டது என்று அறிவிக்கப்பட்ட மேற்படி பிரதேசங்களைப் பார்வையிட வருகின்றனர். ஆயினும் அங்கு பாதைகள் இன்னமும் அடையாளம் காண முடியாத நிலையில் இருப்பதும், இராணுவத்தினர் பாதைகளை மறித்து தமது பாதுகாப்பு வேலிகளை அமைத்தும் உள்ளதால், மக்கள் அவர்களுடைய காணிகளைச் சென்று பார்வையிட முடியாத நிலை காணப்படுகின்றது.

பாதைகளை விரைவில் சீர் செய்தால் மாத்திரமே மக்கள் அதிகளவில் குடியமர்வதற்கான வாய்ப்புக்கள் இருக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது. விடுவிக்கப்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகளில் குடியமர்வதற்காக ஆரம்பத்தில் ஆயிரம் பேர் வரையில் பதிவு செய்திருந்தனர். (ற-5)

## விடுவிக்கப்பட்ட

எஞ்சியிருக்கும் வீடுக ளின் கதவு, யன்னல், நிலை களை களவெடுத்துச் செல்வதற்காக தினமும் திருடர்கள் அந்தப் பகுதி களில் நடமாடுகின்றனர்.

அந்தப் பகுதிகளில் காணப்படும் இரும்புப் பொருள்களை திருடிக் கொண்டு செல்வதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 'படி' ரக வாகனங்களில் வந்து, அவற்றைக் கொண்டு செல்வதற்கு கொள்ளையர்கள் முயற்சித்துள்ளனர். இது தொடர்பில் அந்தப் பகுதியில் கடமையாற்றும் கிராம சேவையாளர் ஒருவர், கொள்ளையர்களை அதட்டிய போது அவர்கள் கிராம சேவையாளரை மிரட்டி விட்டு இரும்புப் பொருள்களைக் கொண்டு சென்றுள்ளனர்.

விடுவிக்கப்பட்ட சில நாள்களிலேயே தொடர்ச்சியாக நடைபெறும் இந்தச் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் நட வடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-5)

# தமிழ் ஊடகவியலாளருக்கு பொலிஸாரால் அச்சுறுத்தல்

## சர்வதேச ஊடகவியலாளர் கூட்டமைப்பு மற்றும் சுதந்திர ஊடக இயக்கம் என்பன சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப். 15
பொலிஸாரால் சுயாதீன ஊடகவியலாளர் ந.லோகதயாளன் கைது செய்யப்பட்டதற்கு, சர்வதேச ஊடகவியலாளர் கூட்டமைப்பு மற்றும் சுதந்திர ஊடக இயக்கம் ஆகியன கண்டனம் வெளியிட்டுள்ளன.

தமிழ் ஊடகவியலாளர்களை, பொலிஸார் அச்சுறுத்துவதாக குற்றம் சாட்டி, பிரெஸ்ஸைதளமாகக்கொண்ட, சர்வதேச ஊடகவியலாளர் கூட்டமைப்பு அறிக்கை வெளியிட்டுள்ளது.

மாணவி ஒருவர் நெல்லியடி பொலிஸாரால் துஷ்பிரயோகம் செய்யப்பட் டமை தொடர்பில், வெளியான செய்திக்காக, உதயன் பத்திரிகையின் சுயாதீன ஊடகவியலாளரான ந.லோகதயாளன் கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட் டிருந்தார். பருத்தித்துறை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட அவர், எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்ட போதும் பின்னர், பிணையில் விடுவிக்கப்பட்டார்.

மேலும், யாழ்ப்பாணத்தில் பணியாற்றும் தினக்குரல் பத்திரிகை ஊடகவியலாளர் த.வினோஜித், ஹிரு தொலைக்காட்சியின் பிராந் திய ஊடகவியலாளர் பிரதீபன் மற்றும் சுயாதீன ஊடகவியலாளர் சி.மயூரப்பிரியன் ஆகிய ஊடகவியலாளர்கள் கடந்த 7 ஆம் திகதி தனியான சம்பவம் ஒன்றில் இரண்டு பொலிஸாரால் அச்சுறுத்தப்பட்டது குறித்தும், சர்வதேச ஊடகவியலாளர் கூட்டமைப்பு குறிப்பிட்டுள்ளது.

யாழ்ப்பாண ஊடகவியலாளர்களை பொலிஸார் அச்சுறுத்த முனைகின்றனர் என்பது இதிலிருந்து தெளிவாகிறது. ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாக புதிய அரசு வாக்குறுதிகளைக் கொடுத்த போதிலும் கூட, இலங்கையில் ஊடக சுதந்திரம் படுமோசமான நிலையில் உள்ளதையே இந்தச் சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

இலங்கையில் ஊடக சுதந்திரத்தை மீளவும் உறுதிப்படுத்துவதில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது அர்ப்பணிப்பை வெளிப்படுத்த வேண்டும். நாட்டின் வடக்கு பகுதியில் பொலிஸார் மெதுவாக, ஊடகவியலாளர்களை வடிகட்டுகின்றனர் என்பதை இந்தச் செய்தி தெளிவாக்கியுள்ளது.

இந்த அச்சுறுத்தும் செயற்பாடுகளையும், அவதூறு குற்றச்சாட்டில் ந.லோகதயாளன் என்ற ஊடகவியலாளர் கைது செய்யப்பட்டதையும் நாம் கண்டிக்கிறோம்.

இந்தச் சம்பவங்கள் குறித்து இலங்கை அரசு உடனடியாக விசாரணைகளை நடத்த வேண்டும். அது ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதற்கான அதன் கடப்பாடாகும், என்றும் சர்வதேச ஊடகவியலாளர் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. (ற-5)

# அமைதியாகப் பிறந்த சித்திரைப் புத்தாண்டு



யாழ்ப்பாணம், ஏப்.15
யாழ்.குடாநாட்டில் இம்முறை சித்திரை புத்தாண்டுக்கு மக்கள் பட்டாசுகளை கொளுத்தி ஆரவாரப்படுவதை தவிர்த்துக் கொண்டனர். அதனால் பட்டாசு ஓசை மிகமிக குறைந்தே இம்முறை காணப்பட்டது. ஆங்காங்கே ஒரு சிலர் மட்டுமே பட்டாசுகள் மற்றும் வாண வேடிக்கைகளை விட்டு புத்தாண்டை கொண்டாடினார்கள்.

விசு புண்ணியகாலத்தில் மருத்துநீர் தேய்த்து நீராடி புத்தாடைகள் தரித்து ஆலயங்களுக்குச் சென்று பொங்கலிட்டு அர்ச்சனை செய்து தெய்வ ஆசிகளை வேண்டினர்.

பல்வேறு இடங்களிலும் விளையாட்டுப் போட்டிகள் இடம்பெற்றன. மக்கள் உறவினர் வீடுகளுக்குச் சென்று வாழ்த்துக்களை பரிமாறிக்கொண்டனர்.

பெரும்பாலான ஆலயங்களில் விசேட பூசை வழிபாடுகளும் தேர்த் திருவிழாக்களும் நடைபெற்றன.

அதேவேளை, இம்முறை பட்டாசு வியாபாரிகளும் தெற்கில் இருந்து படையெடுக்கவில்லை. ஒரு சிலர் மட்டுமே வாகனங்களில் பட்டாசுகளை கொண்டு வந்து நகரில் வைத்து விற்பனை செய்தனர். (ற-17,135)

## 10 நாள்களில் 13 பேருக்கு டெங்குத் தொற்று

யாழ்ப்பாணம். ஏப்.15
இந்த மாதம் முதல் 10 நாள்களில் 13 பேர் டெங்கு நோய்த் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என்று தொற்று நோய்த் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த வருடம் இதுவரையான காலப்பகுதியில் 957 பேர் இவ்வாறு டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். இந்த மாதம் வவுனியாவில் ஒருவரும் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளார். வடக்கில் ஏனைய மாவட்டங்களில் இந்த மாதம் தொற்று இனங்காணப்படவில்லை. இந்த வருடம் கிளிநொச்சியில் 32 பேரும், மன்னாரில் 68 பேரும், வவுனியாவில் 56 பேரும், முல்லைத்தீவில் 60 பேரும் டெங்குத் தொற்றால் பீடிக்கப்பட்டுள்ளனர். நாடளாவிய ரீதியில் 12 ஆயிரத்து 60 பேர் டெங்கால் பீடிக்கப்பட்டுள்ளனர் என்று தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ற-4)

## யாழ்.அரச அதிபருக்கு கௌரவிப்பு



யாழ்ப்பாணம், ஏப்.15
யாழ்.மாவட்டத்துக்குப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள அரச அதிபர் நா.வேதநாயகனைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை அளவெட்டி மகாஜனா சபையின் தலைவர் எஸ்.பாலசுப்பிரமணியம் தலைமையில் மகாஜனா மண்டபத்தில் நடைபெற்றது.

அளவெட்டியில் உள்ள பொது அமைப்புகள் சார்பில் அரச அதிபருக்கு பொன்னாடை போர்த்தப்பட்டு, வாழ்த்துப் பா மடல்களும் வழங்கப்பட்டன.

அருட் தந்தைகளான சந்திரபோஸ் அடிகளார், இராஜ்குமார் அடிகளார், பிரம்மஸ்ரீ விஸ்சேஸ்வரக் குருக்கள் ஆகியோரின் ஆசியுரைகளைத் தொடர்ந்து தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலய தேவஸ்தானத் தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன், வலி. வடக்கு பிரதேச சபைத் தலைவர் சோ.சுகிர்தன் உட்படப் பலர் வாழ்த்தி உரையாற்றினர். (ற-86)



வரலாற்று முக்கியத்துவம் மிக்க வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்தின் மஞ்சத் திருவிழா நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை வெகு விமரிசையாக நடைபெற்றது. பெரும் திரளான மக்கள் அம் மனின் அருள் வேண்டித் திரண்டிருந்தனர். அடியார்கள் தூக்குக்காவடி, பாற்செம்பு, அங்கப்பிரதட்சணம், பறவைக் காவடி போன்றவை எடுத்து தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றினர். (ற-111)

# ஒளிராத விளக்குகளால் மக்கள் பெரும் சிரமம்

## மன்னார் பிரதான பாலத்தில்

மன்னார், ஏப்.15
மன்னார் தீவையும் பெருநிலப்பரப்பையும் இணைக்கும் பிரதான பாலத்தில் பொருத்தப்பட்டுள்ள தெரு விளக்குகள் ஒளிராமையால் பயணிகள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

தலைமன்னாருக்கான பாலம் புதுப்பிக்கப்பட்டு தற்போது போக்குவரத்து நடைபெற்றுவருகிறது. எனினும் பாலத்தில் பொருத்தப்பட்டுள்ள மின் விளக்குகள் சீராக ஒளிர்வதில்லை. இதனால் வாகனங்களில் பயணிப்போரும். பாலத்தில் பொழுதைக் கழிக்கவருபவர்களும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். இப் பாலத்தில் இருள் சூழ்ந்துள்ளமையால் விபத்துக்களும் இடம்பெறுகின்றன.

எனவே பாலத்தின் தெருவிளக்குகளை திருத்தித் தரும்படி பல முறை மன்னார் நகரசபையின் கவனத்திற்கு மக்கள் கொண்டு சென்ற போதிலும் இது தொடர்பாக அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

2 ஆயிரத்து 464 கோடி ரூபா செலவில் உருவாக்கப்பட்ட மன்னார் பிரதான பாலம் மக்கள் பாவனைக்கு வழங்கப்பட்ட பின் மன்னார் நகரசபையே அதனை பராமரித்து வருகிறது. (ற)

# அகில இலங்கை இந்து மாமன்றத்தின் சமூக நல உதவிகள் வழங்கப்பட்டன

யாழ்ப்பாணம், ஏப். 15
சித்திரை வருடப் பிறப்பை முன்னிட்டு அகில இலங்கை இந்து மாமன்றத்தினால் சிறைக் கைதிகளுக்கு சமூக நல உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த திங்கட்கிழமை நியூ மகஸின் சிறைச்சாலையில் சிறைச்சாலை ஆணையாளரின் அனுமதியுடன் அங்குள்ள சிறைக் கைதிகளுக்கான விசேட பிரார்த்தனையும் உலர் உணவும் வழங்கப்பட்டன.

இங்கு உரையாற்றிய மன்றத் தலைவர் கந்தையா நீலகண்டன் தனது உரையில் அரசியல் கைதிகளை விடுவிக்க மன்றம் எடுத்துவரும் நடவடிக்கைகளை குறிப்பிட்டார். இந்த நிகழ்வில் சிவஸ்ரீ வைத்தீஸ்வரக் குருக்கள், மாமன்ற சமூக நலன் குழுத் தலைவர் விடைக்கொடிச் செல்வர் சின்னத்துரை தனபாலா உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

அத்துடன் நலன்புரி நிலையங்களில் வாழும் மக்களுக்கும் உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன், வலி.வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வுச் சங்கத் தலைவர் குணபாலசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.



அது தொடர்பில் கருத்துத் தெரிவித்த ஆறு.திருமுருகன், இடம்பெயர்ந்துள்ள மக்களை மீண்டும் தங்களின் சொந்த இடங்களுக்கு அனுப்ப வேண்டும் என்று அரசை மாமன்றத்தினூடாக வலியுறுத்தி வருகின்றோம். புதுவருடத்தை முன்னிட்டு நலன்புரி நிலையத்தில் வாழும் மக்களுக்கு உதவிகள் செய்யத் தீர்மானித்து முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனை நாடினேன். அவர் மேற்படி ஒழுங்குகளை கூட்டுறவுத் துறைமூலம் ஒழுங்கமைத்துத் தந்தார் - என்று குறிப்பிட்டார். (ற-10)



நகரில் நடைபாதை வியாபாரிகளுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களையும் மீறி அவர்கள் நேற்றுமுன்தினம் காலை விதியோரங்களில் வைத்து உடுபுடவைகளை போட்டு விற்பனை செய்தனர். நடைபாதை வியாபாரிகளுக்கு என திறந்த வெளி அரங்கு வளாகத்திலேயே மாநகராட்சி மன்றத்தால் இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. முற்றவெளியில் வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்பாகம் மற்றும் முனிஸ்வரர் வீதி போன்ற இடங்களில் உடுபுடைவைகளைப் போட்டு விற்பனை செய்கின்றனர். (ற–17)

# அகலத் திரையால் ஆபத்து

## புதுக்குடியிருப்பு மக்கள் கவலை

புதுக்குடியிருப்பு, ஏப்.15

புதுக்குடியிருப்பு சந்தியில் உள்ள புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குச் சொந்தமான காணியில் வீதியோரமாக இராணுவத்தால் அமைக்கப்பட்டுள்ள தொலைக்காட்சித் திரையால் பாதிப்புகள் ஏற்படுகின்றன என்று மக்கள் தெரிவித்துள்ளனர்.

மாத்தளன், முல்லைத்தீவு, பரந்தன், ஒட்டுசுட்டான் ஆகிய நான்கு வீதிகள் சந்திக்கும் இவ்விடத்தில் மாலை நேரங்களில் பெரியவர்கள், சிறுவர்கள் கூட்டமாக நின்று தொலைக்காட்சி நிகழ்வுகளை பார்ப்பதால் வீதி விபத் துக்கள் ஏற்படும் அபாயம் அதிகமாக உள்ளதுடன், பாடசாலை மாணவர்கள் கல்வி கற்காமல் நிகழ்வுகளை பார்வையிடுவதில் அக்கறை காட்டுகின்றனர் என்றும் கூறப்படுகின்றது.

இவ்விடயம் தொடர்பாக மீள் குடியேற்ற அமைச்சர் கௌரவ சுவாமிநாதன் அங்கு வந்திருந்தபோது மக்களால் இவ் விடயம் முன்வைக்கப்பட்டபோதும், எந்தப் பதிலும் கூறப் படவில்லை எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர். இது தொடர்பில் மாவட்ட நீதிவானின் கவனத்துக்குக் கொண்டு வரவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ற–433)

# தொழில்நுட்ப மாற்றீட்டு பயிற்சிகள்

யாழ்ப்பாணம்,ஏப்.15

கரவெட்டி பிரதேச செயலக விதாதா வள நிலையத்தால் சுயதொழில் முயற்சியாளர்களை உருவாக்கும் வகையில் தொழில் நுட்ப மாற்றீட்டுப் பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

திரவ சவர்க்காரம், சவர்க்காரத்தூள் தயாரித்தல், பசுப்பாலை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திப் பொருள்கள், கணினி தொடர்பான பயிற்சி நெறிகள் என்பன ஆரம்பிக்கப்படவுள்ளன. ஆர்வமுடையவர்கள் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னதாக கரவெட்டி பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் பதிவுகளை மேற்கொள்ளலாம். (ற–14)

# மீள்குடியமர்வுக் கூட்டம் எதிர்வரும் 22ஆம் திகதி

யாழ்ப்பாணம், ஏப். 15

வலி.வடக்கு மீள்குடியமர்வு தொடர்பிலான அடுத்த கட்டக் கலந்துரையாடல், எதிர்வரும் 22 ஆம் திகதி யாழ்.மாவட்டச் செயலகத்தில் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அதன்போது விடுவிக்கப்பட்ட பகுதிகளில் உட்கட்டுமான அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்வது தொடர்பில் ஆராயப்படவுள்ளது.

வலி.வடக்கு மீள்குடியமர்வு தொடர்பில், மீள்குடியேற்ற அதிகார சபையால் யாழ். மாவட்டச் செயலகத்தில் தொடர்ச்சியாக கூட்டம் நடத்தப்பட்டு வருகின்றது. காணிகள் விடுவிப்புத் தொடர்பிலும், அதனுடன் தொடர்புடைய ஏனைய முக்கிய விடயங்கள் தொடர்பாகவும், இந்தக் கலந்துரையாடலின் போதே இதுவரையில் முடிவுகள் எட்டப்பட்டு வந்தன.

கடந்த 8 ஆம் திகதி இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர், எதிர்வரும் 22 ஆம் திகதியே கலந்துரையாடல் நடத்தப்படவுள்ளது. இதன்போது, இதுவரையில் விடுவிக்கப்பட்ட ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் குடியமர்வுக்கு பதிவு செய்துள்ள மக்களிற்கு எவ்வாறான உதவித் திட்டங்கள் வழங்குவது மற்றும் எத்தகைய உட்கட்டுமான அபிவிருத்திகளை மெற்கொள்வது என்பது தொடர்பில் ஆராயப்படவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலின் பின்னரே, அடுத்த கட்ட மீள்குடியமர்வு தொடர்பில் ஆராயப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற–5)

# தொழிற்பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பம் அனுப்பலாம்

யாழ்ப்பாணம்,ஏப்.15

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை யாழ்.மாவட்டத்தில் முழு நேர மற்றும் பகுதிநேர தொழிற்பயிற்சி கற்கை நெறிகளை நடத்தி வருகிறது. இந்தப் பகுதிநேரச் கற்கைநெறிகளுக்கு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவன உத்தியோகத்தர்கள், தொழிற்கல்வியில் ஆர்வமுடையவர், பாடசாலை மாணவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

யாழ்ப்பாணம், கைதடி, காரைநகர், சுன்னாகம், வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, சண்டிலிப்பாய், ஊர்காவற்றுறை ஆகிய தொழிற்பயிற்சி நிலையங்களில் கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மரவேலை தொழில் நுட்பவியலாளர், அழகுக்கலை வல்லுநர், காய்ச்சி இணைப்பவர் (வெல்டிங்), டீசல் இயந்திர இயக்குநர், இருசக்கர மற்றும் முச்சக்கர வண்டி திருத்திநர்,குளிர்சாதன உபகரணங்கள் திருத்துநர், விவசாய இயந்திர மற்றும் முச்சக்கர வண்டி திருத்துநர், பெண்கள் சிறுவர்களுக்கான ஆடை வடிவமைப்பாளர், கணினி வன்பொருள் திருத்துநர், கணினி பட வடிவமைப்பாளர் வீட்டு மின்னிணைப்பாளர், அலுமினியம் பொருத்துநர் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பவியலாளர் ஆகிய கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்தக் கற்கை நெறிகளை கற்க விரும்புபவர்கள் தங்களது விண்ணப்பங்களை நேரடியாகவோ, தபால் மூலமாகவோ மாவட்ட அலுவலகம், முதலாம் மாடி, வீரசிங்கம் மண்டபம் இல.12,கே.கே.எஸ். வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ற–14)

# ஆயுள்வேத இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,ஏப்.15

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் மாதாந்த ஒன்று கூடலும் ஆயுள்வேத இலவச மருத்துவ சேவையும் கடந்த மாதம் 28 ஆம் திகதி சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

சங்கத்தின் தலைவர் பொன்னையா இராசரத்தினம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ். மாவட்ட ஆயுள் வேத வைத்திய அத்தியட்சகர் திருமதி எஸ்.சுமதி ஆகியோருடன், ஆயுள் வேத உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டு ஆயுள் வேத சிகிச்சைகளை வழங்கியிருந்தனர். (ற–14)



கிளிநொச்சி திருநகர் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தினரால் நேற்று கிளநொச்சி நகர்பகுதியில் வளர்ந்திருந்த பாத்தீனியச் செடிகளை சிரமதானம் மூலம் ஒழிக்கும் ஓர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. காலை 6 மணி தொடக்கம் 7.40 மணிவரை நடைபெற்ற இந்த சிரமாதன நிகழ்வில் திருநகர் வடக்கு மக்களும், அயல் கிராம மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# இலக்கிய விருதுக்கான நூல்கள் தெரிவு

யாழ்ப்பாணம்,ஏப்.15

கலாசார அலுவல்கள் இராஜங்க அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் இலங்கைக் கலைக் கழகத்தின் அரச இலக்கியக்குழு ஆகியன ஒன்றிணைந்து வருடந்தோறும் நடத்தும் அரச இலக்கிய விழாவில் வருடத்தின் சிறந்த நூல்களைத் தெரிவு செய்து விருதுகள் வழங்கப்படவுள்ளன.

2015 ஆம் ஆண்டுக்கான விருது வழங்கல் விழாவுக்காக சிங்களம், தமிழ் மொழிகளில் நூல்கள் கோரப்பட்டுள்ளன. 2014 ஆம் ஆண்டு கிளிநொச்சி மாவட்டத்தில் நூல்கள் வெளியிட்ட எழுத்தாளர்கள், கலைஞர்கள் தமது நூல்களை எதிர்வரும் மே மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், அரச இலக்கியக்குழு, கலாசார அலுவல்கள் திணைக்களம், 8 ஆம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

பிரதேச, மாவட்டச் செயலகங்களின் கலாசார பிரிவில் மாதிரி விண்ணப்பப் படிவங்களையும், மேலதிக தகவல்களையும் பெற்றுக் கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசஅதிபர்சிசத்தியசீலன்அறிவித்துள்ளார்.(ற–14)

# மின்னல் தாக்கி இளைஞர் சாவு

கொழும்பு, ஏப். 15

மொனராகலை, சிரிகல பகுதியில் மின்னல் தாக்கி இளைஞர் ஒருவர் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார்.

மின்னல் தாக்கியதில் உயிரிழந்த இளைஞனின் வீடும் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இளைஞனின் சடலம் சிரிகல வைத்தியசாலையில் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பல பாகங்களிலும் இடியுடன் கூடிய மழை பெய்து வருவதால் பொதுமக்கள் பெரிதும் அவதானமாக இருக்க வேண்டும் என வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. (த)

# வருமானம் குறைந்த விவசாயிகளின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில்

யாழ்ப்பாணம்,ஏப்.15

யாழ்.மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் புலமைப் பரிசில் நிதியத்தின் ஊடாக வருமானம் குறைந்த விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த உயர்தரம் கற்கும் மாணவர்களுக்கு தலா 20 ஆயிரம் வீதம் புலமைப்பரிசில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த புலமைப்பரிசிலைப் பெறுபவர்கள், முழுநேர விவசாயக் குடும் பத்தைச் சேர்ந்தவராகவும், பெற் றோரில் ஒருவராவது ஏதாவதொரு யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள கமக்காரர் அமைப்பில் உறுப்பினராகவும் இருப்பதுடன் சமுர்த்தி நிவாரணம் பெறாத குடும்ப அங்கத்தவராகவும் இருத்தல் வேண்டும்.

2013 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. சாதரண தரப் பரீட்சையில் சித்தியடைந்து 2016 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சை எழுதும் மாணவர்கள் இந்தப் புலமைப் பரிசிலுக்கு தகுதியுடையவர் ஆவார்.


தகுதியுடைய விண்ணப்பதாரிகள் தமது எல்லைக்கு உட்பட்ட கமநல சேவைகள் நிலையத்தில் விண்ணப்பப்படிவத்தைப் பெற்று, தத் தமது கமக்கார அமைப்பின் பரிந்துரையுடன் உரிய கமநல சேவைகள் நிலைய கமநல அபிவிருத்தி உத்தியோகத்தரிடம், தமது சுய விவரங்கள் அடங்கிய விண்ணப்ப் படிவத்தை கல்வி கற்கும் பாடசாலை அதிபர், கிராம சேவை உத்தியோகத்தர் ஆகியோரின் பரிந்துரையுடன் ஒப்படைக்க வேண்டும்.

விண்ணப்பதாரிகள் எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னதாக யாழ். மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தில் நேரடியாக விண்ணப்பங்களை ஒப்படைக்குமாறும், மேற்படி திட்டத்தில் வறுமை, குடும்ப நிலை, பிள்ளையின் கல்வித்தரம், மீள்குடியமர்வு என்பன கருத்தில் எடுக்கப்படும் என்றுகமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் இ.நிஷாந்தன் தெரிவித்துள்ளார். (ற–14)

# தாமரைக் கோபுரம் சீன உளவு மையமா?

## இந்தியாவுக்கு வந்தது சந்தேகம்

கொழும்பு, ஏப். 15
இலங்கையில் நிர்மாணிக்கப்பட்டு வரும் தாமரைக் கோபுரம் சீன இலத்திரனியல் உளவு மையம் என இந்தியப் பாதுகாப்பு தந்திரோபாய ஆய்வாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.
சுற்றுலா மற்றும் தொடர்பாடல் மேம்படுத்தல் அபிவிருத்தித் திட்டம் என்ற போர்வையில் சீனா, இந்த உளவு மையத்தை உருவாக்கி வருகின்றது. சீனாவின் இரண்டு பாதுகாப்பு நிறுவனங்களினால் இந்த நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
ஈபிள் கோபுரத்தை விடவும் 26 மீற்றர் உயரமுடைய தாமரைக் கோபுரமானது தெற்காசியாவின் மிக உயர மான கோபுரமாக உருவாக்கப்பட உள்ளது. ஒரு புறத்தில் இந்தியாவையும் மறுபுறத்தில் இந்து சமுத்திரத்தையும் மையப்படுத்தி இந்தக் கோபுரம் நிர்மாணிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.
சீன எக்ஸிம் வங்கியின் நிதி உதவியுடன் இந்தக் கோபுரம் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது என இந்தியப் பாதுகாப்பு தந்திரோபாய ஆலோசகர் ஹஸ்கர் ரோய் தெரிவித்துள்ளார்.
இந்த கோபுரம் நிர்மாணிக்கப்பட்டால் இந்தியாவினதும், தெற்காசியாவினதும் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் என எச்சரிக்கை விடுத்துள்ளார். (த)



# 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வர்த்தகர்கள் மீது நடவடிக்கை

கொழும்பு, ஏப்.15
குற்றச் செயல்களில் ஈடுபட்ட 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
கடந்த ஜனவரி மாதம் முதல் மார்ச் மாதம் இறுதி வரையிலான காலப் பகுதியில் இவ்வாறு வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.
நுகர்வோர் விவகார அதிகார சபையின் ஆணையாளர் ரூமி மார்சூக் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.
உரிய தரத்தில் பொருள்களை விற்பனை செய்யாமை, மோசடிகளில் ஈடுபட்டமை, காலாவதியான பொருள்களை விற்பனை செய்தமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் வர்த்தகர்கள் சுற்றி வளைக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
பண்டிகைக் காலத்தில் பொருள்கள் கொள்வனவு செய்யும்போது நுகர்வோர் மிகவும் நிதானத்துடன் இருக்க வேண்டுமென ரூமி மார்சூக் தெரிவித்துள்ளார். (த)

# மீன் ஏற்றுமதித் தடை விரைவில் நீக்கப்படும்

கொழும்பு, ஏப். 15
ஐரோப்பிய நாடுகளுக்கு இலங்கையின் மீன்களை ஏற்றுமதி செய்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை விரைவில் நீக்கப்படும் எனக் கடற்றொழில் அமைச்சு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.
இந்தத் தடையை நீக்குவதற்காக ஐரோப்பிய ஒன்றியத்தினால் பரிந்துரைக்கப்பட்டுள்ள வி.எம்.எஸ். உபகரணங்களை எதிர்வரும் மே மாதத்திற்குள் படகுகளில் பொருத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.
இவ்விடயம் தொடர்பில் வெளிவிவகார அமைச்சும், ஜனாதிபதியும் ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளுடன் நடத்திய பேச்சு வெற்றிகரமாக நிறைவு பெற்றுள்ளது எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.
அத்துடன் குறித்த உபகரணங்களைப் படகுகளில் பொருத்துவதற்கு அமைச்சினால் 3 இலட்சத்து 75 ஆயிரம் ரூபா வீதம் படகு உரிமையாளர்களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.
இதேவேளை, இலங்கைக் கொடியுடன் சீன மீன்பிடிப் படகுகள் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதை நிறுத்தியுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியதுடன், ஐரோப்பிய ஒன்றியத்தினால் முன்வைக்கப்பட்டிருந்த பரிந்துரைகள் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும், இலங்கை மீன்களை ஏற்றுமதி செய்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையும் விரைவில் நீக்கப்படும் எனவும் கூறினார். (த)

# விபத்தில் இருவர் சாவு

மஹியங்கனை – மனம்பிட்டி பிரதான வீதியில் மலியதேவபுர பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.
மோட்டார் சைக்கிள் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாது வீதி ஓரத்தில் இருந்த தூண் ஒன்றில் மோதியதால் இந்த விபத்து நேர்ந்துள்ளது. விபத்தில் மோட்டார் சைக்கிளில் ஓட்டி மற்றும் பின் ஆசனத்தில் இருந்து சென்றவர் ஆகியோரே உயிரிழந்துள்ளனர். (த)

# புதிய அரசில் திருப்தியில்லை

## ரஜீவ விஜேசிங்க தெரிவிப்பு

கொழும்பு, ஏப் 15
புதிய அரசின் நடவடிக்கைகளில் திருப்தி அடைய முடியாது என லிபரல் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரஜீவ விஜேசிங்க தெரிவித்துள்ளார்.
அமைச்சரவை நியமனம் குறித்து ஆரம்பத்தில் பல்வேறு தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் கடைசியில் அந்தத் தீர்மானங்கள் நிறைவேற்றப்படவில்லை. இந்த நிலையிலேயே அரசின் இந்த நடவடிக்கைகள் வெளிப்படைத் தன்மையற்ற வகையில் அமைந்துள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.
அரசின் நடவடிக்கைகள் குறித்து தீர்மானம் எடுக்கும் பொறுப்பு பொது மக்களுக்கு மாத்திரமே உண்டு என அவர் தெரிவித்துள்ளதுடன், ஜனாதிபதியின் அதிகாரங்களைப் பிரதமருக்கு வழங்குவதற்காக மக்கள் இந்த அரசை ஆட்சியில் அமர்த்தவில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.
மேலும் தற்போதைய அரசின் நிதிக் கொள்கைகள் தொடர்பிலும் அதிருப்தி வெளியிட்டுள்ள ரஜீவ விஜேசிங்க, ஊழல் மோசடிகளுக்கு எதிராக நிலையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (த)

# மத்தல ஊடாக 9 மாதங்களில் 30,000 பயணிகளே பயணம்

கொழும்பு, ஏப்.15
இலங்கையின் இரண்டாவது அனைத்துலக விமான நிலையமான மத்தல விமான நிலையத்தின் ஊடாக, கடந்த ஆண்டு ஜனவரி தொடக்கம் செப்ரெம்பர் வரையான 9 மாதங்களில், சுமார் 30 ஆயிரம் பயணிகள் மாத்திரமே பயணம் மேற்கொண்டுள்ளனர்.
பொது நிறுவனங்கள் தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் ஆய்வில் இந்தத் தகவல் தெரியவந்துள்ளது.
2014ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம், செப்ரெம்பர் வரையான காலப் பகுதியில், 13,371 பயணிகள் மாத்திரமே மத்தல விமான நிலையத்துக்கு வந்துள்ளனர். இந்தக் காலப்பகுதியில், 16,712 பயணிகள், மத்தல விமான நிலையம் வழியாகப் புறப்பட்டுச் சென்றுள்ளனர்.
ஆனால் இதே காலப்பகுதியில் இலங்கையின் முதல் அனைத்துலக விமான நிலையமான கட்டுநாயக்க வழியாக, 5.3 மில்லியன் பயணிகள் பயணம் மேற்கொண்டிருந்தனர் என்றும் பொது நிறுவனங்கள் தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த)

# துப்பாக்கிச் சூடு; ஒருவர் காயம்

கொழும்பு, ஏப். 15
ஆனமடு, கோன்வலகந்த குருபொகுணகம பிரதேசத்தில் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டதில் ஒருவர் காயமடைந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
காயமடைந்த 40 வயதுடைய நபர் ஆனமடு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், மேலதிக சிகிச்சைகளுக்காக குருநாகல் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.
தனது மனைவியுடன் புத்தாண்டுக்காகப் பலகாரம் தயாரித்துக் கொண்டிருக்கையில் இந்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
இது குறித்து காயமடைந்தவரின் மனைவி பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கையில்,
தனது கணவருடன் யாரும் தனிப்பட்ட ரீதியில் குரோதம் கொண்டிருக்கவில்லை. குறித்த துப்பாக்கிப் பிரயோகம் காட்டு விலங்குகளை இலக்கு வைத்து வைக்கப்பட்டதாக இருக்கலாம் எனவும் விசாரணைகளின் போது அவர் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஆனமடு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த)

# லொறியால் நசித்து இருவர் கொலை

கொழும்பு, ஏப் .15
பதியதலாவ – கடுபஹர கெஹெல் உல்ல பிரதேசத்தில் லொறியால் நசித்து இருவர் கொலை செய்யப்பட்டுள்ளனர்.
இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்றுள்ளது.
இரு குழுவினருக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தை அடுத்து ஒரு குழுவைச் சேர்ந்த மூவர் மற்றைய குழுவின் மூவரை லொறியால் மோதி இருவரைக் கொலை செய்துள்ளனர் எனக் கூறப்படுகின்றது.
28 மற்றும் 29 வயது இளைஞர்களே உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். காயமடைந்த ஒருவர் மஹியங்கனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ள நிலையில் ஏனைய சந்தேகநபர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுத்து வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (த)


# பேஸ்புக் குறித்து 500 முறைப்பாடு

## 3 மாதங்களில் மட்டும்

கொழும்பு, ஏப். 15
இவ்வருடத்தின் முதல் மூன்று மாதங்களில் பேஸ்புக் தொடர்பில் 500 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக கணினி அவசர அழைப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.
மார்ச் மாதத்தில் மாத்திரம் 200 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகப் பிரிவின் ஊடகப் பேச்சாளர், பாதுகாப்புப் பொறியியலாளர் ரொஷான் சந்திரகுப்த தெரிவித்துள்ளார்.
போலி பேஸ்புக் கணக்கு குறித்தே அதிக முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. ஏனையவர்களின் கணக்குகளை முடக்கித் தரவுகளை மாற்றியமை தொடர்பிலும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.
முறைப்பாடுகள் குறித்து பேஸ்புக் நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார். (த)

# திறந்தவெளி மிருகக் காட்சிச் சாலை விரைவில் பின்னவலயில்திறப்பு

கொழும்பு, ஏப். 15
இலங்கையின் முதலாவது திறந்தவெளி மிருகக்காட்சிச்சாலை எதிர்வரும் 17ம் திகதி பின்னவலயில் திறந்து வைக்கப்படவுள்ளது.
இலங்கையின் சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் நோக்கில் இந்தத் திறந்தவெளி மிருகக்காட்சிச் சாலை திறந்து வைக்கப்படவுள்ளது.
பின்னவல யானைகள் சரணாலயத்துக்கு அண்மையில் அமைந்துள்ள 44 ஏக்கர் நிலப்பகுதியில் இந்தத் திறந்தவெளி மிருகக்காட்சிச் சாலை அமைக்கப்பட்டுள்ளது.
இங்கு சிறுத்தைகள், கரடிகள்– மான்கள்– முதலைகள் உட்பட பல விலங்குகளைக் கண்டு ரசிக்க முடியும்.
இந்தத் திறந்தவெளி மிருகக்காட்சிச்சாலை நிர்மாணத்திற்கு 862 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதுடன், 488 மில்லியன் ரூபா திறைசேரியினால் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** செய்தொழிலில் இருந்துவந்த முட்டுக்கட்டைகள் விலகி முன்னேற்றங்களைக் காண்பீர்கள். உங்கள் விடா முயற்சிக்கு அரிய பலன்கள் கிடைக்க வாய்ப்புகள் உண்டாகும். உங்கள் பேச்சில் நுண்ணறிவு வெளிப்படும்

**இடபம்:** உங்கள் ஞாபகசக்தி அதிகரிக்கும். வீட்டிலும் வெளியிலும் உங்கள் கௌரவமும் அந்தஸ்தும் உயரும். குழந்தைகளை மேற்படிப்புக்காக வெளியூர், வெளிநாடுகளுக்கு அனுப்புவீர்கள்.

**மிதுனம்:** பொதுக் காரியங்களில் தன்னலம் பாராட்டாமல் ஈடுபடுவீர்கள். சிலர் விலையுயர்ந்த வீட்டுப் பிராணிகளை வாங்குவார்கள். அரசுக்கு நீங்கள் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்களைக் குறித்த காலத்திற்குள் சமர்ப்பிக்கவும்.

**கடகம்:** பிறர் தயவுடன் நீங்கள் செய்துவந்த செயல்களை நீங்கள் தன்னிச்சையாகச் முடிக்கக்கூடிய நிலைமைகள் உருவாகும். அதோடு வாக்குக் கொடுத்தால் அதை எப்பாடுபட்டாவது காப்பாற்றி விடுவீர்கள்.

**சிங்கம்:** உங்களின் தெய்வ பக்தி உயரும். பூர்வீகச் சொத்துக்கள் விவாதங்களின்றி கைக்கு வந்து சேரும். சிலர் நீண்ட தூரப்பயணங்களை மேற்கொள்வீர்கள். உங்கள் எதிரிகள் சிதறி ஓடுவார்கள்.

**கன்னி:** உறவினர்கள் நண்பர்களிடம் நெருக்கமாகப் பழகுவீர்கள். பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடித்து வெற்றி பெறுவீர்கள். மேலும் உங்கள் செல்வம் தர்மகாரியங்களுக்கும் பயன்படும்.

**துலாம்:** உழைப்புக் கூடினாலும் அதற்கேற்ற பலன் பன்மடங்காக உயரும். உங்கள் தொழிலில் அதிகாரமும் உயரப் பெறுவீர்கள்.

**விருச்சிகம்:** உங்களின் நீண்டநாளைய ஆசைகள் செயல்வடிவம் பெற்று உங்களைப் புகழின் உச்சிக்கே கொண்டு சென்று விடும். சரியான நேரத்தில் உணவை எடுத்துக் கொள்வீர்கள்.

**தனுசு:** உத்தியோகத்தர்கள் அலுவலக வேலைகளில் முன்கூட்டியே செயல்படுவார்கள். எதிர்பார்த்த பதவி உயர்வும் உங்களைத் தேடி வரும். உங்களின் வேலைகளை பட்டியலிட்டுச் செய்தால் பாராட்டுகளையும் பெறலாம்.

**மகரம்:** மனதிற்கினிய இடமாற்றங்களும் உள்ளூரிலேயே அமையும். வியாபாரிகளுக்கு நினைத்தது நினைத்தபடியே நடக்கும். வியாபாரத்தில் முன்னேற்றத்தைக் காண்பீர்கள்.


**கும்பம்:** உங்கள் செயலில் சுறுசுறுப்பும், அறிவில் திறமையும் பரிமளிக்கும். முக்கியமான பணி ஒன்றை எளிதில் நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரம் செழித்து, அதிக பணவரவு கிடைக்கும்.

**மீனம்:** எத்தகைய கடின வேலைகளையும் மன அழுத்தத்திற்கு உள்ளாகாமல் செய்து முடிக்கவும். உங்களின் செயல்கள் படிப்படியாக வெற்றியைத் தேடித்தரும். மேலிடத்திடம் இணக்கமான உறவைப் பேணுவது நலம் பயக்கும்.




# உலகின் முதல் செல்பி மியூசியம்

பிலிப்பைன்ஸ் நாட்டில் உள்ள மணிலாவை நெட்டிசன்கள் இனி செல்பிக்களின் தலைநகரம் என்றே அழைக்கவுள்ளனர். அந்த அளவுக்கு இதுவரை எந்த அருங்காட்சியகமும் அறிவித்திராத, பார்வையாளர்களை பரவசத்தில் ஆழ்த்தும் அதிரடி அறிவிப்பை வெளியிட்டுள்ளது. இங்கு செல்பி எடுக்கக் கூடாது என்று அறிவிப்புப் போட்டு, உலகின் பல அருங் காட்சியகங்கள் பார்வையாளர்களை மிரட்டி வரும் நிலையில் செல்பி எடுப்பவர்களை வருக.. வருக.. என்று இரு கரம் கூப்பி வரவேற்கிறது மணிலாவின் கலை அருங் காட்சியகம். இதுமட்டுமல்ல அங்கிருக்கும் உலகப்புகழ் பெற்ற ஓவியங்கள் மற்றும் சிற்பங்களின் மீது ஏறி விளையாடலாம் என்பதுதான் இந்த அருங்காட்சியகத்தின் சிறப்பு.



என்ன டிசைனோ ?

# ரிலாக்ஸா வாசியுங்க...



அமெரிக்கன்: முதல் முறையா நாங்க தான் நிலவில் கால் வைச்சோம்.
ஜப்பான்காரன் : நாங்க தான் வியாழனில் கால் வைச்சோம்.
ஜேர்மனியன்: நாங்க தான் செவ்வாயில கால் வைச்சோம்.
அமெரிக்கன் : ஹேய் தமிழா! நீங்கள் எதில கால் வைச்சீங்க?
தமிழன் : நாங்க தான்டா சூரியனிலேயே கால் வைச்சது.
அமெரிக்கன் : டேய் பொய் சொல்லாதீங்க டா. சூரியனுக்கு பக்கத்தில போனாலே நீங்கள் செத்துருவீங்க டா.
தமிழன் : அடிங்ங்ங் கொய்யாலே. நாங்கள் போனது நைட்ல டா. யாருக்கிட்டே ?

## குளிரூட்டி உடை

ஜப்பானைச் சேர்ந்த ஒரு நிறுவனம் உடலுக்குக் குளிரூட்டக்கூடிய உடைகளை விற்பனை செய்து வருகிறது. உடையின் வெளிப்பகுதியில் இருக்கும் விசிறி போன்ற சிஸ்டம் 'எயர் கூலராக செயல்படுகிறது. யு.எஸ்.பி வயர் மூலம் இதற்கான சார்ஜ் ஏற்றிக் கொள்ளலாம்.



# விஜய்க்கு 4 நாயகிகள்



முதல் முறையாக விஜய் படத்தில் நான்கு கதாநாயகிகள் நடிக்கிறார்கள். ஸ்ருதிஹாஸன், ஹன்சிகா, அஞ்சலி.. அடுத்து நந்திதா. படம் புலி! சிம்புதேவன் இயக்கும் இந்தப் படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடந்து வருகிறது. இப்போது ஆந்திராவின் அடர்ந்த காட்டுப் பகுதியில் படப்பிடிப்பு நடந்து வருகிறது.

பிரமாண்டமான தயாரிப்பில் உருவாகிவரும் இப்படத்தில் முதலில் நாயகிகளாக ஒப்பந்தமானவர்கள் ஸ்ருதி ஹாஸன் மற்றும் ஹன்சிகா. இந்த நிலையில் இன்னொரு கதாபாத்திரத்துக்காக நந்திதாவிடம் பேச்சு நடத்தப்பட்டு அவரும் சம்மதம் சொல்லி, புலி படக்குழுவுடன் இணைந்துள்ளார்.

இதுதவிர 'அப்பா டக்கர்' மற்றும் 'மாப்பிள்ளை சிங்கம்' படங்கள் மூலம் தமிழுக்கு மறுபிரவேசம் செய்துள்ள அஞ்சலியிடமும் பேசி வருகிறார்களாம். அஞ்சலி நடிப்பது குறித்து இன்னும் தகவல்கள் உறுதி செய்யப்படவில்லை. அவர் நடிப்பது உறுதியானால், நான்கு நாயகிகளுடன் விஜய் நடிக்கும் முதல் படம் என சொல்லிக் கொள்ளலாம். மறந்தே போச்சு. இந்தப் படத்தில் 5 ஆவது நாயகி ஒருவர் இருக்கிறார். அவர்தான், இத்தனை வயதாகியும் தன்னை ஹீரோயின் என்றே சொல்லிக் கொள்ளும் ஸ்ரீதேவி. படத்தில் ஹீரோவுக்கு இணையான கதாபாத்திரமாகும் அவருக்கு!

# சென்.தோமஸ், உடுப்பிட்டி மகளிர், மெதடிஸ்த வடமராட்சி பெண்கள் கரப்பந்தில் அசத்தல்





கரணவாய், ஏப். 15

வடமராட்சி கல்விவலயப் பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்ட பெண்களுக்கான கரப்பந்தாட்டத் தொடரில் 15வயதுப் பிரிவில் பருத்தித்துறை சென்.தோமஸ் வித்தியாலயமும், 17 வயதுப் பிரிவில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியும் 19 வயதுப் பிரிவில் மெதடிஸ்த பெண்கள்உயர்தரப்பாடசாலையும்வெற்றி பெற்று நடப்பு வருடத்துக்கான வலயச் சம்பியனாக வலம் வந்தன.

கடந்த வியாழக்கிழமை நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டங்களில் 15 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் சென்.தோமஸ் வித்தியாலயமும் உடுப்பிடி மகளிர் கல்லூரியும் மோதின.

இதில் 25:12, 25:15 என்ற புள்ளிகள் அடிப்படையில் சென். தோமஸ் வித்தியாலயம் வெற்றி பெற்றுச் சம்பியனாகியது. மூன்றாமிடத்தைப் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை பெற்றுக்கொண்டது.

தொடர்ந்து இடம்பெற்ற 17 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியும், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலையும்மோதின. இந்த ஆட்டத்தில் 25:23, 25:16 என்ற புள்ளிகளைப் பெற்று 2:0 என்ற நேர் செற்றில் வென்று சம்பியனாகியது உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அணி. மூன்றாமிடத்தை சென். தோமஸ் அணி பெற்றுக் கொண்டது.

இறுதியாக இடம்பெற்ற 19வயதுப் பிரிவுக்கான ஆட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரியும் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியும்மோதின. 3 செற்களைக் கொண்ட இந்த இறுதியாட்டத்தில் 25:08, 25:12 என்று 2:0 என்ற நேர் செற்றில் வெற்றி பெற்று வலயச் சம்பியனாகியது மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை. மூன்றாமிடத்தை நெல்லியடி மத்திய கல்லூரி பெற்றுக்கொண்டது. (த–ரி–108)

## ஞானமுருகனை பந்தாடிய நாவாந்துறை சென்.மேரிஸ்

யாழ்ப்பாணம், ஏப். 15

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் ஏவ்.ஏ கிண்ணத்துக்காக யாழ்.உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கிடையில் நடத்தும் உதைப்பந்தாட்டத் தொடரின் விலகல் ஆட்டமொன்றில் நாவாந்துறை சென்.மேரிஸ் அணி வெற்றி பெற்றுள்ளது.

கடந்தசனிக்கிழமைபாஷையூர்சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் மயிலாங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவாந்துறைசென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த–ரி–23)

## ஆவரங்கால் மத்தி- வசந்தஸ்ரீ இன்று இரவு பலப் பரீட்சை

மூளாய் விக்ரோறி விளையாட்டுக் கழகம் சமீப காலமாக நடத்திய கரப்பந்தாட்ட தொடரின் இறுதியாட்டம் இன்று இரவு 7.30 மணியளவில் குறித்த கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அமரர் சி.ராகவன் நினைவாக நடத்தப்பட்ட இந்த ஞாபகார்த்த தொடரின் இன்றைய இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சண்டிலிப்பாய் வசந்த ஸ்ரீ விளையாட்டுக்கழகம் பலப்பரிட்சைசெய்யவுள்ளமைகுறிப்பிடத்தக்கது. (த–ரி)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஏப். 15

கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 7 பேர் பங்குபற்றும் உதைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள்; கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் சமீபகாலமாக இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் இன்று புதன் கிழமை பி.ப. 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வல்வை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கழுகுகள் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் ரெட் றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்துக் கலைவாணி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த–ரி–23)

## இந்து இளைஞர், வசந்தஸ்ரீ அரியாலையில் மகுடம்

யாழ்ப்பாணம், ஏப். 15

அரியாலையின் 96ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவின் ஓர் அங்கமாக 'ஏ', 'பி' என்று இரு பிரிவாக நடத்தப்பட்ட கரப்பந்தாட்டத் தொடர்களின் இறுதியாட்டத்தில் 'ஏ' பிரிவில் அவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணியும். 'பி' பிரிவில் சண்டிலிப்பாய் வசந்தஸ்ரீ விளையாட்டுக் கழக அணியும் வெற்றிபெற்றுச் சம்பியன் ஆகின.

கடந்த சனிக்கிழமை அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் மின்ஒளியில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் முதலில் இடம்பெற்ற 'ஏ' பிரிவு அணிகளுக்கான இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது. 5 செற்களைக் கொண்ட இந்த இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி 3:2 என்ற செற்கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் ஆனது.

தொடர்ந்து இடம்பெற்ற 'பி' பிரிவு அணிகளுக்கான இறுதியாட்டத்தில் சண்டிலிப்பாய் வசந்தஸ்ரீ விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இளவாலை மத்திய விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. 5 செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தில் சண்டிலிப்பாய் வசந்தஸ்ரீ விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றது. (த–ரி–23)



## இந்தியா– இலங்கை அணிகளினால் தென்னாபிரிக்காவை நெருங்கமுடியாது

சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை டெஸ்ட் அணிக்கான தரப்படுத்தலை அண்மையில் வெளியிட்டது. இதில் இலங்கை ஆறாவது இடத்தையும், இந்தியா ஏழாவது இடத்தையும் பிடித்துள்ளன. டெஸ்ட் அணிகளின் புதிய தரவரிசை பட்டியலில் இலங்கை அணி 98 புள்ளிகளுடன் ஆறாவது இடத்திலும், இந்திய அணி 95 புள்ளிகளுடன் ஏழாவது இடத்திலும்உள்ளன. முதல் ஐந்து இடங்களில் முறையே தென்னாபிரிக்கா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, பாகிஸ்தான், நியூஸிலாந்து, அணிகள் உள்ளன. (த–ரி)

## துர்க்காவை வீழ்த்தியது கந்தரோடை

யாழ்ப்பாணம்,ஏப். 15

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு கந்தரோடை இளைஞர் கழகம், கந்தரோடை விளையாட்டுக்கழகம் ஆகியவை இணைந்து நடத்திய உள்ளூர் அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் கந்தரோடை விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

கடந்த திங்கட்கிழமை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் கந்தரோடை இளைஞர்கழக விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து துர்க்கா விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் கந்தரோடை இளைஞர் கழக விளையாட்டுக் கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த–ரி–23)

## தமிழ் மன்றத்தின் கிண்ணத்தை தனதாக்கியது இந்து இளைஞர்

யாழ்ப்பாணம்.ஏப்.15

கருகம்பனை தமிழ்மன்ற சனசமூக நிலையத்தின் 60ஆவது ஆண்டு நிறைவையும் சித்திரைப் புத்தாண்டையும் முன்னிட்டு கேசவமூர்த்தி ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்காக நடத்தப்பட்ட கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கருகம்பனை தமிழ்மன்ற சனசமூக நிலைய முன்றிலில் மின் ஒளியில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இளவாலை மத்திய விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

5 செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில்ஆவரங்கால்இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற செற்கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியன் ஆனது. சிறந்த வீரனாக ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி வீரன் ஜெனன் தெரிவானார். (த–ரி–23)

## இந்தியாவின் விருப்பத்துக்கு சீனாவும் ஆதரவு

பீஜிங்,ஏப்.15

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் இந்தியா நிரந்தர உறுப்பினராவதற்கு இதுவரை சீனா ஆதரவு அளிக்கவில்லை. இந்த நிலையில், ஐக்கிய நாடுகள் அவையில் பெரும் பங்களிப்பு அளிக்க நினைக்கும் இந்தியாவின் விருப்பத்துக்கு ஆதரவு அளிப்போம் என்று சீனா தெரிவித்துள்ளது.

சர்வதேச விவகாரங்களில், வளர்ந்து வரும் நாடான இந்தியாவின் பங்களிப்புக்கு நாங்கள் மிகுந்த முக்கியத்துவத்துவம் அளிக்கிறோம். மேலும், ஐக்கிய நாடுகள் சபை உட்பட பன்னாட்டு அமைப்புகளில் மிகப்பெரும் பங்காற்ற நினைக்கும் இந்தியாவின் விருப்பத்தைச் சீனா புரிந்து கொண்டு அதற்கு ஆதரவு அளிக்கும் என்று சீன வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் ஹாங் லீ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பினராக உள்ள ஐந்து நாடுகளில் சீனா மட்டுமே இந்தியா நிரந்தர உறுப்பினராவதற்கு ஆதரவு தெரிவித்திருக்கவில்லை. மீதமுள்ள நான்கு நாடுகளான அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் இந்தியா நிரந்தர உறுப்பு நாடாக ஆதரவு தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (15)

## திருமண உதவித்தொகைக்கு சவுதி அரசு புதிய நிபந்தனை

ரியாத்,ஏப்.15

செல்வ வளமை மிக்க சவுதி அரேபியாவில் திருமணம் செய்து கொள்ள விரும்பும் இளைஞர்கள், பெண்களுக்கு சீதனத்தொகை மற்றும் தங்க நகைகளை வழங்க வேண்டும். அதனை வழங்க முடியாமல் சற்றுக் கஷ்டமான சூழ்நிலையில் இருப்பவர்களின் திருமணச் செலவுக்கு தேவையான தொகையை சவுதி அரசின் சமூக நலத்துறை அமைச்சகம் வழங்கி வருகின்றது.

அந்த அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் சமூக மேம்பாட்டு துறைக்கு சவுதியில் உள்ள 21 தொண்டு நிறுவனங்கள் அதற்கான பரிந்துரைகளை அனுப்பி வைக்கின்றன. மணமகனின் குடும்பச் சூழல், குணநலன், நன்னடத்தை ஆகியவற்றின் அடிப்படையில் அந்தப் பரிந்துரைகளை ஆய்வு செய்யும் அரச அதிகாரிகள், தகுதிக்குரிய இளைஞர்களுக்கு திருமண உதவித்தொகையை இதுவரை வழங்கி வந்தனர்.

இந்த நிலையில், அந்த உதவித் தொகையைப் பெற விரும்புவர்கள், ஐந்து வேளையும் தவறாமல் தொழுகை நடத்துபவரா? என அவர்கள் வசிக்கும் பகுதியில் இருக்கும் மசூதியின் தலைவரிடம் சான்றிதழ் பெற்று விண்ணப்பிக்க வேண்டும் எனத் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கான சான்றிதழை வழங்கும் அதிகாரம் மசூதியின் தலைவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், சம்பந்தப்பட்ட மசூதிகளுக்கு விண்ணப்பதாரர் வேளை தவறாமல் சென்று தொழுகை நடத்துகின்றாரா? என அதிகாரிகள் அவ்வப்போது ஆய்வு செய்வார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (14)

# அநாதைச் சிறுவர்கள் நைஜீரியாவில் அதிகம்



அபுஜா, ஏப்.15

நைஜீரியாவில் போகோ ஹராம் தீவிரவாதிகள் நடத்தி வரும் தாக்குதல் சம்வங்களால் அநாதைகளாகும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக யுனிசெப் தெரிவித்துள்ளது.

நைஜீரியாவில் ஆதிக்கம் கொண்டுள்ள போகோ ஹராம் தீவிரவாதிகள் நடத்தி வரும் தாக்குதல் சம்பவங்களால் உயிரைக் காப்பாற்றிக்கொள்வதற்காக அங்கு வாழும் சிறுவர்கள் வெவ்வேறு பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து செல்கின்றனர். இதுவரை சுமார் 8 லட்சம் சிறுவர்கள் தமது வீடுகளைவிட்டு பலவந்தமாக வெளியேற வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது என்று யுனிசெப் அமைப்புத் தெரிவித்துள்ளது.


போகோ ஹராமின் வன்முறையிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக அந்தச் சிறுவர்கள் எல்லைகளைக் கடந்து சாட், நைஜர், மற்றும் கமருன் ஆகிய நாடுகளுக்கு செல்கின்றனர். மேலும், அநாதையாக்கப்பட்ட குழந்தைகள் பாலியல் வன்புணர்வு, கடத்தல், வலுக்கட்டாயத் திருமணங்கள், வலுக்கட்டாய உழைப்பு ஆகியவற்றில் ஈடுபடுத்தப்படுவதும் கடுமையாக அதிகரித்துள்ளது எனவும் யுனிசெப் தெரிவித்துள்ளது. (14)

## ஆபத்தின் பிடியில் அமெரிக்கா

அமெரிக்காவை எரித்துச் சாம்பலாக்குவோம் என மிரட்டி ஐ.எஸ் தீவிரவாதிகள் வெளியிட்டுள்ள புதிய வீடியோக் காட்சி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அண்மையில் ஐ.எஸ் தீவிரவாதிகள் தங்களது இணையதளத்தில் அமெரிக்காவுக்கு எதிரான வீடியோக் காட்சி ஒன்றை வெளியிட்டுள்ளனர். சுமார் 11 நிமிடங்கள் ஓடும் அந்த வீடியோக் காட்சியில்,உலகம்முழுவதும்உள்ள அமெரிக்கர்களுக்கு இனித் துளியும் பாதுகாப்பு இருக்காது என்றும் அமெரிக்காவில் உள்ள தீவிரவாதிகள் அவர்களுக்கு எதிரான தாக்குதலை தொடருங்கள் எனவும் அழைப்பு விடுத்துள்ளனர்.

அமெரிக்கர்களின் மனதில் பயத்தை விதைக்கப்போராட்டத்தைதொடங்கியுள்ளதாக கூறிய தீவிரவாதிகள், அமெரிக்காவின் இரட்டைக் கோபுர தாக்குதல் போன்று மற்றொரு தாக்குதலைவிரைவில்நடத்துவோம்எனவும் மிரட்டல் விடுத்துள்ளனர்.(14)

## தங்க அரண்மனையில் இளவரசரின் திருமணம்





பண்டர் செரி பெகவன், ஏப்.15

புருனேய் நாட்டின் மன்னர் தனது மகனின் திருமணத்தை தங்கத்தால் இழைக்கப்பட்ட அரண்மனையில், ஆடம்பரமாக நடத்தி உலகையே வியப்பில் ஆழ்த்தியுள்ளார்.

உலகப் பணக்கார குடும்பங்களில் ஒன்றான புருனேய் நாட்டு மன்னர், தனது 6 ஆவது மகனான அப்துல் மாலிக் என்பவருக்குத் திருமணம் நிச்சயித்திருந்தார். அதனைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் புருனேய் தலைநகரில் உள்ள அரண்மனையில், உலகமே வியக்கும் வகையில் ஆடம்பரமாக அந்தத் திருமணம் நடைபெற்றுள்ளது.

தங்கத்தால் இழைக்கப்பட்ட அரண்மனையின் மையத்தில் வைக்கப்பட்டிருந்த விசேட நாற்காலிகளை நோக்கி மணமக்கள் நடந்து வரு கின்றனர். மணமக்கள் இருவரும் அணிந்திருந்த திருமண ஆடைகள், அங்கு கூடியிருந்த அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. தங்க ஆபரணங்களால் இளவரசரின் ஆடைகள் வடிவமைக்கப்பட்டிருந்தன. மேலும் வைரம், வைடூரியம், இரத்தினக்கற்கள்,உள்ளிட்ட விலைமதிப்பற்ற ஆபரணங்களுடன் மணமகளும் அரங்குக்குள் வந்தார். மணமகள் அணிந்திருந்த வைரத்தால் செதுக்கப்பட்ட காலணிகள், காதணிகள் மற்றும் தங்க கொலுசுகள், விருந்தினர்களின் மனதைக் கொள்ளை அடிக்கும் விதமாக இருந்தது. அந்தத் திருமண வைபவத்துக்கு மலேசியா நாட்டைச் சேர்ந்த அமைச்சர்கள், அரேபிய நாட்டு ஆளுநர் உள்ளிட்ட உலக முக்கிய தலைவர்கள் மற்றும் பணக்காரர்களும் பங்கேற்றனர். மேலும் அந்த அரண்மனையில் உள்ள சுமார் ஆயிரத்து 788 அறைகளும் தங்கத்தால் இழைக்கப்பட்டு விருந்தினர்கள் தங்குவதற்கான வசதிகள் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இத்தாலியில் படகு கவிழ்ந்து 9 பேர் சாவு; 144 பேர் மீட்பு



ரோம், ஏப்.15

ஐரோப்பிய ஒன்றியத்துக்கு ஏராளமானோர் சட்ட விரோதமாக குடியேற வருவதற்கும், அவ்வாறு வரும்போது (சிறிய படகில் பலர் வருவதால்) விபத்துக்குள்ளாகி உயிரிழப்பதற்கும் அட்லாண்டிக் கடலை ஒட்டியிருக்கும் மத்திய தரைக் கடல் சாட்சியாக இருந்து வருகிறது.

அந்த வகையில் அண்மையில் 150 இற்கும் மேற்பட்ட பயணிகளுடன் இத்தாலிக்கு வந்துகொண்டிருந்த படகு மத்திய தரைக்கடலில் மூழ்கி விபத்துக்குள்ளானது. அதில் பயணித்த 144 பேரை இத்தாலிய கடலோர காவல்படையினர் பாதுகாப்பாக மீட்டுள்ளனர். அந்த விபத்தில் உயிரிழந்த 9 பேரின் உடல்களையும் மீட்டுள்ளனர். படகில் பயணித்தவர்கள் எண்ணிக்கை சரிவரத் தெரியாததால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது.

இந்த வருடத்தின் தொடக்கத்திலிருந்து கடந்த வாரம் வரை மத்திய தரைக்கடலில் இருந்து 2 ஆயிரத்து 782 பேரை மீட்டுள்ளதாக இத்தாலிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கடந்த வருடம் மட்டும் 2 லட்சத்து 20 ஆயிரம் பேர் மத்திய தரைக்கடல் வழியாக ஐரோப்பாவுக்குள் நுழைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (14)

## சீனாவில் பனிப்பொழிவு இயல்பு வாழ்க்கை பாதிப்பு




பீஜிங், ஏப்.15

சீனாவில் பருவம் தவறிவந்த பனிப்பொழிவினால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதித்துள்ளது. சுமார் 15 செ.மீ. வரை பெய்த பனிப்பொழிவால் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. 7 முதல் 10 டிகிரி செல்சியஸ் வரை வெப்பநிலை நிலவுவதால் அதிகப்படியான குளிர் வாட்டி வருகிறது. அடுத்து வரும் நாள்களில் மேலும் குளிர் அதிகரிக்கலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

உறை நிலை பூஜ்ஜியத்திற்கும் குறைவாக செல்ல வாய்ப்பு இருப்பதாகவும் வானிலை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். சீனாவில் தெற்குப் பகுதியிலும் மழை பெய்து வருகிறது. பனிப்பொழிவு காரணமாக ஜெர்ரி மரங்களில் மொட்டுக்கள் மலரத் தொடங்கியுள்ளதால் அந்த நகரமே ரம்மியமாகக் காட்சியளிக்கிறது. (14)

# மும்பையில் மீண்டும் தாக்குதல் திட்டம்

மும்பை, ஏப்.15



மும்பையில் கடந்த 2008 ஆம் ஆண்டு பாகிஸ்தானில் இயங்கும் லஷ்கர்இதொய்பா தீவிரவாதிகள் 10 பேர் கடல் வழியாக ஊடுருவி வந்து பயங்கரத் தாக்குதல்களை நடத்தினர். அந்தச் சம்பவத்தின்போது 166 பேர் உயிரிழந்தனர்.

மும்பையில் மீண்டும் அதே போன்று தாக்குதலை நடத்தப்போவதாக கடந்த வருடம் லஷ்கர்இதொய்பா தீவிரவாதிகள் அறிவித்திருந்தனர். அதனைத் தொடர்ந்து நாடெங்கும் உள்ள கடலோரப் பகுதிகளில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. அதனால் பாகிஸ்தான் தீவிரவாதிகளின் ஊடுருவல் முயற்சிகள் பல தடவை முறியடிக்கப்பட்டன.

தற்போது 8 முதல் 10 தற்கொலை தீவிரவாதிகள் கடல் வழியாக ஊடுருவித் தாக்குதல் நடத்தப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாக உளவுத்துறை கண்டு பிடித்துள்ளது. அந்த 10 தீவிரவாதிகளையும் கடல் வழியாக மும்பைக்குள் ஊடுருவ வைக்கும் முயற்சிகளில் அந்தத் தீவிரவாத அமைப்பினர் ஈடுபட்டுள்ளனர். அடுத்த 3 மாதங்களுக்குள் எந்த நேரத்திலும் மும்பையில் தாக்குதல் நடத்தப்படலாம் என்று உளவுத்துறை தெரிவித்துள்ளது. (14)

# தூய்மை இந்தியா திட்டத்துக்கு 62 ஆயிரம் கோடி ரூபா நிதி

## மத்திய அரசு தகவல்

டில்லி,ஏப்.15




"தூய்மை இந்தியா" எனும் திட்டம் 62 ஆயிரம் கோடி ரூபா நிதி ஒதுக்கீட்டில் நிறைவேற்றப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மகாத்மா காந்தியின் 150 ஆவது பிறந்தநாள் விழாவையொட்டி பிரதமர் மோடியால் கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் தூய்மை இந்தியா என்ற திட்டம் தொடக்கி வைக்கப்பட்டது. அதன்படி நாட்டில் உள்ள 4 ஆயிரத்துக்கும் அதிகமான நகரங்கள் மற்றும் சிறு நகரங்களில் அந்தத் திட்டம் நடைமுறைக்கு வந்தது. அந்தத் திட்டத்தின்கீழ் அடுத்த 5 வருடங்களில் நாடு முழுவதிலும், 1 கோடியே 4 லட்சம் வீடுகளில் கழிவறைகள் கட்டுவதற்கு மத்திய நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகம் இலக்கு நிர்ணயித்துள்ளது. அதே போன்று, 2.51 லட்சம் சமூகக் கழிவறைகளும், 2.55 லட்சம் பொதுக்கழிவறைகளும் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதன் மூலம் அடுத்த 5 வருடங்களில் நகரப்புறங்களில் வசிக்கும் 37 கோடி மக்கள் பயனடைவர். அந்தத்திட்டத்தை முழுமையாக நிறைவேற்றுவதற்கு 62 ஆயிரத்து 9 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும். கடந்த நிதி ஆண்டில் அந்தத் திட்டத்துக்காக அனைத்து மாநிலங்கள் மற்றும் உப பிரதேசங்களுக்கு 700 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. நடப்பு நிதியாண்டில் அந்தத் திட்டத்துக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

தூய்மை இந்தியா திட்டத்தை நிறைவேற்றுவதில் மற்ற மாநிலங்களை விட குஜராத் மாநிலம் முன்னோடியாகத்திகழ்கிறது. நாடு முழுவதிலும் கடந்த வருடம் 2 லட்சத்து 70 ஆயிரம்வீடுகளில்கழிவறைகள்கட்டப்பட்டதில் குஜராத் மாநிலத்தில் மட்டும் 1 லட்சத்து 65 ஆயிரத்து 60 கழிவறைகள் கட்டப்பட்டுள்ளன என மத்திய நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகம் தகவல் தெரிவித்துள்ளது. (14)

# பாரவூர்திகளை பற்களால் இழுத்து அசத்திய நபர்




ராஞ்சி,ஏப்.15

ஜார்க்கண்ட் தலைநகரான ராஞ்சியில் உள்ள மொராபாடி திடலில் ஒன்றாக இணைக்கப்பட்டிருந்த மூன்று பாரவூர்திகளைப் பிணைத்திருந்த கயிற்றைத் தமது வாயால் இழுத்துத் தனது பற்களால் கயிற்றைக் கட்டி இழுத்து 100 அடி தூரத்துக்கு நகர்த்திக் காட்டி ஒருவர் சாதனை நிகழ்த்தியுள்ளார்.

3 பாரவூர்திகளும் ஒன்றோடொன்று சங்கிலியால் இணைக்கப்பட்டிருந்தன. முன்னால் நின்ற பாரவூர்தியில் நீண்ட கயிறு கட்டப்பட்டிருந்தது. அந்தக் கயிற்றைப் பல்லால் கடித்தபடி ராஜேந்திர குமார் என்பவர் இழுத்துச் சாதனை படைத்துள்ளார்.

அதனை வேடிக்கை பார்க்கத் திரண்டிருந்த மக்கள் கைகளைத் தட்டி ஆரவாரம் செய்தனர். அந்த உற்சாகத்தில் அவர் தொடர்ந்து வேகமாக இழுக்க ஆரம்பித்தார். மெல்ல நகரத் தொடங்கிய 3 பாரவூர்திகளும், சுமார் 100 அடி தூரத்தைத் தாண்டின. அவரை மக்கள் தொடர்ந்து உற்சாகப்படுத்தினாலும் அவரால் 100 அடி தூரத்துக்கே பாரவூர்திகளை நகர்த்த முடிந்தது. (14)

# தமிழக தொழிலாளர்கள் சுட்டுக்கொலை உண்மையைக் கண்டறியுமாறு உத்தரவு

டில்லி,ஏப்.15

கடந்த வாரம் ஆந்திராவின் சேஷாசல வனப்பகுதியில், தமிழ்நாட்டைச் சேர்ந்த அப்பாவித் தொழிலாளர்கள் 20 பேர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் இரு மாநிலங்களிலும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. அந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து தமிழக முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடுவுக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார். அந்தக் கடிதத்தில் அவர், இந்தப் பிரச்சினையில், நம்பத்தகுந்த, விரைவான விசாரணை நடத்த வேண்டும் எனக் கேட்டிருந்தார்.

சம்பவத்தில் இறந்தவர்கள், அனைவரும் சட்டவிரோத செயல்பாடுகளில் ஈடுபட்டிருந்ததற்கான வாய்ப்பு இருந்திருந்தாலும், இவ்வளவு பேர் இறந்திருப்பதைப் பார்க்கும் போது, அதிரடிப்படையினரின் நடவடிக்கைகள் அனைத்தும் கட்டுப்பாட்டுடன் தான் நடந்தனவா என்பது சந்தேகத்தை எழுப்புவதாக அமைந்துள்ளது. மனித உரிமைகள் மீறப்பட்டிருந்தால், குற்றவாளிகள் மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு இழப்பீடு அளிக்க வேண்டும் என தமிழக முதல்வர் வலியுறுத்தியிருந்தார்.

அந்த கடிதத்துக்கு பதில் அளித்துள்ள சந்திரபாபு நாயுடு உடல்களை உடற்கூற்றுப் பரிசோதனை செய்ய உத்தரவிட்டதுடன், உண்மைகளை அறிந்து கொள்ள, ஆந்திரப் பிரதேச மாநில அரசுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது. அந்த விசாரணை, தாமதமின்றி நடத்தி முடிக்கப்படும். அதன் பேரில் மேல் நடவடிக்கையும் எடுக் கப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (14)

# சேர்ந்து வாழ்ந்தால் சொத்தில் பங்குண்டு

## உச்சநீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு

டில்லி,ஏப்.15

திருமணம்ஆகாமல்சேர்ந்துவாழும் இருவரில் ஆண் துணைவரின் சொத்தில் பெண்ணுக்கும் பங்கு உண்டு என்று அதிரடியான தீர்ப்பை உச்சநீதிமன்றம் வழங்கியுள்ளது.

திருமணம் செய்து கொள்ளாமல் நீண்ட நாள்களாக சேர்ந்து வாழ்பவர்களைத் தம்பதியர்களாக அங்கீகரித்து தொடர்ச்சியான தீர்ப்புகளை உச்சநீதிமன்றம் வழங்கி வருகிறது. அந்த வரிசையில் வழக்கு ஒன்றை விசாரித்த உச்சநீதிமன்றம் அந்தத் தீர்ப்பை அளித்துள்ளது. நீண்ட காலமாக திருமணம் செய்து கொள்ளாமல் சேர்ந்து வாழ்பவர்களைத் தம்பதிகளாக அங்கீகரிக்கும் அதே நேரத்தில், அந்த உறவு சட்டவிரோதமானது என குற்றம்சாட்டுபவர்கள் அதை நிரூபிக்க வேண்டும் எனவும் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

திருமணம் ஆகாத இருவர் கள்ள உறவு வைத்துக் கொள்வதை விடச் சேர்ந்து வாழ்வதை தாங்கள் திருமணமாக அங்கீகரிப்பதாகவும், அதே சமயம் நீண்ட காலமாக சேர்ந்து வாழ்ந்ததற்கான ஆதாரங்களை சம்பந்தப்பட்டவர்களில் ஒருவர் நீதிமன்றத்தில் நிரூபிக்க வேண்டும் என்றும் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (14)

# நாக பாம்புடன் இளைஞருக்கு திருமணம்

பூல்பூர்.ஏப்.15

உத்தரப்பிரதேசத்தில் நாக பாம்பொன்றுடன்இளைஞரொருவருக்கு நடக்கவிருந்தவிநோதத்திருமணம் பொலிஸாரின் தலையீட்டால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

உ.பி.யின் மத்தியப் பகுதியில் உள்ள பூல்பூர் நகரில் இருந்து சுமார் 40 கி.மீ. தொலைவில் பத்வாபூர் என்ற கிராமம் உள்ளது. அங்குள்ள சிவன் ஆலயத்தில் கடந்த வாரம் சுற்றுவட்டார கிராம மக்கள் ஆயிரக்கணக்கில் கூடியிருந்தனர்.

அது வழக்கமான திருமணமாக இல்லாமல், மணப்பெண்ணாக நாகபாம்பொன்று கொண்டுவரப்பட்டிருந்ததால் அங்கு பரபரப்பு நிலவியது. பண்டிதர் ஒருவரும் அருகில் அமர்ந்து வேத மந்திரம் ஓத, பாம்பு ஒன்றுக்கு இளைஞன் தாலி கட்டும் நேரத்தில் அங்கு வந்த பொலிஸார் திருமணத்தைத்தடுத்து நிறுத்தியுள்ளனர்.



பத்வாபூரில் வசித்த சந்தீப் என்பவர் தான்மனிதனாக மாறியுள்ள இச்சாதாரி பாம்பு என்று கூறி வந்துள்ளார். அதனால் கிராம மக்கள் அவரை இச்சாதாரி என்றே அழைத்து வந்துள்ளனர். இதனிடையே சந்தீப் அங்குள்ள சிவன் ஆலயத்தில் தான் ஒரு பெண் நாகத்தைச் சந்தித்ததாகவும், அது முற்பிறவியில் தனக்கு ஜோடியாக இருந்ததை நினைவூட்டியதாகவும் கூறியுள்ளார். மேலும் அதே பெண் நாகத்தை அந்த சிவன் ஆலயத்தில் வைத்து திருமணம் செய்துகொள்ளப் போவதாகவும் தெரிவித்திருந்தார். தெரிவித்தபடியே நேற்று திருமணம் ஏற்பாடாகியிருந்தது. கிராம மக்கள் அனைவரும் திருமணத்தைக் காணக் கூடியிருந்தனர். ஆனாலும் பொலிஸார் அந்தத் திருமணத்தை தடுத்து நிறுத்தியுள்ளனர். குறித்த இளைஞன் உளநலம் பாதிக்கப்பட்டவர் என விசாரணைகளின் பின்னர் தெரியவந்தது. (14)

# வெளியுறவு அமைச்சர்கள் சந்திப்பு

மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ், கொரிய தீபகற்பத்தில் அமைதி மற்றும் நிலைதன்மை ஆகியவற்றின் முக்கியத்துவம் குறித்து கொரிய வெளியுறவுத் துறை அமைச்சர் ரீ சூ யாங்கிடம் வலியுறுத்திப் பேசியதுடன், இந்தியாவின் பாதுகாப்புக் குறித்தும் விரிவாக எடுத்துரைத்துள்ளார். கொரியாவின் கூடுதல் மனிதாபிமான உதவி தேவை என்ற கோரிக்கையை, சாதகமான முறையில் பரிசீலிப்போம் என இந்தியாவுக்கு வருகை தந்துள்ள யாங்கிடம், சுவராஜ் உறுதி அளித்துள்ளார்.

வட கொரியா மீது ஐ.நா. மற்றும் மேற்கத்திய நாடுகளின் கடுமையான பொருளாதார மற்றும் பிற சலுகைகள் மீதான நெருக்கடி தரும் சூழலில், வட கொரியாவுடனான நட்புறவை மீண்டும் பரிசீலனை செய்வதற்கான வாய்ப்பொன்றை இந்தியாவுக்கு அந்தச் சந்திப்பு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. பல்வேறு நாடுகள் முயற்சி கள் மேற்கொண்டாலும், பலமுறை அணுசக்தி சோதனைகளை நடத்தியுள்ள வடகொரியாவின் ஆழமான நோக்கங்களைக் கட்டுப்படுத்த சர்வதேச நாடுகளால் முடியவில்லை. அதனால் வட கொரியா மீது, வங்கி, பயணம் மற்றும் வர்த்தகம் ஆகியவற்றில் கடுமையான முறையில் சர்வதேச தடை விதிக்கப்பட்டு அந்த நாடு சர்வதேச அளவில் தனிமைப் படுத்தப்பட்டு உள்ளது போன்ற பிரதிபலிப்பு ஏற்பட்டு விட்டது. பாகிஸ்தானுக்கு வட கொரியா ஏவுகணைகளை விநியோகம் செய்வது குறித்தும் இந்தியா கருத்தில் கொண்டுள்ளது. (14)



# உங்கள் வேலை பாதுகாப்பாக உள்ளதா? இருக்கின்றன 10 வழிகள்

ச.ஶ்ரீராம்

இன்று இருக்கும் போட்டியில் வேலையைத் தக்கவைத்துக் கொள்வது பெரிய விடயமாக உள்ளது. வியாபாரம் எப்போதெல்லாம் தொய்கின்றதோ, அப்போதெல்லாம் ஊழியர்களை வேலையிலிருந்து அனுப்புவது வழக்கமான விடயமாக மாறிவிட்டது. இது மாதிரியான சூழ்நிலையில் நீங்கள் செய்துவரும் வேலைக்குத் தேவைப்படும் திறமைகளைவிட உங்களிடம் அதிகமாக இருந்தால்தான், நீங்கள் அந்த வேலையில் தொடர்ந்து இருக்க முடியும். உங்கள் வேலை உங்களுக்கு தொடர்ந்து பாதுகாப்பு அளிக்குமா, அதற்கேற்ற திறன் உங்களிடம் இருக்கிறதா என்பதை அறிய 10 வழிகள் உள்ளன.

நீங்கள் வேலையைச் சரியாகச் செய்தாலும் கடைசி ஆறு மாதங்களில் உங்களின் வேலை சம்பந்தமான புதிய திறன்களையும், புதிய விடயங்களையும் கற்றுக்கொண்டுள்ளீர்களா எனப் பாருங்கள்; அது உங்களை அலுவலகத்தில் முன்மாதிரியாகக் காட்டும். ஆறு மாதங்களுக்கு ஒருமுறை ஏதாவது ஒரு புதிய விடயத்தைத் தெரிந்துகொண்டு அதனை அலுவலக வேலையில் காட்டுங்கள். அது உங்களது பணி உயர்வுக்கும், வேலைப் பாதுகாப்புக்கும் உதவியாக இருக்கும்.

உங்களுக்கென ஒதுக்கப்பட்டிருக்கும் வேலையை மட்டும் செய்யாமல் உங்கள் நிறுவனத்தின் வளர்ச்சிக்கான மற்ற வேலைகளிலும் ஆர்வமாகப் பங்கெடுக்கிறீர்களா என்று பாருங்கள். இதுவரை அப்படி எதுவும் இல்லை என்றால் உடனடியாக முயற்சி செய்யுங்கள். உதாரணமாக, உங்களுக்கு நிகழ்ச்சிகளை ஒருங்கிணைக்கத் தெரியும் எனில், உங்கள் நிறுவனத்தில் உங்கள் பிரிவு நடத்தும் நிகழ்ச்சிகளுக்கு ஒருங்கிணைப்பாளராக இருங்கள். நீங்கள் உற்பத்திப் பிரிவில் வேலை செய்கிறீர்கள், ஆனால் சந்தைப்படுத்துதல் உங்களுக்கு நன்றாக வரும் எனில், அந்தப் பிரிவுக்கான ஆலோசனைகளை வழங்கலாம். இதுபோன்ற திறன் உள்ளவர்களுக்கு ஆட்குறைப்பு சமயத்தில் பாதிப்பு ஏற்படாது.

உங்களுக்கான வேலை என்றாலும் அந்த வேலையை நீங்கள் எவ்வளவு சிறப்பாகச் செய்கிறீர்கள் என்பதுதான் முக்கியமானது. சென்ற வருடம் நீங்கள் என்ன வேலை செய்துள்ளீர்கள், அதனால் நிறுவனத்துக்கு என்ன நன்மை ஏற்பட்டு இருக்கிறது, உங்களது பங்களிப்பு அதிகரித்துள்ளதா எனப் பாருங்கள். அப்படி அதிகரித்துள்ளது எனில், உங்கள் வேலை பாதுகாப்பாக இருக்கிறது என்று அர்த்தம். அதேபோல் உங்கள் பொறுப்புகளும், உங்களது வேலைப்பளுவும் அதிகரித்திருக்க வேண்டும். அப்போதுதான் உங்களது வேலைத்திறன் மேம்படும்.

உங்கள் நிறுவனத்தில் நீங்கள் எந்த நிலையில் இருந்தாலும் நிறுவனம் எடுக்கும் முக்கிய முடிவுகள் என்பது அனைவரது கருத்துகளுக்கும் உட்பட்டதாகத்தான் இருக்கும். அப்படி இருக்கும்போது உங்கள் நிறுவனம், வளர்ச்சிக்காக எடுக்கும் முடிவுகள் துவங்கி உங்கள் பிரிவின் வேலை வரை அனைத்து முடிவுகளிலும் நீங்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறீர்களா என்பதைப் பாருங்கள். உங்கள் முடிவுகள் தெளிவாக இருந்து, அது ஏற்றுக்கொள்ளப்படும் பட்சத்தில் உங்கள் உயர் அதிகாரிகளுக்கு உங்கள் மேல் ஒரு நல்ல அபிப்பிராயம் ஏற்படும். அது உங்கள் வேலையைப் பாதுகாக்கும் காரணியாக அமையும்.

உங்கள் குழுவில் ஒருவர் ஒரு நல்ல கருத்தை முன்வைக்கும் போது இது நடைமுறை சாத்தியமல்ல; உங்களால் இது முடியாது என்பது போன்ற வார்த்தைகளை நீங்கள் பயன்படுத்துகிறீர்களா? இல்லை என்றால் நல்லது. ஏனெனில் ஒரு குழுவில் அடுத்த தலைமைப் பதவிக்கு யாரை தேர்ந்தெடுக்கலாம் என நிறுவனம் யோசிக்கும்போது மற்றவர்களின் கருத்தை கேட்டு அதில் உள்ள நிறை, குறைகளை அலசுபவரைத்தான் நிறுவனம் விரும்பும். ஆரம்பிக்கும்போதே முடியாது என்று கூறாமல் இருப்பது உங்களை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்வதாக இருக்கும்.

அலுவலகத்தில் உங்களுடன் பணிபுரியும் சக ஊழியர் உங்களுடன் எப்படிப் பழகுகிறார் என்பதை நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். சக ஊழியருடன் எந்தவிதமான பிரச்சினையும் இல்லையெனில் உங்கள் வேலை சிறப்பாக அமைவதோடு, எந்தவித இடையூறுமின்றி வேலையைத் தொடர முடியும். ஆனால், சக பணியாளருடன் ஏதாவது பிரச்சினையெனில் உங்களால் சரியாக வேலையில் கவனம் செலுத்த முடியாது. அதனால் உங்கள் வேலைத்திறன் குறையும். இது உங்கள் வேலை பாதுகாப்பைக் குறைக்கும். அதனால் சக ஊழியர்களுடன் பிணக்குகளைத் தவிர்ப்பது நல்லது.

சம்பள உயர்வு என்பது அனைவருக்குமே அவரவர் வேலை செய்யும் அளவைப் பொறுத்ததுதான். உங்கள் சம்பள உயர்வு என்பது உங்கள் அலுவலகத்தில் உள்ளவர்களின் சராசரி சம்பள உயர்வளவுக்கு மேல் இருந்தால், உங்கள் வேலை மிகவும் பாதுகாப்பாக உள்ளது என்றும், மிகக் குறைவாக உள்ளது அல்லது உயர்வே இல்லையெனில் உங்கள் வேலை பாதுகாப்பானதாக இல்லை எனலாம்.

நீங்கள் பணிபுரியும் நிறுவனத்தில் உங்கள் பிரிவு முக்கியமான பிரிவா அல்லது அலுவலக வளர்ச்சிக்கு உதவும் ஒரு சார்புப் பிரிவா அல்லது நிறுவனத்தில் அதிகப் பங்களிப்பு அளிக்காத பிரிவா என்பதைப் பாருங்கள். ஒருவேளை உங்கள் பிரிவு இனி இயங்காது என்ற அறிவிப்பு வந்தால், உங்கள் வேலைக்கான ஆதாரம் என்னவாக இருக்கும் என்பதைப் பாருங்கள், உங்கள் நிறுவனத்தில் மற்றப் பிரிவுகளில் உங்கள் வேலையின் முக்கியத்துவம் என்ன, அங்கு உங்களது பங்களிப்பு எப்படி இருக்கும் என்பதைப் பார்த்துக் கொள்ளுங்கள்.

உங்கள் நிறுவனம் மற்றும் உங்கள் நிறுவனம் சார்ந்துள்ள துறை இரண்டும் வளர்ச்சிப் பாதையில் உள்ளதா எனக் கவனியுங்கள். உங்கள் நிறுவனம் நல்ல லாபத்தைப் பதிவு செய்கிறதா, தொழில் விரிவாக்கம் சிறப்பாக உள்ளதா எனப்பாருங்கள். இப்படி சிறப்பாக செயல்பட்டு, நிறுவனத்தில் உள்ள செலவுகளையும் சமாளித்து பணியாளர்களுக்கு அதிக சம்பளத்தையும் (துறை சாராசரியைவிட அதிக சம்பளம்) கொடுக்கும் அளவுக்கு உள்ளதெனில் உங்கள் வேலைக்குரிய பாதுகாப்பும் அதிகமாக இருக்கும்.

உங்கள் நிறுவனத்தில் வேலை பார்க்கும் அனைவரது வேலை செய்யும் நேரம், வேலை செய்யும் அளவு, வேலையில் நீங்கள் காட்டும் நேர்த்தியில் ஆரம்பித்து, இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப அனைத்தும் அலுவலக சராசரிக்கு மேல் இருந்தால் கண்டிப்பாக உங்கள் வேலை உங்களுக்குப் பாதுகாப்பாக உள்ளது என்று அர்த்தம்.

# புதிய கூட்டாண்மை அலுவலகத்தில் முதலிட்டுள்ளது ஏசியன் அலையன்ஸ்

சொஃப்ட்லொஜிக் குழுமத்தின் அங்கத்துவ நிறுவனமாக திகழும் ஏசியன் அலையன்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி, தனது பிந்திய முதலீடு தொடர்பான அறிவித்தலை வெளியிட்டுள்ளது. தனது ஆயுள் கூட்டாண்மை அலுவலகத்தை தமது புதிய அலுவலக முகவரிக்கு இடம்மாற்றியுள்ளது.

இந்த புதிய அலுவலகம் இல. 283, ஆர். ஏ. டி. மெல் மாவத்தை, கொழும்பு 03 எனும் முகவரிக்கு இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளது. 2015 ஏப்ரல் 6ஆம் திகதி இந்த இடம்மாற்றம் செய்யப்பட்டிருந்தது. புதிய முகவரியில் அமைந்துள்ள அலுவலகம் முற்றாக மெருகேற்றம் செய்யப்பட்டு, நவீன வசதிகளைக் கொண்டதாக மாற்றியமைக்கப்பட்டிருந்ததுடன், ஏசியன் அலையன்ஸ் வர்த்தக நாமத்தைக் குறிக்கும் வகையில் கொள்ளுப்பிட்டி நகரில் அமைந்துள்ள அலுவலகம் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

இந்த இடம்மாற்றத்தின் மூலமாக, ஏசியன் அலையன்ஸ் வர்த்தக நாமம் பெற்றுள்ள சிறந்த வர்த்தக பெறுபேறுகள் உறுதி செய்யப்பட்டிருந்ததுடன், அதிகளவு ஊக்குவிக்கப்பட்ட மற்றும் அர்ப்பணிப்பான செயலணியைக் கொண்டும், பொருத்தமான தீர்வுகள் மற்றும் புத்தமைவாக தகவல் தொழில்நுட்ப உள்ளம்சங்களையும் கொண்டு பெறுமதி வாய்ந்த வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவைகளை வழங்கக்கூடிய வகையில் அமைந்துள்ளது. காப்புறுதி துறையில் 5ஆம் இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ள ஆயுள் காப்புறுதி பிரிவின் புதிய தலைமை அலுவலகமாக இது அமைந்துள்ளது. பொதுக்காப்புறுதிப் பிரிவைத் தனது முழுமையானதுணை நிறுவனமாக தாபித்துள்ளதுடன், இலங்கையின் காப்புறுதித் துறையில் புதிய புரட்சிகளையும் ஏற்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

இந்தப் புதிய அலுவலகத்தை ஏசியன் அலையன்ஸ் இன்சூரன்ஸ்



பிஎல்சி நிறுவனத்தின் தலைவர் அசோக் பத்திரகே அவர்கள் பிரதம அதிதியாக கலந்து கொண்டு, வைபவ ரீதியாக அங்குரார்ப்பணம் செய்திருந்ததுடன், இவர் சொஃப்ட்லொஜிக் குழுமத்தின் தலைவராகவும் செயலாற்றி வருகிறார். இந்த நிகழ்வில் பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள், பெறுமதி வாய்ந்த வாடிக்கையாளர்கள், சிரேஷ்ட முகாமைத்துவ அங்கத்தவர்கள் மற்றும் பெருமளவான நலன் விரும்பிகள் என பலரும் பங்குபற்றியிருந்தனர்.

ஏசியன் அலையன்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் இஃப்திகார் அஹமட் கருத்து தெரிவிக்கையில், புதிய அலுவலகம் மற்றும் சொத்துக்களில் முதலீடுகளை மேற்கொண்டுள்ளதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். இதன் மூலம் மத்திய கால அடிப்படையில் உறுதியான பெறுபேறுகளை எய்த முடியும் எனக் கருதுகிறோம்.

மேலும், உறுதியான வர்த்தக நாம பிரசன்னத்தின் மூலமாக, எமது புத்தமைவாக ஆயுள் காப்புறுதித் தீர்வுகளுக்கு சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்திருக்கும் என நாம் கருதுவதுடன், துறையில் காணப்படும் சிறந்த ஆயுள் செயலணியினருக்கு சிறந்த ஊக்குவிப்பாக அமைந்திருக்கும் என்றார்.

சொஃப்ட்லொஜிக் குழுமத்தின் அங்கத்துவ நிறுவனமாகவும், சொஃப்ட்லொஜிக் கெப்பிட்டல் பிஎல்சி நிறுவனத்தின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் நிறுவனமாக ஏசியன் அலையன்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி திகழ்கிறது. சொஃப்ட்லொஜிக் குழுமத்தின் என்பது இலங்கையின் பரந்த மற்றும் வேகமாக வளர்ந்து வரும் பன்முக வியாபாரங்களில் ஒன்றாக திகழ்கிறது. சுகாதாரத்துறை, விற்பனை, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், ஓய்வுநேரம், வாகனங்கள் மற்றும் நிதிச்சேவைகள் போன்றன இந்த குழுமத்தின் ஏசியன் அலையன்ஸ் வழங்கப்படும் சேவைகளில் உள்ளடங்கியுள்ளன. கம்பனியின் பங்குதாரர்களில், எப்.எம்.ஓ மற்றும் டி.ஈ.ஜி போன்றன உள்ளடங்கியுள்ளன. இவை ஏஏஏ தரப்படுத்தலை பெற்ற நெதர்லாந்து மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளைச் சேர்ந்த அபிவிருத்தி நிதித்தாபனங்களாக திகழ்கின்றன. (த)

# வாசகர் திருமுகம்



## தரம் பார்க்கத் தெரிந்தவரை நியமி

"எங்களையும் ஒருக்கால் எட்டிப் பாருங்கோ" வாசகர் திருமுகத்துக்கு உடனடியாக பயன் கிடைத்தது. அச்சா ராங்கொன்று அழகாகப்பூட்டி பச்சைத்தண்ணீருக்கான பலனும் கிடைத்துள்ளது. எம்மவர்கள் சார்பில் ஏழையின் நன்றிகள் எங்கள் உதயனுக்கு.

ஆனால் உதயனுக்கு ஒரு வார்த்தை உறைக்க எழுதுகிறேன். எழுத்துப் பிழைகளை ஏற்றுக் கொண்டுள்ளேன். சொற் பிழைகளுக்கு, கொலைகளுக்கு சொறி சொன்னாலும் ஏற்கேன். அன்று உன் பத்திரிகையில் கொலை என்ற சொல்லை கொலம்பிரித்து நீ காலை என எழுதி கடுப்பேற்றி விட்டாய். நீ எழுதுவதை போடுவதைத்தான் நாம் வாசிக்க வேண்டும். அது உன் தலைக் கனம். இது எம் தலைவிதி எனலாம். ஆனால்... மரக்கறி விலை பற்றி மனம் நொந்து எழுதி மலர் மலராய்ப் பார்த்தேன். மகேஷ் அண்ணா காலத்தின் கவிதைத் தெரிவிற்கும் இப்போ நீபோடும் கவிதைகளுக்கும்? சான்று காட்டத்தயாராய் உள்ளேன். வேதனை வேதனை, ஒரே கவிதையை ஒரு பெயரில் ஒரே மலரில் இரு இடங்களில் ஒருமுறை அல்ல இரு முறைகள் போட்டாயே? அவரில் உள்ள பாசமா? அல்லது...?அந்த இடங்களிற்கு எம்போன்ற பேயர்களின் கவிதைகள் இரண்டு மூன்றை அடுக்கியிருக்கலாம். விமர்சனம் ஒன்றை விசிறியிருந்தாய். விளாசினார்கள் சிலர். வாங்கியும் கட்டினாய். என் கவிதையைக்கூட எடுத்தியம்பியிருந்தாய் "மாகரத்து யானை ... சூகரத்துக் கஞ்சியோ கெல்" என்ற நாலடியாரின் நற்கூற்று என்னை நா கா என்று விட்டது. எல்லோரையும் போல எழுதவேண்டும், பாட வேண்டும், மேடை வேண்டும் என்று இரந்து திரிபவன் இவன் அல்ல. அதற்கு என்தாய்விடவும் மாட்டாள்.

தனி நாடு கேட்கவில்லை அண்ணனுக்கு கிடப்பதை...... என்ற அழகான கவிதையை குப்பைக்குள் தள்ளிவிட்டு இதே கருத்தைத் தாங்கிய உங்களின் பந்தங்களின் கட்டுரைக்கு பாரிய பக்க மொதுக்கி படைத்திருந்தாய். பட்டறிவைச் சொல்கிறேன். முத்தாய் மணியாய் சுருக்கி எழுதினால் முழுப் பேரும் படிப்பர். சொத்தாகப் பேணுவர். அலம்பி எழுதினால் அத்தனையும் சாமான், மீன் சுற்றத்தான் போகும். சரியோ பிழையோ சற்று சிந்தி. மரக்கறி செய்வோர் மாண்டு போகின்றனர். மீண்டெழச் செய்யவல்ல என் கவிதையை குப்பைக் கூடைக்குள் தோண்டிப்பார். வேலைக்கு விளம்பரம் ஒன்று செய்துள்ளாய். தமிழ் தெரிந்த, பொருள் புரிந்தவரைத் தயவு செய்து தேர்ந்து எடு, உனக்கு தெரிந்தவரை அல்ல, எம் தமிழ் வளர, எந்தன் அபிமான உதயன் வளர.

சற்று விழி! உற்றுப்பார். தரம்பார்க்கத் தெரிந்தவரை நியமி. வாழ்க வளர்க.

*அன்பு வாசகன் கவிமணி அன்னைதாஸன் ஊரெழு*

## பச்சிலை பாலை ஆகுமா?

எமது பச்சிலைப் பள்ளிப் பிரதேசமானது மிகவும் செழிப்பு மிக்க பிரதேசமாகும். வயல் வெளிகளும், தென்னை, பனை மற்றும் பல இயற்கைத் தாவரங்களும் இங்கு காணப்படுகின்றன. எழில் கொஞ்சும் கிளிநொச்சிமாவட்டத்தில் இது அமைந்து உள்ளது. இங்கு மக்கள் அனைவரும் மகிழ்ச்சியாகவும் ஒற்றுமையாகவும் வாழ்ந்து வருகின்றனர்.

ஆனால் எமது பிரதேசத்தில் வண்ணாங்கேனி வடக்குப் பிரதேசத்துக்கு இறுதி எல்லையாக சிறிய காடு ஒன்று காணப்படுகிறது. இதனை

அழித்து காணி இல்லாதவர்களுக்கு காணியை வழங்கும் திட்டம் ஒன்றை முன் எடுத்துள்ளனர். இத்திட்டத்தால் பலதரப்பட்டவர்கள் நன்மை அடைவார்கள்.

இதேவேளை இப்பிரதேசத்தில் வாழும் மக்கள் குடிதண்ணீர்ப் பிரச்சினையை எதிர் கொண்டு வருகின்றனர். கிணறுகளில் உள்ள நீரானது காவி நிறத்தில் காட்சி அளிக்கிறது. இதற்கு நிலத்தடி நீர் மட்டம் குறைவடைதலே காரணம் ஆகும். எனவே இக்காட்டை அழிப்பதனால் மழைவீழ்ச்சி குறைவடைவதுடன் நிலத்தடி நீரும், இங்கு வாழும் அரிய பல விலங்குகளும் பாதிப்புக்குள்ளாகப் போகின்றன. அழித்த மீதிக்காட்டில் மரங்களை வளர்த்துக் காட்டையும் எதிர்காலச் சந்ததியையும் பாதுகாக்க வேண்டியது எமது பொறுப்பாகும்.

(பச்சிலைக்குபசுமை அளிப்போம்)

*ஏ.மதுசன்.பளை மத்திய கல்லூரி*

கேலிச் சித்திரம்




நன்றி: டெய்லிமிரர்

## வன்முறைகள் நீங்கும் காலம் எப்போது?

நாட்டில் என்றுமில்லாதவாறு இப்போது வன்முறை கலாசாரம் தலைதூக்கி வருகிறது. சிறிய பிரச்சினைகளையெல்லாம் பூதாகரமாக்கி, சர்ச்சைக்குள்ளாக்கி அதன்மூலம் மோதல் களை உருவாக்கி, வன்முறைகளில் ஈடுபடும் போக்கு தற்கால இளைஞர்களிடையே அதிகரித்து வருகிறது.

இதுவரை காலமும் போரினால் பறிக்கப்பட்ட உயிர்கள், இப்போது வன்முறைகளால் பறிக்கப்படுவது கவலைக்குரியதொன்று. போர் முடிவடைந்து ஆறு ஆண்டுகள் கடந்துள்ள போதும் நாட்டில் ஒரு ஸ்திரமான சூழல் ஏற்படுத்தப்படவில்லை. ஆட்சிக்கு வந்த புதிய அரசும் தமக்கிடையேயான பிரச்சினைகளை கையாள்வதில் அதிக கவனம் செலுத்துகின்றதே தவிர, நாட்டு மக்களின் பிரச்சினைகளில் அக்கறைப் பட்டுக் கொள்வதாக இல்லை.

சட்டவிரோத மதுப் பாவனை, போதைப்பொருள், கஞ்சா ஆகியவற்றின் பாவனை இப்போது இளைஞர்களிடையே வெகுவாக அதிகரித்து வருகிறது. அதிலும் குறிப்பாக பாடசாலை மாணவர்களிடையே நன்கு திட்டமிட்டு இந்தப் போதைப் பொருள் பாவனை ஊக்குவிக்கப்பட்டு வருகிறது.' எதிர்கால இளைஞர் சமுதாயத்தை திட்டமிட்டு, தீய வழியில் இட்டுச் செல்வதற்காக சில சமூக விரோத சக்திகள் இந்தத் தீய செயலில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன. பிரபல பாடசாலைகளுக்கு அருகில் சர்வசாதாரணமாக உலாவரும் இந்தப் போதை வியாபாரிகள் மாணவர்களுக்கு அவற்றை விற்பனை செய்து, வருகின்றனர். மாணவர்களும் மிக வேகமாக இந்தப் போதைப் பாவனைக்கு அடிமையாகி, தமது கல்வியின் மீதான கவனத்தை இழந்து வன்முறை எண்ணம் கொண்டவர்களாக கோஷ்டி மோதல்களிலும், அராஜகச் செயல்களிலும் ஈடுபட்டுவருவதை அடிக்கடி ஊடகங்கள் வாயிலாக அறிய முடிகிறது.

மிகவும் கவலைக்குரிய விடயம், தமிழர் தாயகப் பகுதிகளிலும் இந்த வன்முறைக் கலாசாரம், போதைப் பொருள் பாவனை என்பன அளவுகடந்து பெருகி உள்ளமைதான். ஒழுக்கத்திலும் கட்டுப்பாட்டிலும் பெயர்போன தமிழர்கள் இப்போது, அவற்றை படிப்படியாக மறந்துவருவது குறித்து சமூக ஆர்வலர்கள் பலரும் கவலை வெளியிட்டுள்ளனர். குறிப்பாக குடாநாட்டு மாணவர் சமூகத்தின் கல்வியின் மீதான கவனத்தை திசை திருப்பி, எதிர்கால சந்ததியை பலவீனப்படுத்துவதற்காக சில தீய சக்திகள் வடக்குக் கிழக்கிலும் போதைப்பொருள் வியாபாரத்தை மும்முரமாக்கியுள்ளதுடன், வன்முறை கலாசாரத்தை நோக்கி மாணவர்களைத் தூண்டிவிடுவதிலும் ஈடுபட்டுள்ளனர்.

இதுவரை காலமும் போரினால் அழிவுக்குள்ளான எம் இனம் இப்போது போதைப்பொருள், கஞ்சா ஆகிய ஆயுதங்களால் அழிவுக்குள்ளாகும் ஆபத்தான நிலையை எதிர்கொண்டு வருகின்றது.

அண்மைக் காலமாக குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டு வருகின்றது. இந்தியாவில் இருந்து, சட்டவிரோதமான முறையில் கடல் மார்க்கமாக பெரும் தொகையில் இந்தக் கஞ்சா கொண்டுவரப்படுவதாக கூறப்படுகிறது. இந்தக் கஞ்சாக் கடத்தலின் பின்னணியில் சில சக்திகள் திட்டமிட்டுச் செயற்பட்டுவருவதாகக் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. தொழிலில் ஈடுபடும் மீனவர்களின் படகுகளைப் பயன்படுத்தி, அந்த மீனவர்களுக்கு பெருந்தொகைப் பணத்தை வழங்கி, இந்தக் கஞ்சாக் கடத்தில் மேற்கொள்ளும் நடவடிக்கையில் குழுவொன்று ஈடுபட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. மாணவர் மத்தியில் இவற்றை விற்பனை செய்வதற்காகவே இது கொண்டுவரப்படுவதாகவும் கூறப்படுகிறது. கடந்த சில தினங்களாக யாழ்.நகரிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் கஞ்சாவுடன் கைதாவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

போதைப்பொருள், கஞ்சா ஆகிவற்றை பாவிப்பவர்கள் அவற்றினால் ஏற்படும் போதை காரணமாக வன்செயல்களில் இறங்குகிறார்கள். குடாநாட்டிலும் இப்போது இதுதான் நடைபெறுகிறது. கட்டுமீறிப் போய்க்கொண்டிருக்கும் இந்தத் தீய செயலை உடனடியாக் கட்டுப்படுத்தி, எமது இளம் சமூகத்தை எதிர்கால சந்ததியின் சிறந்த சிற்பிகளாக உருவாக்க வேண்டிய தேவையும் அவசியமும் அனைத்து மட்டங்களிலும் எழுந்துள்ளன.

எனவே, இந்தப் போதைப்பொருள் கடத்தல், விற்பனையில் ஈடுபடுவோருக்கு கடுமையான தண்டனைகள் வழங்கப்பட வேண்டும். அத்துடன் இந்த விடயத்தை மிகப் பாரதூரமானதாகக் கருதி, பொலிஸார் தமது நடவடிக்கைகளை துரிதமாக்கி, இதன் சூத்திர தாரிகளைக் கைது செய்ய வேண்டும்.

சமூக அக்கறை யுள்ள வர்கள் இது குறித்து ஒருமித்து குரல் எழுப்பி, விழிப்பு ணர்வை ஏற்படுத்த வேண்டும். இதில் தாமதம் காட்டப்பட்டால், விளைவுகள் விபரீதம் ஆகும் என்பதில் ஐயமில்லை.

பத்தி எழுத்து

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## மக்கள் மனம் கோணின் ஆட்சி மாற்றம் நிச்சயம்

நாட்டின் இன்றைய ஜனாதிபதி, பிற்காலத்தில் வரக்கூடிய ஜனாதிபதிகள் அல்லது அதேபோன்ற அதிகாரங்கள் மற்றும் மரியாதைகளுக்குரிய பிரமுகர்கள் பின்பற்ற வேண்டும் என்பதற்காக இல்லாவிட்டாலும், விரும்பினால் அவர்கள் பின்பற்றக் கூடிய நல்ல சில நடைமுறைகளை முன்மாதிரியாக நிலை நிறுத்தி வருகிறார்.

அரசியலில் இறங்குபவர்களுக்கு எப்பொழுதும் எங்கும் எதிரிகள் தோன்றுவது உண்டு. என்னதான் நாட்டுக்கு நல்லதைச் செய்ய எத்தனித்தாலும் முட்டுக் கட்டைகள் போடுகிறவர்களும், இரகசியமாக சதி முயற்சிகளில் இறங்குபவர்களும் தாராளமாகவே முளைத்து விடுகிறார்கள். இதற்கு அடிப்படையிலான காரணம் போட்டி மனப்பான்மை மட்டுமல்ல, பொறாமைக் குணமும் தான்.

ஆனால் ஓர் அகோரமான ஆட்சியாளரை வீட்டுக்கு அனுப்புவதில் மிக முனைப்பாகச் செயற்பட்டு, பதவிக்கு வந்தவரான மைத்திரிபால சிறிசேன, அந்தப் பதவியின் மூலம் கிடைத்த வரப்பிரசாதங்களை தேவைக்கு அதிகமாகப் பயன்படுத்திக்கொள்ள விரும்பவில்லை. ஒரு நோக்கத்துக்காகக் களம் இறங்கிய அவர் பதவிக்கு வந்த அன்றே, தாம் இந்த ஒரு தடவைக்கு மேல் அந்தப் பதவியை நாடப் போவதில்லை என்று அறிவித்திருந்தார். இந்தப் பதவிக் காலத்தில் அவர் திட்டமிட்டுள்ள நல்ல காரியங்கள் அனைத்தும் நிறைவேறுவதற்கு இந்த நாட்டில் வாழும் நல்ல மனங்கள் யாவும் ஆசி கூறி நிற்கின்றன எனலாம்.

படாடோபத்தில் அக்கறை இல்லாத ஜனாதிபதி, தமது நடையுடை பாவனைகளில் மிக எளிமையைக் கடைப்பிடித்து வருவதுடன், வெளிநாட்டுப் பயணங்களின் போதும் அந்தக் கொள்கையை, தப்பாது பின்பற்றி வருவது கவனிக்கத் தக்கது. அதனால் வெளிநாட்டுப் பிரமுகர்கள் மத்தியிலும் அவருக்கு கௌரவம் கிடைக்கின்றது. அந்தக் கௌரவம் தாய் நாட்டுக்குக் கிடைத்த கௌரவமாகக் கருதப்பட வேண்டும்.

அதிகாரிகளோ அல்லது பொது மக்களோ, தம்மை அதிகௌரவ என்றழைப்பதை விரும்பாத ஜனாதிபதி, தமது பாரியாரை முதல் பெண்மணி என்று குறிப்பிட வேண்டாம் என்றும் கேட்டிருந்தார்.

இப்பொழுது இன்னொரு விடயம் வெளிவந்திருக்கிறது. பொலன்னறுவை ராஜகீய வித்தியாலயத்தில் கிராம சேவகர்கள் மகாநாடொன்றில் உரை நிகழ்த்திய ஜனாதிபதி, தமது எளிமையான ஆரம்ப கால வாழ்க்கையையும் நினைவு கூர்ந்தார்.

பொலன்னறுவை மாவட்டத்தில் ஒரு கிராம சேவகராகவே வாழ்க்கையை ஆரம்பித்தார். அது ஓர் இரண்டு வருட காலம் தான். பின்னர் கூட்டுறவு ஊழியராகப் பணி புரிந்தார். அதன் பின் ஒரு கல்வி அதிகாரியாகச் செயற்பட்டார். விதியின் விளைவால் அந்தப் பதவியிலிருந்தும் விலக நேர்ந்ததாகக் கூறிய ஜனாதிபதி, அந்த விதியே இன்று தம்மை ஜனாதிபதிப் பதவியில் அமர்த்தியுள்ளதாகக் கூற முற்படவில்லை.

கிராம சேவகர் பணியைப் பற்றி அவர் குறிப்பிட்ட போது, பொது மக்களுடன் நெருங்கிய உறவைப் பேணுவதற்கும், மக்களின் பிரச்சினைகளைப் புரிந்துகொள்வதற்கும் இந்தப் பதவி உதவி புரிகிறது என்றார். தமது தந்தையார் கிராமசேவகர் முறை அறிமுகப்படுத்தப்பட்ட 1962 ஆம் ஆண்டு வரை கிராமத் தலைவராக பதவி வகித்த அவருக்கு கிராமத்தில் வாழந்த ஒவ்வொருவரையும் தெரிந்திருந்ததாம். மக்களுக்கிடையில் ஏற்படும் தகராறுகளை வெறுப்பு விருப்பின்றித் தீர்த்து வைப்பார். அதனால் மக்கள் நீதிமன்றங்களை நாடிச் செல்வது குறைவாக இருந்தது என்று முந்தைய நிலையை எடுத்துரைத்தார்.

எனக்கு மூன்று பிள்ளைகள். அவர்கள் தேர்தலில் நின்றால் எதிர்க் கட்சி என்றாலும் வெற்றி பெறுவார்கள். ஆனால் அவர்கள் எவரையுமோ எனது சகோதரர்களையோ தேர்தலில் போட்டியிடுவதற்கு அனுமதிக்கப் போவதில்லை - என்று தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி.

கடந்த காலங்களில் அமரர் டி.எஸ்.சேனநாயக்க காலத்திலிருந்து அதிகாரத்திலிருந்தவர்களில் பலரும், தமது பிள்ளைகளையும் நெருங்கிய உறவினர்களையும் அரசியலில் இறக்குவதை ஒரு பாரம்பரியமாகக் கொண்டிருந்தார்கள். அந்த வகையில் முன்னாள் ஜனாதிபதியின் காலத்தில் அரசியலில் மட்டுமன்றி, முக்கிய அதிகாரப் பதவிகளிலும் முந்தைய ஜனாதிபதியின் சகோதரர்கள், பிள்ளைகள் மற்றும் உறவினர்கள் என்று சகல துறைகளிலும் ராஜபக்ஷக்கள் நிறைந்து காணப்பட்டார்கள்.

வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு முக்கிய பதவிகளுக்கு உறவினர்கள் அனுப்பப்பட்டது மட்டுமல்ல, வெளிநாட்டில் குடியேறியிருந்தவர்கள் பலரும் கூட திருப்பி அழைக்கப்பட்டிருந்தனர். அந்த வகையில் வந்தவர்கள்தான் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் பஸில் ராஜபக்ஷ முதலியவர்கள்.

தமது இரத்த உறவுகளில் மிகப் பலரையும் , அரசுக்குள் இறக்கிய மஹிந்த ராஜபக்ஷவால், ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ள முடியவில்லை. ஏனென்றால், ஆட்சியாளரை பதவியில் அமர்த்துபவர்கள் மக்கள். மக்கள் மனம் கோணும் போது ஆட்சியும் மாறி விடும். இதனை நாட்டின் எதிர்கால ஆட்சியாளர்கள் புரிந்து கொள்ள சிறிசேனவின் செயற்பாடுகள் முன்மாதிரியாக அமைய வேண்டும்.

# இலங்கை அரசியலில் திடீர்த் திருப்பங்கள்

■ மு.தமிழ்மணி

இலங்கை அரசியலில் பெரும் நெருக்கடிகள் உருவாகி குழப்பங்களைத் தோற்றுவித்துள்ளது. அரசு பலமானதா? அல்லது எதிர்க் கட்சி பலமானதா? என்ற வினாவுடன்தான் கடந்த ஜனவரி ஒன்பதாம் திகதி புதிய ஆட்சி ஆரம்பமாகியது.

தேசிய அரசு என்ற போர்வையில் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி மைத்திரி தலைமையில் புதிய அமைச்சரவையும் உருவாக்கப்பட்டு நூறுநாள் வேலைத் திட்டங்களும் ஆரம்பமாகி தொண்ணூறு நாள்களும் கடந்து விட்ட நிலையில் புதிய ஆட்சியில் குழப்பங்களும் நெருக்கடிகளும், குத்துவெட்டுக்களும், குழி பறிப்புகளும், காழ்ப்புணர்வுகளும் தான் மிஞ்சி நிற்கின்றன.

இன்றைய ஜனாதிபதியான மைத்திரி அரசில், ரணில் விக்கிரம சிங்க பதவியேற்றுக் கொண்டது எதிர்பாராத சூழ்நிலையிலாகும். ஐக்கிய தேசியக் கட்சிக்குள் குழப்பங்களை ஏற்படுத்திக் கொண்டிருந்த முன்னாள் ஜனாதிபதியின் புதல்வரான சுஜித் பிரேமதாச குழுவையும் இணைத்துக் கொண்டு ஐக்கிய சுதந்திரக் கூட்டமைப்பைச் சேர்ந்த மைத்திரி–சந்திரிக்கா ஆகியோருக்கு வேண்டிய உறுப்பினர்களையும் கொண்டதாகவே தேசிய அரசு என்ற பெயரிலான மைத்திரிஅரசு அமைந்துள்ளது.

ஆரம்ப காலத்தில் மைத்திரி அரசின் நூறுநாள் வேலைத் திட்டமானது வேகமாகவே நகர்ந்தது. ஜனவரி இருபத்தொன்பதாம் நாள் மக்களுக்குப் பயனளிக்கும் இணைந்திருந்த மக்களால் வெறுத்தொதுக்கப்பட்ட சிலரும் மைத்திரி அரசில் சேர்ந்து கொண்டனர். இதனால் தேசிய அரசா? நலலாட்சிக்குரிய அரசா...? என்ற கேள்விகளை மக்கள் இன்று முன் வைத்துள்ளனர். மைத்திரி ஆட்சி தேசிய அரசோ நல்லாட்சி ஏற்படுத்துகின்ற அரசோ இல்லை. மாறாக குழப்பவாதிகள் கொண்ட நூறு நாள் வேலைத் திட்டத்துக்கு முட்டுக் கட்டை போடுகின்ற அரசு என்ற நிலைக்கு வந்து விட்டது என்று மக்கள் எண்ணத் தலைப்பட்டுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பானது இன்று இரண்டு பிரிவினரைக் கொண்டுள்ளது. மஹிந்தவுக்கு ஆதரவு தெரிவித்து வருகின்ற பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரு குழுவாகவும், ஜனாதிபதி மைத்



திரிக்குச் சார்பானவர்கள் ஒரு குழுவாகவும் இயங்கி வருகின்றனர். மஹிந்தவைப் பிரதமர் பதவி வேட்பாளராக நிறுத்த வேண்டும் என கூறுபவர்களால் அழுத்தத்தையும் நெருக்கடிகளையும் சந்தித்து வருகின்ற மைத்திரி அரிசினால் சென்ற ஏழாம் திகதி நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட திறைசேரி உண்டியல் மூலம் பணம் பெற்றுக் கொள்ளும் பிரேரணை எதிர்க் கட்சிகளால் தோற்கடிக்கப்பட்டுள்ளது. இதனால் புதிய அரசு ஆட்டங்காணவும் செய்துள்ளது. மைத்திரிஅரசும் அதிர்ச்சிக்குள்ளானது. அரசுக்கு ஆதரவாக முப்பத்தியொரு வாக்குகளும் எதிராக ஐம்பத்திரண்டு வாக்குகளும் கிடைத்திருந்தன. அரசினது முக்கிய யோசனையான 400 பில்லியன் ரூபா பணம் பெற்றுக்கொள்ளும் நோக்கில் திறைசேரிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளும் அரசின் திட்டத்தை நிதி அமைச்சரே நாடாளுமன்றத்தில் முன்வைத்திருந்தார். அன்றைய வாக்கெடுப்பில் நிதி அமைச்சரும் பிரதமரும் சபையில் இல்லாதிருந்ததும் தேசிய அரசுக்கு ஆதரவு வழங்கிக்கொண்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சி சுதந்திரக் கட்சி மற்றும் ஏனைய சிறு கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முழுமையாக விவாதத்தில் பங்குபற்றாமல் போனதும் ஏன்? என்ற கேள்வியும் எழுகின்றது.

இந்த நிலையில் இன்னமும் ஒரு வாரத்தினுள் அரசியலில் திடீர் திருப்பங்கள், திகில் நெருக்கடிகள், அதிர்ச்சிகள் என்பன உருவாகுவதற்கான வாய்ப்புக்களே காணப்படுகின்றன. ■

பலவீனமான ஐக்கிய தேசியக் கட்சி இருபது வருடங்கள் வரையில் குழப்பங்கள் நெருக்கடிகள், அடிதடி சண்டைகளைச் சந்தித்திருந்தது. பதவிப் போட்டி, அதிகாரப் போட்டி என்பனவும் அதிகரித்திருந்தன. அதன் தலைவரான தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கட்சித்தலைவராகவே தொடர்ந்து இருந்து வரும் நிலையில் கட்சிக்குள் ஏற்பட்ட சகல பிரச்சினைகளையும் மஹிந்த அரசுடன் இணங்கிப் போய் சமாதானமான முறையில் ஐக்கிய தேசியக் கட்சியை தமது பிடிக்குள் வைத்துக் கொண்ட பெருமை ரணிலுக்குண்டு.

ஜனாதிபதித் தேர்தலில் இரண்டு தடவை வெற்றி பெற முடியாத நிலையிலும் இரண்டு தடவை போட்டியிட முடியாத நிலையிலும், ரணில் விக்கிரமசிங்கவினால் ஐக்கிய தேசியக் கட்சியையும், வேலைத் திட்டங்களையும் அடிமட்ட மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கு முடியவில்லை. மஹிந்த ஆட்சியின்போது விலைவாசி உயர்வு, மின் கட்டண உயர்வு ஆகியனவற்றுக்கு எதிராக நடத்தப்பட்ட போராட்டங்களைக் கூட கண் துடைப்புக்காகவே ரணில் நடத்தினாரே தவிர இவற்றில் வெற்றியைப் பெற்றுக்கொடுக்க முடியவில்லை. இருபது ஆண்டுகாலப் பகுதியில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல், மாகாணசபைத் தேர்தல், உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சி போட்டியிருந்தாலும் தோல்விகளையே சந்தித்திருந்தது. அதே போன்று ஜனாதிபதித் தேர்தலிலும் ஐக்கிய தேசியக் கட்சி தனித்துப் போட்டியிட்டிருந்தால் படுதோல்வியே ஏற்பட்டிருக்கும்.

மஹிந்த ராஜபக்ஷவின் அரசில் வகையில் வரவு – செலவுத்திட்டம் கொண்டுவரப்பட்டு அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்வு, சில அத்தியாவசியப் பொருள்களின் விலை குறைப்புக்கள் மற்றும் எரிபொருள் எரிவாயு விலைக் குறைப்பு ஆகியனவற்றால் மக்கள் ஓரளவு நன்மைகளைப் பெற்றுள்ளனர்.

ஜனாதிபதி மைத்திரியும்–பிரதமர் ரணிலும் சேர்ந்து முன்னெடுக்கின்ற நூறுநாள் வேலைத் திட்டத்தில் பாதி வரையில் முழுமையாக நிறைவேற்றப்படவில்லையாயினும் மக்களின் ஆதரவு நூறுநாள் வேலைத் திட்டத்துக்குண்டு.

நூறுநாள் ஆட்சியில் தொண்ணூறு நாள் வரையில் மைத்திரி அரசுக்கு மஹிந்த ராஜபக்ஷவும், சுதந்தரக் கட்சியின்மஹிந்த பிரிவினரும்,இடதுசாரிக்கட்சிகளும் இனவாத அமைப்புகளும் பல கோணங்களில் நெருக்கடிகளை ஏற்படுத்திக் கொண்டிருந்தனர்.

ஜனாதிபதி மைத்திரியின், இன்று வரையிலான தொண்ணூறு நாள் ஆட்சியில் முன்னைநாள் பிரதம நீதியரசரான திருமதி ஷிராணி பண்டாரநாயக்காவுக்கு மீண்டும் அந்தப் பதவி வழங்கப்பட்டது. முன்னாள் இராணுவத் தளபதியான சரத்பொன்சேகா, தான் எதிர்பார்த்திருந்த பதவிக் கனவையும் மைத்திரியின் மூலமாக நிறைவேற்றிக் கொண்டார். பீல்ட் மார்ஷல் என்ற அதி உயர்பதவி அவருக்கு வழங்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டார். மைத்திரி அரசின் அமைச்சரவையில் மேலும் பல அமைச்சர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அமைச்சரவை மேலும் விஸ்தரிக்கப்பட்டது.

மஹிந்த ராஜபக்ஷவின் அரசில்

2015 ஏப்ரல் 15 புதன்கிழமை உதயன்

சண்டே ரைம்ஸ்
கட்டுரையில் இருந்து
■ ரெங்கன்

# உயர் நீதிமன்றத் தீர்ப்பு ஜனாதிபதிக்கு சாதகம்

## தேர்தல் தள்ளிப் போவதை ஐ.தே.க.விரும்பவில்லை

சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் தன்னுடன் ஒத்துப் போகாதவர்களால் ஜனாதிபதி சிறிசேனவுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் எல்லாம் திட்டமிட்டபடி நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு காலதாமதமின்றி பொதுத் தேர்தலை நடத்துவதன் மூலம் தீர்ந்து விடுமா என்பதை மிகமுக்கியமான கேள்வியாக இப்போது அவர் எதிர்கொண்டு வருகிறார். ஒரு பக்கம் அவ்வாறான எதிர்ப்பாளர்களுக்கு தேர்தலில் போட்டியிட சந்தர்ப்பம் கொடுக்காமல் விடலாம் என்று அவர் எண்ணக் கூடும். அவ்வாறு செய்தால் கட்சியின் மூத்த உறுப்பினர்களிடமிருந்து அவர் தனித்துப் போய்விடக் கூடும். இன்னொரு பக்கம் அவ்வாறு போட்டியிடுவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கமாட்டாது என்பதனாலேயே சிலர் மஹிந்த ராஜபக்ஷவின் முகாமுக்குச் சென்றுள்ளனர். ஜனாதிபதித் தேர்தலின் போது சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஊழல்வாதிகள், இலஞ்சம் பெறுபவர்கள் என்று மீண்டும் மீண்டும் குற்றச் சாட்டுகள் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் இந்த அரசு 94 நாள்கள் (ஞாயிறு வரை) பதவியில் இருந்துள்ள நிலையில் குறைந்த அளவிலேயே காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஐ.தே. கட்சியின் இதற்கான மொத்தப் பதில் என்ன வென்றால் சட்டம் தனது வேலையை செய்யும்படி விட்டு விடுவதுதான் என்பதாகத் தெரிகின்றது. சில முக்கிய பிரச்சினைகளில் புலனாய்வுப் பிரிவினர் உறுதியான ஆதாரங்களைக் கண்டு பிடித்துள்ள நிலையிலேயே இவ்வாறான ஒரு நிலைமை தோன்றியுள்ளது. இந்தப் பின்புலத்தில்தான் ராஜபக்ஷ, பிரதமர் பதவிக்கு வேட்பாளராகக் களமிறங்க முனைந்து கொண்டிருக்கிறார். சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இடம் கிடைக்காவிடில் ஒரு புதிய கூட்டணியை அமைப்பது பற்றியும் அவர் ஆலோசித்து வருவதாக விடயம் அறிந்தவர்கள் கூறுகிறார்கள்.

இப்படியான சூழ்நிலையில்தான் ஜனாதிபதி சிறிசேன இன்றைய அரசியல் நிலைமைகள் குறித்த சில கருத்துக்களைப் பகிரங்கமாக வெளியிட்டியிருக்கின்றார். பொலன்னறுவையில் தேசிய கல்விக் கல்லூரி நிகழ்வொன்றில்அவர் உரை நிகழ்த்திய போது அரசமைப்புக்கான 19 ஆவது திருத்தம் ஏப்ரல் 21ஆம் திகதி தாக்கல் செய்யப்படும். அது நிறை வேற்றப்பட்டதும் நாடாளுமன்றம் கலைக்கப்படும் என்று அவர் கூறினார்.

19 ஆவது திருத்தம் நிறைவேறுவதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்காது போனால்என்ன ஆகும் என்பதுபற்றி சிறிசேன எதுவும் கூறவில்லை. 19 ஆவது அரசமைப்பு திருத்தம் நிறைவேற்றப்படும் போதே தேர்தல் திருத்தமும் நிறைவேற்றப்பட வேண்டும் என்று தமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரி வரும்விடயம் கேள்விக் குறியாக இருந்து வருகின்றது. அவ்வாறு இல்லையெனில் இது குறித்த விவாதத்தில் கலந்துகொள்ளப் போவதில்லையென்றும் சிலர் தெரிவித் துள்ளனர்.



**ஐ.தே.கவுக்கு ஏமாற்றம்**

அரசமைப்பில் சேர்த்துக் கொள்வதற்கென 19ஆவது திருத்தம் பிரேரணையில் முன்மொழியப்பட்டிருந்த சில யோசனைகள் அரசமைப்புக்கு மாறானவை. மக்கள் தீர்ப்புக் விடப்பட வேண்டும் என்று உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளமையானது ஐ.தே. கட்சிக்கு ஓர் ஏமாற்றம் தான். நிறைவேற்று அதிகாரம் பிரதமருக்கு வழங்கப்படுவதானது அரசமைப்பின் 3ஆவது அத்தியாயத்துக்கு மாறானது என்று உயர் நீதிமன்றம் கூறியுள்ளது. அவ்வத்தியாயத்தில் இலங்கை குடியரசின் இறைமையானது மக்களிடம் இருக்கின்றது. அதுவேறு எவருக்கும் விட்டுக் கொடுக்கப்பட முடியாதது. இறைமையானது அரசின் அதிகாரம், அடிப்படை உரிமைகள் மற்றும் வாக்குரிமைகளைக் கொண்டிருப்பதாகும் என்று கூறுகின்றது. உயர் நீதிமன்றத்தின் கருத்து இவ்வாறு இருக்கும்அதேநேரம்பிரதமர்ரணில் விக்கிரமசிங்க பின்வருமாறு கருத்து வெளியிட்டிருக்கிறார். நாடாளுமன்றத் தேர்தலின் போது அரசியல் நிர்ணயச் சபையொன்றை நிறுவி புதிய அரசமைப்பொன்றை உருவாக்குவதற்கு மக்களின் தீர்ப்பொன்றைக் கோரவிருக்கிறோம் என்று அவர் கூறியுள்ளார். இப்பொழுது அவர் பிரதமருக்குரிய பணிகளுடன் வரப்போகின்ற தேர்தலுக்கான ஏற்பாடுகளையும் கட்சிப் பணிமனையில் கவனித்துக் கொள்கின்றார்.



## மீண்டும் அதிகாரத்துக்குள் வர ராஜபக்ஷ மும்முரம்

**சீர்கேடுகள் பற்றி மேலும் பல தகவல்கள்**

மிக விரைவில் பொதுத் தேர்தல் ஒன்று வரப்போகின்ற சூழ்நிலையில் நடத்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலின்போது இடம் பெற்றதாகக் கூறப்படும் ஊழல், துஷ்பிரயோகம் மற்றும் நிர்வாகச் சீர்கேடுகள் பற்றிய மேலும் பல அதிர்ச்சியளிக்கும் விவரங்கள் வந்துகொண்டிருக்கின்றன. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அவரது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் சில அமைச்சர்கள் எல்லோரும் இலங்கை விமானப் படையின் சொத்துக்களை ஏதோ உள்ளூர் ரக்ஸி சேவை போன்று துஷ்பிரயோகம் செய்துள்ளார்கள் என்பது வெளிவந்துள்ளது. அவர்களின் விருப்பத்துக்கும் மகிழ்ச்சிக்கும் ஏற்ற வகையில் ஹெலிகொப்டர்களையும் சிறு விமானங்களையும் பயன்படுத்தியிருக்கிறார்கள். எல்லாம் முடிந்த பின் அந்தப் பிரயணங்களுக்கான வாடகை எதுவும் செலுத்தப்படவே இல்லை. அது பல மில்லியன் ரூபாய்களாக இருக்கும். விரியிறுப்பாளர்களின் தலையிலேயே அது விழப்போகின்றது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 2014 டிசெம்பர் முதலாம் திகதிக்கும் 2015 ஜனவரி 9ஆம் திகதிக்குமிடையில் பலவிதமான ஹெலிகொப்டர்களையும் சீன தயாரிப்பான வை–12 பிரயாணிகள் விமானங்களையும் 71 தடவைகள் பயன் படுத்தியிருக்கின்றார். ஒரு சில பயணங்கள் அதிகாரப் பூர்வமானவையாக இருந்துள்ள அதே சமயம் ஏனையவை அனைத்தும் தேர்தல் பணிகளுக்காகவே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஒரு ஜனாதிபதி என்ற முறையில் மட்டுமன்றி முப்படைகளின் தளபதியாகவும் நிதியமைச்சராகவும் இருந்தவர் என்ற முறையில் அவர் இந்த வசதிகளை அனுபவித்ததில் தவறு ஒன்றுமில்லை என்று சிலர் விவாதிக்கலாம். ஆனால் அவருக்கு எதிராக போட்டியிட்டவரான மைத்திரிபால சிறிசேனவுக்கு அவ்வித விமானப் படைவசதிகள் கிடைக்காமல் இருந்த நிலையில் இது நியாயமானதா? ஒழுக்க சீலமானதா? என்ற கேள்வி எழவே செய்கின்றது. ஏனையவர்களுக்கு இந்த வசதிகள் எந்த விதத்திலும் உரித்துடையவையன்று. அப்படியான ஒருவர்தான் நாமல் ராஜபக்ஷ ஆவர்.

அமைச்சர்கள் பசில் ராஜபக்ஷ, விமல் வீரவன்ச, சுனில் பிரேமஜயந்த, வட மேல் மாகாண முதலமைச்சர் தயாசிறி ஜயசேகர முதலியவர்களும் இவ்வாறு விமானங்களைப் பயன்படுத்தினார்கள். இன்னொருவர் எஸ்.மன்மேந்திரா. என்று தெரியவந்துள்ளது. அப்போதைய முதல் பெண்மணி ஷிராந்தி ராஜபக்ஷவும் விமானப் படை விமானங்களில் பயணங்களை மேற்கொண்டிருப்பதும் கட்டணம் செலுத்தாமலிருப்பதும் தெரியவந்துள்ளது. இதில் ஒன்று கடந்த டிசெம்பர்12ஆம் திகதி ரத்மலானையிலிருந்து மஹரகமைக்குச் சென்று திரும்பியிருந்தமை 5 கிலோ மீற்றர் தூரம் கூட இல்லையென்பது ஆச்சரியத்துக்குரியது. இந்த குறுகிய காலத்தில் நாமல் ராஜபக்ஷ 25 தடவைகள் இவ்வாறான வான் பயணங்களை மேற்கொண்டுள்ளார். ஆனால் இதுவரை அதற்கான கட்டணம் செலுத்தப்படவில்லை.


நாடாளுமன்றம் அரசமைப்பின் 19 ஆவது திருத்தப் பிரேரணையை அடுத்த வாரம் விவாதத்துக்கு எடுக்கவிருக்கின்றது. அதனால் ஏப்பல் 23 ஆம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்படுவதற்கான சாத்தியம் தென்படவில்லை. இது ஐ.தே.க.வினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள காலக் கெடுவென்றாலும் கால அவகாசத்தை சிறிது காலம் நீடிப்பதற்கு அக்கட்சி இணங்கியிருக்கின்றது. கால நீடிப்பு அதிகரிக்குமானால் கட்சியின் அரசியல் எதிர்காலம் மோசமாகப் பாதிக்கப்படும் என்று அக்கட்சித் தலைவர்கள் கருதுகிறார்கள்.

தேர்தல் காலத்தில் ஏராளமான வாக்குறுதிகள் வழங்கப்பட்டு நிறைவேற்றப்படாமல் இருப்பதானது ஜனாதிபதியும் ஐ.தே.க.ஆதிக்க அரசும் பொது மக்களின் விமர்சனத்துக்குள்ளாகி வருகிறார்கள்.

ஜனாதிபதியால் தனது கட்சி உறுப்பினர்களைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ள முடியா விட்டாலும் தேர்தலின் போது அவர் நினைத்தைவிட அதிக அதிகாரங்களை கொண்டவராக அவர் இப்போது இருக்கிறார். என்றாலும் முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ஷ மீண்டும் பதவியைக் கைப்பற்றத் திட்டங்களைத் தீட்டிக்கொண்டு வேகமாக நகர்வுகளை மேற்கொண்டு வருவது இப்போதைய ஜனாதிபதிக்கு கவலை தருவதாகவே இருக்கும். ஏனென்றால் தனது கட்சி எம்.பிகள் மீதான அவருடைய கட்டுப்பாடு படிப்படியாக தளர்ந்து வருவதாகத் தெரிகின்றது. ■

# வர்ணம் தீட்டலாம் வாங்க...





# புத்திசாலிச் சிறுவன்



ஒரு நாள் சில சிறுவர்கள் பந்து விளையாடிக் கொண்டிருந்தனர். அச்சம யத்தில் ஒரு சிறுவன் உதைத்த பந்து அருகில் இருந்த மரத்தின் பொந்திற்குள் விழுந்தது. பந்துக்கு சொந்தக்காரச் சிறுவன் அழ ஆரம்பித்தான். அந்தப் பந்தை பொந்திலிருந்து எப்படி எடுப்பது என்று எவருக்கும் தெரியவில்லை. அப்பொழுது ஒரு புத்திசாலிச் சிறுவன் அருகிலிருந்த வீட்டிலிருந்து ஒரு வாளியில் தண்ணீரை எடுத்து வந்து பொந்திற்குள் ஊற்ற பந்து மிதந்து தண்ணீரின் மேல் வந்தது. அந்தப் பந்தை எடுத்து உரிய சிறுவனிடம் ஒப்படைத்தான். எந்த ஒரு காரியத்திற்கும் சற்று சிந்தித்தால் அந்த சிக்கலில் இருந்து விடுபடலாம்.

# விடுகதைகள்

வீட்டிலிருப்பான் காவலாளி... வெளியில் சுற்றுவான் அவன் கூட்டாளி... இவர்கள் யார்?

எத்தனை தரம் சுற்றினாலும் தலை சுற்றாது... இது என்ன?

உயிரில்லாதவனுக்கு உடம்பெல்லாம் நரம்பு... இது என்ன?

உருவத்தில் சிறியவன்... உழைப்பிலோ பெரியவன்... இவன் யார்?

காலால் தண்ணீர் குடிப்பான்... தலையில் முட்டையிடு வான்... இவன் யார்?

எட்டாத ராணி இரவில் வருவாள்... பகலில் மறைவாள்... இவள் யார்?

நடந்துகொண்டேயிருந்தவன் நின்றான்... தலையைச் சீவினேன். மறுபடியும் நடக்க ஆரம்பித்தான்... இவன் யார்?

வால் நீண்ட குருவிக்குத் தலை உண்டு... வயிறில்லை... இவன் யார்?

அம்மா போடும் வட்டம்... பளபளக்கும் வட்டம்... சுவை யைக் கூட்டும் வட்டம். சுட்டுத் தின்ன ஆசை... இது என்ன?

விடைகள்:

1. பூட்டு, சாவி
2. மின்விசிறி
3. பாய்
4. எறும்பு
5. தென்னை மரம்
6. நிலா
7. பென்சில்
8. அகப்பை
9. அப்பளம்

# நம்பினால் நம்புங்கள்!

லெபனான் நாட்டில் ஒரு விவசாயி 11 கிலோ எடையுள்ள உருளைக்கிழங்கை அறுவடை செய்திருக்கிறார்.

சில டைனோசர்களுக்கு சுமார் ஆயிரம் பற்கள் வரை இருந்தன.

தேனீக்கள் பச்சை அல்லது நீலம் அல்லது சிவப்பு வண்ணத்திலும் இருக்கும்.

சில வகைக் காளான்கள் இருளில் ஒளிரும்.

பூனைகள் பிறக்கும்போது நீலக்கண் களையே கொண்டிருக்கின்றன.

பெரியவர்களுக்கு ஓராண்டில் சராசரியாக 1,500 கனவுகள் ஏற்படுகின்றன.

சூரியனிலிருந்து பூமிக்கு ஒளி வந்து சேர 8 நிமிடங்கள் 19 வினாடிகள் ஆகின்றன.

உருகி வழிவது போன்ற தோற்றத்தில் இத்தாலியில் ஒரு கட்டிடம் உள்ளது.

சில பன்றிகள் மண்ணைப் பார்த்துப் பயப் படும்.

கால்களில் வியர்வை அல்லது ஏதேனும் வாசனை உடையவர்களைக் கடிக்க நுளம்புகள் விரும்புகின்றன.

# உங்களது ஆசையின் அளவு எவ்வளவு

ஆசைப்படுவது தவறில்லை. ஆனால் அந்த ஆசையே உங்க ளுக்குப் பாரமாக இல்லாதவாறு பார்த்துக் கொள்ளவேண்டும். ஆசை உதயமாகும் விதம் அதிசயம் தான். மனிதன் பிறக்கும் போது ஆசை இல்லை. வளரும் போது ஆசை சிறிய அளவில் வருகிறது. அறிவு வளர, திறமை கூடக்கூட ஆசையும் பெரிய அளவில் வளர ஆரம்பிகின்றது. அதை அடைவதே தன் வாழ்நாள் இலட்சியம் என்று முயற்சி செய்கிறான். வெற்றி அடைகிறான். அத்தோடு நிற்கின்றானா? மேலும் அதிகம் ஆசைபடுகின்றான். அடைகிறான். இப்படி ஒவ்வொரு நாளும் தான் ஆசைப்பட்டதை அடைய நினைக்கிறான். அதற்காகப் பலவற்றைத் துறக்கிறான். தேவைப்பட்டால் பலரின் நட்பை, உறவைக் கூட இழக்கிறான். ஆசையை அடையும் ஒவ்வொரு முறையும் தன்னைச் சுற்றி புது உறவு, புதுச் சூழ்நிலை, புது பழக் கம், புதுப்புது எண்ணங்கள் இப்படி புதுப்புது அனுபவங்கள் அவனுக்கும் கிடைக்கின்றன . மீண்டும் புதிய ஆசை ! புது அனு பவம். இப்படி இருக்கும்போது அவனுடைய அசல் முகம் தொலைந்து போய் போலி முகம் அவனுக்கு நிரந்தரமாக அமைந்து விடுகின்றது. போலியாகவே வாழ்கி றான். பழைய உறவையும், நட்பையும், சூழ்நிலையும் அவன் மறந்தே போய் விடுகின்றான். முடிவில் தான் எதற்காக ஆசை பட்டானோ அந்த எண்ணம் ஈடேறாமல் இந்த உலகத்தைவிட்டு போலியாகவே வாழ்ந்து, நிராசையுடன் பிரிந்து செல்கிறான். அடைந்த ஆசையை முழுதாக அனுபவிக்குமுன்னே புதிதாக ஆசை கொள்கிறான். எப்படியென்றால் தன்னிடத்தில் இருக்கும் மொபைல் போனில் உள்ள அனைத்து வசதிகளையும் உபயோக்குமுன்னமே மேலும் புதிதாக ஒரு மொபைல் வாங்குவது போல. அதாவது அவனி டத்தில் எவ்வளவு வசதி கொண்ட மொபைல் போன் இருந்தாலும் அவ னால்அவனுக்குதேவைப் படும் முக்கியமான வச தியை மட்டுமே பயன் படுத்த முடியும். அதா வது உன்னிடத்தில் நூறு கோடி பணமிருந்தாலும் உன்னால் அனைத்துப் பணத்தையும் ஒரே நேரத்தில் உனக்காகப் பயன்படுத்திக் கொள்ள முடியுமா? அரண்மனை போல வீடு இருந்தாலும் நீ தூங்குவது ஆறடி அளவு தான். மற்ற இடம் உனக்கு சொந்தமானாலும் அது உன்னால் அனுபவிக்க முடியாதது. சரி 'அனைத்து இடத்திலும் புரண்டு புரண்டு படுப்பேன்' என்று புரண்டு கொண்டிருந்தால் நிம்மதியான தூக்கம் கிடைக் குமா? எவ்வளவு விதம் விதமான உணவுகள் உன்முன்னே குவிந்து இருந்தாலும் ஒரு சாண் அளவே தான் சாப்பிட முடியும். மற்ற உணவுகள் இருந்தும் வீண் தான். அளவுக்கு மேல் ஒரு கவளம் கூட சாப்பிட்டாலும் நீ கட்டாயம் கஷ்டப் படுவாய். எவ்வளவு உடைகள் இருந்தாலும் ஒரே ஒரு உடை தான் போட்டுக்கொள்ள முடியும். மீறி பத்து உடை போட்டுகொண்டால் அந்த உடையே உனக்குப் பாரமாகும். மாவீரன் அலெக்சாண்டர் இந்த உலகை வெல்லப் புறப் பட்டான். சிறிய வெற்றி அடைந்ததில் உள்ள மகிழ்ச்சி அவருக்கு பல நாடுகளை வென்றபிறகு கிடைக்கவில்லை. நாடுகளை வெல்ல வெல்ல அவனுடைய சொந்த நாட்டில் ஒரு சில காலங்கள் கூட மன்னனாக இருந்து அனுபவித்து ஆட்சி செய்தது கிடையாது. அதேபோல தான் மாவீரன் நெப்போலி யனின் வரலாறும் பெரிய பெரிய அரசியல் தலைவர்கள், தொழிலதிபர்கள், பெரிய பதவியில் இருப்பவர்கள் ஒருநாளாவது தங்களுடைய வீட்டில் முழுமனதாக அனைவருடனும் உண்டும், பேசி மகிழ்ந்து , சந்தோஷமாக பொழுதைக் கழித்திருப்பார்களா? பின் அவர்கள் வாழும் வாழ்க்கைக்கு அர்த்தம் என்ன? அடைந்த வெற்றியின் பயன் தான் என்ன? அவர்கள் மேலே உயர உயர அவர்களின் வெற்றியே பாரமாக அமைந்து மன அழுத்தம் உண்டாகி கடைசியில் அரைகுறையாக அனுபவித்து அவைகளுடைய ஆவி நிராசையாகவே பிரிகின்றது. அதை அவர்கள் மரண கட்டிலில் இருக்கும்போது உணருகின்றார்கள் என்பது தான் ஆச்சரியம். ஒரு மரத்தில் வேர்கள் எந்த அளவிற்கு இருக்கும். அதன் உயரம் அல்லது பரப்பு எந்த அளவிற்கு இருக்கு மென்பது உங்களுக்கு தெரியுமா? அதாவது கிளைகள் எவ்வளவு பரந்து இருக்கின்றதோ அந்த அளவிற்கு வேர்கள் பரவியிருக்கும். அதேபோல் மரத்தின் தண்டு எவ்வளவு பலம் உள்ளதோ அந்த அளவு தான் கிளைகளைத் தாங்கும். கிளைகள் வேருக்கு வேண்டிய தண்ணீரை பாதுகாப்பாக வைக்க உதவுகின்றது. அதிகமாக ஆசைபடும் ஒருவருக்குப் பாடம் கற்பிக்கவேண்டுமென்று ஒரு பெரியவர் நினைத்தார். அவரிடத்தில் ஒரு பறக்கின்ற 'பட்டம்' கொடுத்து 'இந்தப் பட்டம் தான் உனது ஆசை. அதைப் பறக்கவிடு. எவ்வளவு வேண்டுமானாலும் நூலை எடுத்துக்கொள். நீ போதும் என்கிற நிலை வரும்போது பட்டம் கடைசியாக பறக்கும் இடம் வரை, முழுவதும் உனக்குத் தான் சொந்தம் ' என்று இரண்டையும் அவரிடத்தில் கொடுத்தார். அவரும் ஆசையாக, தான் நினைத்த ஆசையை அடையப்போகிறோம் என்கிற மகிழ்ச்சியில் பட்டத்தைப் பறக்க விட்டார். கொஞ்சத் தூரம் பறந்திருக்கும். இந்த அளவு போதுமா? என்று யோசித்தார். இன்னும் கொஞ்ச தூரம்... இன்னும் கொஞ்ச தூரம் என்று பறக்க பட்டம் ஒரு புள்ளி அளவே தெரிந்தது. மேலும் நூலின் பாரம் பட்டம் பறப்பதற்க்கு தடையாய் இருக்க ஆரம்பித்தது. கடைசியில் நூலே பாரமாக மாறி பட்டம் அறுந்து விழுந்த இடம் தெரியாமல் போனது. பட்டத்தை தேடிப் புறப்பட்டவர் வெறும் கையுடன் திரும்பி பெரியவரை சந்தித்தார். 'பட்டம் எங்கே?' என்று கேட்டார் பெரியவர். 'தேடிப் பார்த்தேன் கிடைக்கவில்லை. பொன்னான வாய்ப்புக் கிடைத்தும் என் பேராசையினால் இழந்தேன். இப்போது புத்தி வந்தது' என்று வருத்தப்பட்டார். அதேபோல் தான் 'மைதாஸ் ' யின் ஆசை. தொட்டதெல்லாம் பொன்னாக வேண்டும் என்று வரம் கேட்டு சாப்பிடும் உண வைத் தொட, அதுவும் பொன்னாக மாற கடை சியில் சாதாரண மனிதனைவிட கஷ்டப்பட்ட நிலை வந்த பிறகு தான் திருந்துகிறான். ஆகவே ஆசை யின் அதிகபட்ச அளவு உங்கள் கண்க ளுக்குத் தெரியும் தூரம். அதைத் தாண்டினால் , உங்களுக்கு மிஞ்சுவது பூச்சியம் தான். ஆசை அதிகம் கொள்ளாதே !அதனால் வாழ்கையில் அவதிப்படாதே !



புதன் பொய்கை

உதயன்

15 ஏப்ரல் 2015 புதன்கிழமை

ஆண்டவனை அளந்து காண முடியாது. அளந்து காணமுடியாத இறைவன் முன்னிலையில் நிற்கும் சிந்தைக்கும் உரிமையுண்டு.

—*இங்கர்சால்.*

# எதிர்பார்ப்பு

■ ராஜராஜன்

பொதுவாகவே எமது வாழ்க்கை எதிர்பார்ப்புக்கள் நிறைந்தது. எதிர்பார்ப்பு இல்லாத வாழ்க்கையில் சுவையும் இல்லை. சின்னச் சின்ன விடயங்களில் கூட நாம் அதிகளவில் எதிர்பார்ப்பைக் கொண்டிருக்கிறோம். அது நிறைவேறுமா அல்லது ஏமாற்றிவிடுமா என்பது கூடத் தெரியாமல் எதிர்பார்ப்புடன் காத்திருப்பதுதான் மனித இயல்பாகும்.

சில இளைஞர்கள் அழகான படித்த மனைவி வேண்டும். அவள் கை நிறையச் சம்பாதித்து குடும்பத்தின் பொருளாதாரத்துக்கு உதவ வேண்டும் என்ற எதிர்பார்ப்புக்களை மனதில் நிறையவே கொண்டிருப்பார்கள். தமது எதிர்பார்ப்பில் எது குறைந்தாலும் அவர்கள் திருமணத்துக்குச் சம்மதிப்பதில்லை. தமது எதிர்பார்ப்பு நிறைவேறும்வரை காத்திருப்பார்கள். சிலவேளைகளில் காத்திருந்து காத்திருந்து களைத்துப்போன இவர்கள் இறுதியில் பெற்றோர்கள் நிச்சயிருக்கும் ஏதோவொரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்வதும் உண்டு. சிலர் தலை நரைத்து உடல் தளர்ந்த நிலைக்கு வந்த பின்னர், பெண்கள் எவரும் இவர்களை ஏறெடுத்துக் கூடப் பார்ப்பதில்லை.

இறுதியில் கட்டைப் பிரமச்சாரி வாழ்வுதான் இவர்களுக்கு நிரந்தரமாகி விடுகின்றது.

"ஆசைப்படு, அதுவும் அளவோடுதான்" என்று கூறுவார்கள். அதைப்போன்றே எமது எதிர்பார்ப்புக்களும் அமைந்திருத்தல் வேண்டும். அதிலும் எம்மால் அடையக் கூடியதை மட்டுமே எண்ணி எதிர்பார்ப்புடன் காத்திருப்பதில் தவறொன்றும் இல்லை. ஆனால் எட்டிக் கூடப் பார்க்க முடியாததை அடைய வேண்டுமென்ற எதிர்பார்ப்புடன் காத்திருப்பதுதான் தவறான செயலாகும். இளம் பராயத்தினர் ஒருவர் மீது மற்றவர் உயிரையே வைத்திருப்பதும் எதிர்காலத்தைப் பற்றிய கற்பனையுடனும் எதிர்பார்ப்புடனும் காத்திருப்பதும் வழமையான நிகழ்வுகள்தான். ஆனால் அவர்களது எதிர்பார்ப்பு சின்னாபின்னமாக்கப்படும் போது அதனால் ஏற்படுகின்ற எதிர்விளைவுகள் சோகத்தை ஏற்படுத்தி விடுகின்றன.

தேவதாஸ் என்ற திரைப்படத்தைப் பல ஆண்டுகளுக்கு முன்னர் பார்த்தவர்கள் அதன் சோகமான முடிவைப் பார்த்துக் கண்ணீர் விடாமல் இருந்திருக்க மாட்டார்கள். அந்தத் திரைப்படத்தின் நாயகனான தேவதாஸ், பார்வதி என்ற அழகான பெண் மீது உயிரையே வைத்திருக்கின்றான். அவளே தனது மனைவியாக வாய்த்து வீட்டில் ஒளியேற்றி வைப்பாள் என்ற எதிர்பார்ப்புடன் காத்திருக்கிறான். ஆனால் பார்வதியை அவளது பெற்றோர் பணம் படைத்த கிழட்டு ஜமீன்தார் ஒருவருக்குத் திருமணம் செய்து வைக்கின்றனர். இதை அறிந்ததும் அவன் வேதனையில் துடித்துப் போய் விடுகின்றான். தனது வேதனையை மறக்க மதுவின் உதவியை நாடுகின்றான். இறுதியில் அதற்கு அடிமையாகி விடுகின்றான். மதுபோதையிலும் தனது அன்புக்கு உரியவளை நினைத்து நினைத்து உருகி உருக்குலைந்து கொடிய நோய்க்கு ஆளாகி அற்ப ஆயுளில் இந்த உலகத்தை விட்டே நீங்கி விடுகின்றான்.

இதைப் போன்றுதான் அனார்க் கலி மீது தீராத அன்புகொண்டு அவளை மனைவியாக அடையும் எதிர்பார்ப்புடன் காத்திருந்த சலீமின் முடிவும் அமைந்து விடுகின்றது. கம்பராமாயணத்தைப் பாடிய பெரும் புலவர் கம்பரின் மகனான அம்பிகாவதியின் முடிவும் சோகத்தை ஏற்படுத்தி விடுகின்றது.



**"இன்றைய கால கட்டத்தில் தமது பிள்ளைகள் கல்வியில் உயர்நிலையை அடைய வேண்டுமென விரும்பாத பெற்றோர்களே இல்லையெனக் கூறலாம். இதற்காகப் பிள்ளைகளை விடப் பெற்றோரே அதிகளவில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.**

மனிதர்களைப் போன்றுதான் ஐந்தறிவு படைத்த மிருகங்களும் எதிர்பார்ப்புடன் செயற்படுகின்றன. தமக்குரிய இரையைத் தேடிக்கொள்ளும் நோக்கத்துடன் கொடிய விலங்குகளான புலி,சிங்கம் போன்றவை குளக்கரையோரங்களில் அமைந்துள்ள மறைவிடங்களில் இரை கிடைக்குமா என்ற எதிர்பார்ப்புடன் காத்திருக்கின்றன. நீண்டநேரம் சென்றாலும் தமது எதிர்பார்ப்பு நிறைவேறும் வரை அவை காத்திருப்பதைக் காண முடியும்.

சிலர் இயல்பாகவே எதிலும் அதிகமான எதிர்பார்ப்புக்களைக் கொண்டிருப்பார்கள். உணவிலிருந்து அனைத்து விடயங்களும் இதில் அடங்கி இருக்கும். ஆனால் இவை யாவுமே நிறைவேறும் என்று கூறி விட முடியாது.

பிள்ளைகளைப் பெற்று விடுவதுடன் தமது கடமை முடிந்து விடுவதாக சில பெற்றோர்கள். கருதுகின்றனர்.

பிள்ளைகளின் தேவைகள், எதிர்பார்ப்புக்கள் என்பன தொடர்பாக இவர்கள் சிறிதும் எண்ணிக் கூடப் பார்ப்பதில்லை. ஆனால் தமது சகல தேவைகளுக்கும் பெற்றோரின் கைகளை எதிர்பார்த்துக் காத்திருக்கும் பழக்கம் பிள்ளைகளிடத்தில் உண்டு. அவர்களுக்கு எல்லாமே பெற்றோர்கள்தான். ஆனால் சில பெற்றோர் இவர்களின் ஆதங்கத்தைப் புரிந்து கொண்டு நடப்பதில்லை. இதனால் அந்த இளம் தளிர்களின் எதிர்பார்ப்புக்கள் நிறைவேறாமல் முளையிலேயே கருகி விடுகின்றன.

சிலர் தமது மனைவியையும் பிள்ளைகளையும் நன்றாக வைத்திருக்க வேண்டும் என்ற விருப்பத்தைக் கொண்டிருப்பார்கள். இதற்காகக் கடுமையாக உழைப்பதற்கும் இவர்கள்தயங்கமாட்டார்கள். ஆனால்சிலவேளைகளில் இவர்கள் நினைப்பது நிறைவேறுவதில்லை. இவர்களின் உள்ளத்தில் கிளர்ந்து எழுகின்ற நல்ல எதிர்பார்ப்புகள் பொய்த்து விடுவதுமுண்டு.

இன்றைய கால கட்டத்தில் தமது பிள்ளைகள் கல்வியில் உயர்நிலையை அடைய வேண்டுமென விரும்பாத பெற்றோர்களே இல்லையெனக் கூறலாம். இதற்காகப் பிள்ளைகளை விடப் பெற்றோரே அதிகளவில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். ஆனால்எல்லாப்பிள்ளைகளாலும்கல்வியில் உயர்நிலையை அடைவதற்கு முடிவதில்லை. பரீட்சை முடிவுகள் இவர்களுக்குச் சாதகமாக அமையாமல் விடுவதே இதற்கான பிரதான காரணமாகும். பரீட்சையின் போது இவர்கள் கடுமையாக உழைத்துத் தம்மை வருத்தியபோதிலும் இவர்களின் எதிர்பார்ப்பு இறுதியில் சிதைந்து விடுகின்றது. இவ்வாறு எவ்வளவோ விடயங்களை இங்கு எடுத்துக் கூற முடியும். வாழ்க்கை என்பதே எதிர்பார்ப்பு நிறைந்ததுதான். எதிர்பார்ப்பு இல்லாத வாழ்க்கையும் சுவையாக அமைவதில்லை. எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் போது எமக்கு மகிழ்ச்சி ஏற்படுகின்றது. நிறைவேறாதபோது ஏமாற்றமும் வேதனையுமே எம்மை வாட்டி வருத்துகின்றன.













# வவுனியா தமிழ் மாமன்றம் முன்னெடுத்த தமிழ் மாருதம்





வவுனியா தமிழ் மாமன்றம் முன்னெடுத்த தமிழ் மாருதம் 2015 விழா வவுனியா நகரசபைக் கலாசார மண்பத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக இடம்பெற்றது.

காலை, மாலை என இரு அமர்வுகளாக இடம்பெற்ற இந்நிகழ்வுகள் வவுனியா பொது நூலக சரஸ்வதி சிலைக்கு அருகாமையில் இருந்து ஊர்வலத்துடன் ஆரம்பமாகின. தமிழ் மாமன்றத்தலைவர் இரா.இராஜேஸ்வரன் விழாவிற்குத் தலைமை வகித்தார்.

காலை அமர்வின்போது மனநல மருத்துவர் எஸ். சிவதாஸின் தொடக்கவுரை, துணைவியூர் கேசவன் தலைமையில் சுழலும் சொற்போர், கலை நிலாக் கலையகத்தின் ஆண்பால் என்ற நாடகம், வற்றாப்பளை மகா வித்தியாலயத்தின் நாட்டார் பாடல் என்பன இடம்பெற்றன.

மாலை அமர்வில் ஆசிரியை அகிலா செந்தூரனின் நாட்டிய நெறியாள்கையில் வரவேற்பு நடனம், வவுனியா மாவட்ட முன்னாள் அரச அதிபர் உடுவை எஸ். தில்லை நடராஜாவின் தொடக்கவுரை, கவிஞர் இரா. சடாகோபன் தலைமையில் கவியரங்கம், வவுனியா நிருத்திய நிகேதன கலாமன்றம் அருந்தவநாயகம் சுஜேந்திராவின் நெறியாள்கையிலும் தமிழ்மணி கலாநிதி அகளங்கனின் எழுத்து ருவாக்கத்திலும் வழங்கிய ஆணவ வதம் என்ற பெயரில் அமைந்த இரணியன் கதையை வெளிப்படுத்திய நாட்டிய நாடகம், விரிவுரை யாளர் ச.லலீசன், தமிழாசிரியர் ஐ.கதிர்காமசேகரம் ஆகியோரை இணை நடுவர்களாகக் கொண்ட பட்டிமன்றம் என்பன இடம்பெற்றன.





# "பொற்புடன் விளங்கும் தற்பரானந்தன் அரங்கு"

**கே.எஸ்.சிவஞானராஜா**
**கொக்குவில்**

இலங்கையில் சங்கீதம், நடனம், நாடகம் ஆகிய நெறிகளை, அதனதன் பாரம்பரியம் சார்ந்த எல்லைகளோடு– வளர்க்கும் பெரியதோர் நிறுவனமாக, வட இலங்கைச் சங்கீத சபையானது தன்னை உயர்த்தியதோடு உறுதிப்படுத்தியுமுள்ளது. 1930 ஆம் ஆண்டுக்குப் பின்னர், இசைத்துறையில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்திய மேற்படி சபையானது ஏனைய துறைகளையும் தன்னகத்தே இணைத்துக் கொண்டு, இற்றைவரை பல்லாயிரக்கணக்கான கலாவித்தகர்களை உருவாக்கிய பெருமையோடு தலை நிமிர்ந்து நிற்கிறதெனலாம்.

யாழ் பல்கலைக்கழக நுண்கலைப்பீடம் அமைந்துள்ள மருதனார்மடத்தின் கண் நெடுந் தெருவாம் கே.கே.எஸ். வீதிக்கண்மை யில் யாவர்க்கும் வசதியாக இச்சபை வேரூன்றியுள்ளமை மிகமிகப் பொருத்தமானதாகும். விசாலமான பரப்பளவையும், விஸ்தாரமான மண்டபம் ஒன்றையும் பொருத்தமான கருத்தரங்கு செயற்றிறனை மேம்படுத்த வல்ல மேல்மாடி மண்டபத்தையும், ஆற்றுகைக்கு வாய்ப்பான மேடையமைப்பையும் தன்னகத் தேயமைத்த வண்ணம் வட இலங்கைச் சங்கீத சபை மிளிர்கிறது.

முன்னாள் கோட்டக் கல்விப் பணிப்பாளரும், சங்கீத சபையின் முன்னாள் செயலாளராக அந்தப் பதவியை அலங்கரித்தவருமான அமரர் அ.தற்பரானந்தன் ஐயா அவர்களது அயராத, தளராத முயற்சியின் பயனாக 'காணியும் கட்டடமும்' வானுயர வாழ்த்தும் வண்ணம் அமைந்து காணப்படுகின்றது. அவரது ஞாபகார்த்தமாக உள்ளரங்கை, தற்பரானந்தன் கலையரங்காக வடிவமைத்துள்ளார்கள். தூர நோக்கோடு, பொற்புடன் பயன் தரவல்ல அரங்காக பரிணமிப்பதனால், 2015 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு மாதமும் கடைசி ஞாயிறன்று இசை, நடன, நாடக ஆற்றுகைகள் வெகு சிறப்பாக முன் னெடுக்கப்பட்டு வருகின்றன. தலைசிறந்த கலைஞர்களும், வளரும் இளங்கலைஞர்களும் மாணவர்களும் இந்த அரங்குக்கு வரமாகின்றார்கள். சுமார் அறுநூறு ரசிகர்கள் இருந்து பார்க்கக் கூடியதான இருக் கைகளைக் கொண்டிருந்த போதும் ஒலியமைப்பினைச் செய்து கொள்ளும்போது, மண்டபத்தின் அனைத்து யன்னல் கதவு களையும் திறக்கா விட்டால் எதிரொலிக்க வல்ல சுவாத்தியத்தையே எம்மால் அனுபவிக்க முடியும்.

யன்னல்களைப் பூட்டுவது சிரமமென்பதற்காக, அவற்றைத் திறக்காமல் விடுவோமாக இருந்தால் மண்டபத்தில் அமர்ந்து கேட்பவர்கள், உண்மையான சங்கீத சுகத்தை அனுபவிக்க முடியாதவர்களாய் தம்மைச் சமாதானப்படுத்த வேண்டியவர்களாவர்.

தலைசிறைந்த இசைக் கலைஞர்களான தவநாதன் றொபேட், பொன் ஸ்ரீ வாமதேவன், கிருஷ்ணானந்தன், ரஞ்சனி ஆகியோரின் இசை அரங்குகள் "தற்பரானந்தன்" அரங்கைப் பொற்புடன் விளங்குமாறு சமைத்துள்ளன. சங்கீத சபை, இசை மேதாவியான பரம் போன்றவர்களால் என்ன நோக்கத்துக்காக உருவாக்கப்பட்டதோ அந்த எண்ணம் நிறைவேறிவிட இறைவன் கருணை கூர்ந்துள்ளான் போலும். யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு வீட்டிலும் சங்கீதம் பேறாக அமையவேண்டும். இதற்காக 1931 ஆம் ஆண்டு தவத்திரு. யோகர் சுவாமிகளின் ஆசிபெறப்பட்டதாக அறியக் கிடக்கின்றது. ஆதலால் சபை ஒருபோதும் தோற்பதற்கு நியாயமிருக்காது. காலத்துக்குக் காலம் ஆக வேண்டிய கைங்கரியங்களை நிறைவேற்றினால் போதுமானதே.

சபையின் செயற்றிட்ட வடிவமைப்பில் மாற்றங்கள் செய்ய வேண்டியிருப்பின் பொதுக் கூட்ட மூலம் ஆற்ற முடியும். அதற்காக வேண்டிய பிரேரணைகள் வரவேற்கப்படலாம். விரலிசைக் கலைஞர்களது அரங்கேற்றங்கள் தாராளமாக நடக்கின்றபோதும், குரலிசை வல்ல இளங் கலைஞர்களது அரங்கேற்றங்கள் மிக எளிதாக நடைபெறுவதற்கு ஆவன செய்யப்படவேண்டும். பெரியதொகைகளைக் கொட்டி பணச் சுமையை ஏற்படுத்துவதாக அரங்கேற்றங்கள் அமைதல் ஆகாது.

இலங்கையில் யாழ்.பல்கலைக்கழக நுண் கலைப்பீடம் அமைவதற்கு முன்னதாக வட இலங்கைச் சங்கீத சபையின் சங்கீத ஆசிரிய தராதரப் பத்திரம், சங்கீத ரத்தினம் ஆகிய துறைகளில்பட்டம்பெற்றவர்களுக்குஆசிரிய நியமனம் வழங்க ஆவன செய் யப்பட்டது. இதன் பிரகாரம் 1971ஆம் ஆண்டு சங்கீத ஆசிரிய தராதரப்பத்திரம்பெற்ற எனக்கு, 1972 ஆம் ஆண்டு அரச நியமனம் வழங்கப்பட்டது. அதுவே அரச அங்கீகாரமாகச் சபைக்குக் கிடைத்த முதல் வெற்றியாகும்.பலருக்கும்இந்தவாய்ப்புக்கிடைத்தது. அதேவேளை தற்போது நுண்கலைப்பீட மூலமாக ஆசிரிய நியமனம் வழங்கப்படுவதனால் அங்கு படிக்கும் நுண்கலைப்பீட மாணவர்கள் சமாந்தரமாக, வட இலங்கை சங்கீத சபை கலாவித்தகர் பரீட்சையையும் எடுப்பதனால் இது எளிதானதல்ல என்ற உண்மை நிரூபிக்கப்பட்டு வருகிறது. தவில், நாதஸ்வரத்துக்கு ஒரு பல்கலைக்கழகம் உருவாக்கப்படுமானால் அங்கே குரு–சிஷ்ய முறையிலேயே கற்பிக்கப்படும். அதனால் அன்றோ சங்கீதம் உயிரோடு இருக்க முடியும்? ஆம் பத்திரத்துக்குப் படிப்பது ஒருவகை. சங்கீத பாத்திரத்துக்குப் படிப்பது ஒருவகை. இரண்டாவது வகையே தலை சிறந்ததாகும். முதலாவதில் எல்லோருமே வெற்றி. இரண்டாவதில் வெற்றி பெற, தற்பரானந்தன் அரங்கு பலசாதனைகளைச் செய்ய வேண்டியுள்ளது. கடலின் கரையிலேயே நிற்கின்றோம். ஆழக் கடலில் தானே முத்துக்கிடைக்கும்.

# கடவுளுக்கே கண் தானம் செய்த கண்ணப்ப நாயனார்



பொத்தப்பி என்ற நாட்டில், உடுப்பூர் எனும் ஒரு ஊரில் நாகன் என்ற ஒரு வேடர் குலத் தலைவன் இருந்தான். அவனும் அவனது மனைவியும் மிகச் சிறந்த முருக பக்தர்கள். குழந்தை இல்லாத அவர்களுக்கு முருகன் அருளால் மிக வலிமையான, அழகான ஆண் குழந்தையொன்று பிறந்தது. திண்ணன் என்று பெயர் வைத்து, அவனுக்கு தங்கள் குல மரபுக்கேற்ப வில், அம்பு, ஈட்டி, வாள் என்பவற்றைக் கையாளும் போர்ப் பயிற்சிகளைக் கற்றுக் கொடுத்தார்கள். தந்தைக்கு வயதானவுடன் நாடாளும் தலைமைப் பதவி அவனுக்கு வந்தது. ஒரு நாள் திண்ணனார், தனது நண்பர்களான காடன், நாணன் ஆகியவர்களுடன் காட்டுக்கு வேட்டையாடச் சென் றார். அங்கு அவருடைய வலையை அறுத் துக்கொண்டு ஒரு பன்றி தப்பி ஓடியது. அதைத் துரத்திச் சென்று அதைத் தன் குறுவாளால் வெட்டி வீழ்த்தினார் திண்ணனார். வெகு தூரம் வந்துவிட்ட அவர்கள் அங்கு வானளாவ உயர்ந்து நிற்கும் திருக்காளத்தி மலையைப் பார்த்து ஆச்சரியப்பட்டு நிற்கிறார்கள். அருகில் அழகான பொன்முகலி ஆறு ஓடிக்கொண்டிருக்கிறது. திண்ணனார் அந்த அழகில் மெய் மறந்து நிற்பதைக் கண்ட நாணன், அந்த மலையின் மீது இருக்கும் குடுமித்தேவர் பற்றிக் கூறுகிறான். ஏனோ அந்தப் பெயரைக் கேட்டவுடன் திண்ணனாருக்கு ஒரு பேரின்ப உணர்வு ஏற்பட்டது. மலையேறிய அவர் அங்கு குடுமித் தேவரின் திருவுருவ மேனியைக் கண்டவுடன், அன்பினால் அப்படியே கட்டித்தழுவி, தன்னை மறந்து ஆடிப் பாடினார். ஆண்டவனுக்கு ஏதாவது படையல் வைக்க வேண்டும் என்று உள்ளம் துடித்தது. தான் வேட்டையாடிய பன்றியை, காடன் தீமூட்டி பக்குவமாகச் சுட்டு வைத்திருந்தான். ஓடிச் சென்று அதை ஒரு கையிலும், மறு கையில் வில் இருந்ததால், பூக்களைப் பறித்து தன் தலையில் செருகிக்கொண்டும், தண்ணீரும் வேண்டுமென்பதால் அதனை தனது வாய் நிறைய நிறைத்துக்கொண்டும் ஓடி வந்தார் திண்ணனார். ஆண்டவன் மீது இருந்த அதீத அன் பினால், தனது வாய் நீரை அபிசேகமாகவும், தலையில் செருகி இருந்த மலரை அலங்காரமாகவும், பன்றி இறைச்சியை படையலாகவும் வைத்து வழிபட்டு, இரவு முழுவதும் வில்லுடன் காவலும் புரிந்தார். மீண்டும் அடுத்த நாள் குடுமித் தேவருக்காக உணவு தேடப் புறப்பட்டார். இப்படியே சில நாள்கள் தொடர்ந்தது. ஆண்டவருக்கு அனு தினமும், ஆகம முறைப்படி பூசைகள் செய்து வந்த சிவ கோசரியாரின் அவர்களுக்கு இது பேரதிர்ச்சியாக இருந்தது. இறைவன் மீதிருந்த இறைச்சியையெல்லாம் நீக்கி சுத்தம் செய்து பூசை செய்து விட்டு, மனம் நொந்து புலம்பலானார். ஆண்டவன் அன்று இரவுசிவகோசரியார்கனவில்தோன்றி திண்ணனாரின் அன்பு வெளிப்பாட்டை அடுத்த நாள் காலை மரத்தின் பின்னால் மறைவாக நின்று கவனிக்கும் படிகூறி மறைந்தார். அன்று ஆறாவது நாள். திண்ணனாரின் அன்பு மிகுதியை சிவ கோசரியாருக்கும், உலகுக்கும் காட்ட முடிவெடுத்து, தமது வலக் கண்ணிலிருந்து இரத்தம் கொட்டும்படி செய்தார். உடனே பதறிப்போன திண்ணனார், அதைத்துடைத்து தனக்குத் தெரிந்த பச்சிலைகளைப் பறித்து வந்து களிம்பிட்டும் பார்த்தார். ஆனால் அப்பொழுதும் இரத்தம் நிற்கவில்லை. அப்போது அவருக்கு தெய்வ சங்கல்பமாக, ஊனுக்கு ஊன் என்ற பழமொழி நினைவுக்கு வர, உடனே சற்றும் தயங்காது, தனது வலக்கண்ணை, அம்பினால் அகழ்ந்து எடுத்து அதை அப்படியே ஆண்டவனின் கண்ணில் அப்பினார். இரத்தம் வருவது நின்றுவிட்டது. மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தார் திண்ணனார். அத்தோடு விட்டானா அந்த ஆண்டவன். இல்லையே. தனது இடக்கண்ணிலும் இரத்தம் பொங்கச் செய்தார். தம் இடக் கண்ணையும் எடுத்து அங்கு பொருத்த வேண்டும் அப்பொழுது தான் அந்தக் கண்ணில் வரும் இரத்தமும் நிற்கும் என்று புரிந்து கொண்டவர், உடனே சற்றும் தயங்காமல், அடுத்த கண்ணைத் தோண்டி எடுப்பதற்கு தயாரானார். தன்னுடைய மற்றைய கண்ணையும் எடுத்துவிட்டால் ஆண்டவனின் இடக்கண் இருக்கும் இடத்தைச் சரியாகக் காண முடியாதே என்பதால், அடையாளத்துக்காக தனது காலின் பெரு விரலை குருதி பொங்கும் ஆண்டவனின் கண் மீது ஊன்றிக் கொண்டு அம்பினால் தனது கண்ணைப் பெயர்க்க ஆயத்தமானார். அப்போது, திருக்காளத்தியப்பர், நில்லு கண்ணப்பா என்று மூன்று முறை கூறி அவரை தடுத்தாட்கொண்டார். இதனைக் கண்ட சிவ கோசரியார் திண்ணனாரின் பக்தியில் மெய்மறந்து போனார். அன்று முதல் திண்ணப்பர், கண்ணனார் நாயனார் ஆனார் என்பது வரலாறு.



## பொன்மொழிகள்

- சோம்பேறி தனது சந்ததிகளைக் கொள்ளையடிக்கிறான். –யாரோ
- உழைப்பே மெருகூட்டும். சோம்பலோ துருப்பிடிக்கவே செய்யும்.–டென்னிஸன்.
- சோம்பலினால் உடல் மட்டுமல்ல மனமும் கெட்டுவிடுகிறது. –சாரதா தேவியார்.
- செயல்களைக் கடினமாக்குவது சோம்பலே. –பிராங்கிளின்
- சோம்பேறியால் சந்தோஷமாக இருக்க முடியாது. –பிஸ்மார்க்
- சோம்பேறியும் திருடனும் ஒன்றே. –சாணக்கியன்.
- சோம்பல் உடலின் மூடத்தனம். –ஸ்யூப்
- சோம்பல் உடலை அரிக்கும் துரு போன்றது. –ரெனார்
- சோம்பலின் மகன் இருட்டு. மகள் பசி. –உய்கோ
- உழைப்பு சாதிக்கிறது. சோம்பல் கனவு காண்கிறது. –திஸாரோ
- துருப்பிடித்த இரும்பும் சோம்பல் ஏறிய உடம்பும் உதவாது. –இங்கர்சால்.

## பறவைகள் பற்றிய தகவல்கள்

- ஆஸ்திரேலியாவில் வசிக்கும் மித்ரா என்ற பறவை ஒன்பது நிறத்தில் தெரியும்.
- கடல் புறாக்கள் நீரில் மிதந்து கொண்டே தூங்கும்.
- பச்சோந்தியின் கண்கள் எப்போதும் சுழன்று கொண்டே இருக்கும்.
- மரங்கொத்திப் பறவை மரத்தை ஒரு நொடிக்கு 20 தடவைகள் கொத்தும்.
- குவாரின் என்ற பறவை மல்லாந்து தூங்கும்.
- புறா ஓய்வெடுக்காமல் சுமார் ஆயிரம் கி.மீ. வரை பறக்கும் திறன் கொண்டது.
- நீரை உறிஞ்சிக் குடிக்கும் பறவை புறா.
- ராஜஸ்தான் பறவைகள் சரணாலய(ம்)த்தில் 374 பறவை இனங்கள் உள்ளன.
- ஒரே சமயத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட முட்டைகளை இடும் பறவை நெருப்புக் கோழி.
- மிகப் பெரிய நீர்ப்பறவை அன்னம்.
- வெட்டுக் கிளியை வேட்டையாடும் பறவை மைனா.
- வான்கோழிகள்அமெரிக்காவைப் பூர்வீகமாகக் கொண்டவை.
- நியூஸிலாந்து நாட்டில் காக்கைகள் கிடையாது.







## எருதுகளும் சிங்கமும்

*நான்கு எருது மாடுகள்*
*ஒன்றாய் வாழ்ந்து வந்ததாம்..!*
*கூட்டாய்ச் சேர்ந்தே எருதுகள்*
*காட்டில் மேய்ந்து வந்ததாம்..!*
*பிடிக்க வந்த சிங்கத்தை..*
*விரட்டி விரட்டி அடித்ததாம்..!*
*எருதுகள் ஒன்றாய் இருந்ததால்*
*சிங்கம் பயந்து சென்றதாம்..!*
*சிறிய சண்டை வந்ததால்*
*எருதுகள் பிரிந்து போனதாம்..!*
*எருதுகள் பிரிந்து போனதால்*
*சிங்கம் மகிழ்ச்சி கொண்டதாம்..!*
*தனியாய் மேய்ந்த எருதுகளை*
*சிங்கம் பிடித்துத் தின்றதாம்...!*



“நம் அறிவிற்கு எட்டாத விடயத்தை அவன் மூளையில் பதித்திருகிறான் என்பதைக் கண்டு நம்மால் வியக்க முடிவதில்லை. மாறாக குழந்தை என்று கூடப் பாராமல் பொறாமை கொள்கிறோம். இன்றைய சமூக சிக்கல்களில் முதன்மை யாகப் பேசப்படும் பாலியல் பிரச்சினையைக் கூட நாம் பெரிதாகப் பேசி அதை வளர்கிறோம்.



# நவீன விரைவு குழந்தைகள்

அருச்சுனன்

குழந்தைகள் இன்று குழந்தைகளாக வளர்க்கப்படுவதில்லை. அவர்களின் அதீத வளர்ச்சி கண்டு நாம் பெருமைப்பட்டாலும், ஒரு புறம் அதன் ஆபத்து கண்டு அஞ்சுகிறோம். அவர்களின் அந்த வளர்ச்சிக்கு நாமும், நமது சமூகத்தின் முக்கிய அம்சங்களான ஊடகங்களான தொலைக்காட்சி, வானொலி ஆகியவை மிகப்பெரும் பங்கு ஆற்றுகின்றன. இன்றைய இயந்திர உலகில் நாம் பணத்தை நோக்கியே பயணித்துக் கொண்டிருக்கிறோம். அந்த வேகமான பயணத்தில் நம் குடும் பங்கள் குப்பைகளாகச் சிதறிக் கொண்டு இருக்கின்றன. அந்த வேகத் தோடு விரைந்து வரமுடியாமல் நம் உறவுகள் பாதியில் இறங்கி விடுகிறது. எமக்கான பாசத்தையும், அன்பையும் புறக்கணித்துவிட்டு எதற்காக இந்த விரைவுப் பயணம் என்று பார்த்தால் ஒன்றுமே இல்லை கடைசியில். நாம் எத்தனை முகப்பூச்சுப் போட்டு முகத்தை மறைத்துக் காட்டினாலும் அந்த வேஷம் சிறிது நேரத்துக்குத் தான் இருக்கும். அதன் பின் அதன் சுய ரூபம் அப்பட்டமாகத் தெரிந்து விடும். அதுபோல நம் மனித மனதின் குணங்களை மறைத்துக்கொண்டு ஒரு உணர்ச்சியற்ற இயந்திரம் போல எம்மால் இருக்க இயலாது. நாம் ஓடிக் களைத்து உட்காரும்போது தான் உறவுகளின் அருகாமையும் அருமையும் புரியும் .

நம் பெற்றோர்கள் எமக்குக் கொடுத்த சத்தான உணவுகளையும், அன்பான வார்த்தைகளையும்,அணைப்பையும், சிறந்த ஒழுக்கங்களையும் இன்று நம் குழந்தைகளுக்குக் கொடுக்க மறந்து கொண்டு இருக்கிறோம். நாமே நம் கலாசாரப் பண்பாடுகளை மறந்து, மேலை நாட்டுக் கலாசார மோகத்தில் மூழ்கிக்கொண்டு இருக்கும் போது நம் குழந்தைகளை தண்டிக்கும் அருகதையை இழந்து கொண்டிருக்கிறோம்.

குழந்தை வளருகையில் அதன் முதல் நாயகன், நாயகி அம்மாவும் அப்பாவும் தான். அவர்களின் செயல்களை, உற்றுநோக்கி உள்வாங்கி தான் அவர்கள் வளர்கின்றனர் அவர்களை முன்மாதிரியாகக் கொண்டுதான் தங்களுடைய நடத்தையை உலகுக்கு வெளிக்காட்டுகின்றன. அப்படியிருக்க நாம் எப்படி இருக்க வேண்டும்? சதா வேலை வேலை என்று இருக்கிறோம். குழந்தைகளோடு அதிக நேரம் செலவிடுவது நம்முடைய ஊடகங்கள் தான். அவை என்ன காட்டுகிறதோ அதைக்கற்றுகொண்டு அதன்படி செயற்படத் தொடங்குகிறது குழந்தை. ஆனால் அதை நாம் தவறு என்று சொல்ல மட்டும் முன் வருகிறோம்.

இன்றைய நவீன வளர்ச்சியில் அனைத்தையும் விரைவாகச் செயற்படுத்த வசதியான பல இயந்திரங்களைப் பயன்படுத்துகிறோம். எல்லாவற்றிலும் விரைவை மட்டுமே எதிர்பார்க்கிறோம் மாவரைக்கும் இயந்திரம் முதல், பாஸ்ட் புட் உணவு வரை எல்லாவற்றையும் நம்மால் ஏற்றுகொள்ள முடிகிறது. ஆனால் ஒரு குழந்தை விரைவாக வளர்ந்து எங்களுக்குத் தெரியாத விசயங்களை எங்களுக்குச் சொல்லி தரும் வகையில் வளர்ந்து வருவதை எம்மால் ஏற்றுகொள்ள முடிவதில்லை. அப்படிச் சொல்லும் குழந்தையை அதிக பிரசங்கி, வயசுக்கேத்த பேச்சு பேசு என்று தடை போட்டுக் கண்டிக்கிறோம். இது எந்த வகையில் நியாயம்.

நம் அறிவிற்கு எட்டாத விடயத்தை அவன் மூளையில் பதித்திருகிறான் என்பதை கண்டு நம்மால் வியக்க முடிவதில்லை. மாறாக குழந்தை என்று கூடப் பாராமல் பொறாமை கொள்கிறோம். இன்றைய சமூகச் சிக்கல்களில் முதன்மையாகப் பேசப்படும் பாலியல் பிரச்சினையைக்கூட நாம் பெரிதாகப் பேசி அதை வளர்க்கிறோம். குழந்தை கேட்கும்போது ஏதோ பேசக் கூடாததைப் பேசுவதாகக் கண்டிக்கிறோம், பாலியல் பற்றிய அவர்களின் சந்தேகங்கள் களையப்படாததால் அதைப் பற்றிய விழிப்புணர்வு என்னவென்று தெரியாமல் வளர்க்கப்படும் குழந்தை பாலியல் பலாத்காரத்துக்கு உட்பட்டுப் பத்திரிகைகளில் அப்பட்டமாகப் பேசப்படும்போது வெட்க படுகிறோம். இந்த நிலை மாற வேண்டும்.

ஆண், பெண் உறுப்புகள் பற்றிய செயற்பாடுகள் அதைப்பற்றிய விழிப்புணர்வை அவர்களுக்குப் புரியும் படி எடுத்துக் கூற வேண்டியது பெற்றோர்களின் கடமை. மற்றவர்களால் அவர்களுக்குப் பாதிப்பு ஏற்படும்போது கத்திக் கூச்சலிடவாவது அல்லது அவர்களைப் பாதுகாத்துக் கொள்ளவாவது அவர்களுக்கு நாம் கற்றுக் கொடுக்க வேண்டும்.

இன்றைக்கு ஊடகங்கள் நம் வீட்டின் உள்ளே பிரவேசிக்கின்றன. அனைத்தையும் குழந்தைகளுக்குக் கற்றுகொடுக்கின்றன. அதில் நல்லவற்றை நாம் தான் எடுத்துக் கூற வேண்டும். குழந்தைக்கு என்ன தெரியும் என்று உதாசீனமாக நினைத்து ஒதுக்காதீர்கள். உங்களை விட எல்லாவற்றிலும் அவர்கள் முன்னோடியாக இருக்கிறார்கள் என்பதை உணர்ந்து செயற்படுங்கள்.

குழந்தைகள் பேசும்போது தடுக்காதீர்கள். எல்லாவற்றையும் முழுமையாகக் கேளுங்கள். நீங்கள் கேட்கவில்லை என்றால் அவர்கள் வேறு யாரிடமாவது பகிர்ந்து கொள்வார்கள். அவர்களைக் குழந்தையாகப் பார்க்காதீர்கள். சக உயிராக மதியுங்கள், அவர்களுக்கு நல்ல முன் உதாரணமாக நீங்கள் இருங்கள். அவர்களிடம் இருந்து நிறைய விடயங்களைக் கற்றுக் கொள்ளுங்கள். நாம் விட்டு வந்தவற்றை, எமக்குத் தெரியாததை அவர்களிடம் கற்றுக் கொள்ளலாம். தந்தை சிவனுக்கே மந்திரத்தைக் கற்றுக் கொடுத்தவன் குழந்தைக் கடவுள் முருகப் பெருமான். அப்படி இருக்கையில் நம் குழந்தைகளும் அவனைப் போல வல்லவன் என்பதை உணருங்கள்.

ஆண், பெண் என்று வகைப் படுத்தாமல் இருவரையும் சமமாக வளர்க்கலாம். அதை இன்றே நம் இல்லங்களில் செயற்படுத்தலாம். நாளைய காத்திரமான உலகை உருவாக்க இன்று நம் மனங்களில் உள்ள அழுக்குகளைக் களைதலே. நாளைய தலைமுறைக்கு நல்லது.

# மனிதனும் வரையறைகளும்

-துஷி

மனிதன் இயற்கையின் படைப்பு. அவன் பூமியில் விழுந்த நொடி முதல் இயற்கையோடு ஒத்து வாழப் பழகிக் கொள்கிறான். காற்றோடு அதன்திசையில் பயணிக்கவும்,சூரியனை எதிர்த்துப் பார்க்கவும், மழையைக் குடிக்கவும், கடலில் மிதக்கவும், அவனால் முடிகிறது. இந்தச் செயல்களைச் செய்ய கால அளவுகள் மனிதனுக்கு மனிதன் வேறுபடுகிறதே. தவிர மற்றவை ஒரே மாதிரித்தான். ஆனாலும் இந்த நீதி நூல்களும் சட்டங்களும் வரையறைகளும் எதற்காக என்று நீண்ட நேரம் மனதில் ஒரு நெருடலை ஏற்படுத்தி கொண்டுதான் இருக்கிறது .

இயல்பிலேயே மனிதன் எதைச் செய்யக்கூடாது என்று சொல்லுகிறோமோ அதை செய்வதேயே முதல் கடமையாகச் செய்கிறான். எதை பார்க்கக் கூடாது என்று கண்களைக் கட்டி போடுகிறோமோ அதைப் பார்க்க அவன் திரையைக் கிழிக்க முற்படுகிறான், எதற்காக இந்த வரையறைகள் வகுக்கபட்டது என்ற வினா அனைவரின் ஆழ் மனங்களிலும் ஏதாவது ஒரு தருணங் களில் வெளிப்பட்டு இருக்கும். ஒருவர் ஒரு கனியை முழுதாய் சுவைத்த பின் அது கசப்பானது அதை உண்ணக்கூடாது என்று சொன்னால் மட்டும் நாம் அதை கேட்டு பின்பற்றுகிறோமோ? என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். தனித்த தருணங்களில் அவற்றின் சுவை அறிய மனம் விளைவதை நம்மால் தடுக்க முடிவதில்லை இது மனிதனின் இயல்பு சட்டங்களை இயற்றும் போது ஏற்படும் இன்பத்தை விட அதை சிதைக்கும் போது பல மடங்கு இன்பத்தை அடைகிறார்கள்.

பொதுவாகவே தன் செட்டையைக் களற்ற முடியாத கிழட்டு பாம்பு பிற பாம்புகளைப் பார்த்து நிர்வாணமாக இருக்கிறாய் என்று கூறுவது போலத்தான் இன்றைய சட்டங்கள் இருக்கின்றன.

திருமண விழாவிற்கு முன்னதாகவே வந்திருந்து, விருந்தை மிகுதியாக உண்ட பின்னர் திரும்பித் தம் இல்லம் செல்லும் போது எல்லா விருந்தும் சட்டத்தை மீறியது என்றும் , விருந்து தருபவர்கள் அனைவரும் சட்டத்தை மீறினவர்கள் என்றும் கூறும் ஒருவரைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்களோ ? அதைத்தான் நானும் நினைக்கிறேன்.

ஆனாலும் இதைக் கூறிய பின்னால் நீங்கள் எதை வேண்டுமானாலும் செய்யுங்கள் என்று உங்களைச் சொல்லுவதாக அர்த்தம் கொள்ள வேண்டாம். காரணம் சுதந்திரம் என்பது அடுத்தவருக்கு இடையூறு விளைவிக்காமல் தன்னளவில் சுவைப்பது. அதாவது மற்றவரின் மீது தடுக்கி விழுந்துவிடாமல் நீங்கள் தனித்துக் களித்து ஆடக் கூடுமானால் எந்த வித சட்டத்திற்கும் அஞ்ச வேண்டியதில்லை .

இதைஎழுதும்போது கலீல் ஜிப்ரானின் வரிகள் தான் நினைவிற்கு வருகின்றன. ஆர்பலீஸ் நகர மக்களே, நீங்கள் முரசத்தை மூடிப் போர்த்து வைக்கலாம். யாழின் நரம்புகளைத் தளர்த்திவிடலாம். ஆனால் வானம்பாடியைப் பண்ணிசைக்காதே என உங்களில் எவராவது உத்தரவிட முடியுமா ?

இந்த வரிகள் எவ்வளவு பெரிய வாழ்வின் தத்துவத்தை உள்ளடக்கி இருக்கிறது. மனிதனின் ஒழுக்கத்தை நான்கு சுவர்களுக்குள் சிறை வைத்துப் பூட்டி விட்டால் மட்டும் அவற்றை அடைத்துவிட்டதாக கூறும் மனிதர்களை என்ன வென்று சொல்லுவது ....அதையும் தாண்டி தன் மனத்தால் சிறகடித்துப் பறக்கும் அவனை எந்தச் சிறையில் வைத்து பூட்டுவார்கள் ??

ஒருவர் ஒரு கனியை முழுதாய் சுவைத்த பின் அது கசப்பானது அதை உண்ணக்கூடாது என்று சொன்னால் மட்டும் நாம் அதை கேட்டு பின்பற்று கிறோமோ? என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

# நல்லூர் பிரதேச சரித்திரத்தை எடுத்தியம்பும் 'சிங்கை ஆரம்'





லக்ஸ்மன்

பொதுவாக நூல் வெளியீடுகளின் போது குறிப்பிட்ட நூல் ஒரு வரலாற்று ஆவணம் என்றும் அந்த நூல், குறித்துப் பேசுவது சகஜம். ஆனால் இன்று வெளியிடப்படும் 'சிங்கை ஆரம்' இந்தப் பிரதேசத்தின் வரலாற்றை உள்ளடக்கிய முழுமையான ஒரு ஆவணம் என்று கூறக்கூடியதாக அமைந்துள்ளது. நல்லூர்ப் பிரதேசம் யாழ்ப்பாணத்தின் முக்கிய அம்சம். சரித்திரகாலம் தொட்டு இன்றுவரை இந்தப் பிரதேசத்தின் முக்கியத்துவம் அனைவராலும் உணரப்படுகின்றது என்று 'சிங்கை ஆரம்' நல்லூர்ப் பிரதேச மலர் வெளியீட்டு விழாவில் நூல்களின் மதிப்பீட்டுரையை நிகழ்த்திய பருத்தித்துறைப் பிரதேச செயலர் கவிஞர் த.ஜெயசீலன் குறிப்பிட்டார். உண்மையில் 'சிங்கை ஆரம்' அந்த அளவுக்கு நல்லூர் பிரதேசத்தின் வரலாற்றை மட்டுமன்றி தொழில் கல்வி போன்ற முக்கிய அம்சங்களையும் உள்ளடக்கியிருந்தது. மாணவர்களுக்கு உகந்த வகையில் உருவாக்கப்பட்டிருந்த இந்த மலரில் மேலும் சில விடயங்களை உள்ளடக்கியிருக்கலாம் என்றும் குறிப்பிட்டிருந்தார். எதிர்காலத்தில் மேலும் பல விடயங்களை வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதேச கலாசார உத்தியோகத்தர் திருமதி ரஜனி குமாரசிங்கம் அது குறித்துத் தெரிவித்தார்.

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் அனு சரணையுடன் நல்லூர்ப் பிரதேச செயலக கலாசாரப் பேரவையும் பிரதேச செயலகமும் இணைந்து நல்லூர் பிரதேசம் குறித்த இந்த மலரை வெளியிட்டிருந்தது. மலரில் வரலாறு, சமயம், பொருளாதாரம், கலைப் பண்பாடு, அபிவிருத்தி என்ற தலைப்புக்களில் துறை சார்ந்த விற்பன்னர்களின் ஆக்கங்கள் மாணவர்களின் தேடலுக்கு உகந்ததாகத் தரப்பட்டிருந்தது. தமிழர்களின் பண்பாட்டு வாழ்வியலுக்குரிய வரவேற்பு நன்றியுரைகளை பிரதேச செயலகத் திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன், கலாசார உத்தியோகத்தர் திருமதி ரஜனி குமாரசிங்கம் ஆகியோர் நிகழ்த்தி பிரதம விருந்தினர் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ் வரனுக்கும் ஏனையோருக் கும் வரவேற்பையும் நன்றியையும் தெரிவிக்க முதலமைச்சர் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

நல்லூர்ப் பிரதேசத்தின் வரலாற்றுப் பிறப்பை எடுத்தியம்பிய பிரதேச செயலரும் விழாத் தலைவருமான பா.செந்தில் நந்தனன் கடந்த காலங்களில் அந்தப் பகுதியின் பிரதேச செயலர்களாக பதவி வகித்த பத்துப் பிரதேச செயலர்களையும் அவர்கள் நல்லூரின் வளர்ச்சிக்குத் தந்த உயரிய பணிகளையும் அதற்கு உறுதுணையாக விளங்கிய செயலக உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்களையும் நன்றியுடன் பாராட்டியதுடன் அவர்கள் தனக்கு வழங்கும் முழு ஒத்துழைப்பின் ஒரு பகுதியாக இன்று ஒரு சிறந்த பிரதேச மலரை வெளியிட முடிந்தது என்று குறிப்பிட்டார்.

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சு இந்தப் பிரதேசத்தின் கலைஞர்களையும் கலை நிகழ்வுகளையும் ஊக்குவிக்கக் கூடியதாக நிதி ஒதுக்கீடுகளை வழங்கியுள்ளதாகவும், இங்குள்ள கலைஞர்கள் உள்ளடங்கிய நூல் ஒன்றையும், கோவில்கள் சார்ந்த இறுவட்டு ஒன்றையும் இன்று இந்த சிங்கை ஆரம் மலரையும் வெளியிடவும், மூத்த கலைஞர்களைக் கௌரவித்து அவர்களுக்கான கலைஞானச் சுடர் விருதை வழங்கவும் வடக்கு மாகாண சபையினதும் கல்வி பண்பாட்டலுவல்கள் .அமைச்சினதும் உதவிகள் உறுதுணையாக இருந்துள்ளன என்றும் பிரதேச செயலர் செந்தில்நந்தனன் குறிப்பிட்டார்:

வடக்கு முதலமைச்சர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தனது உரையில் எமது பிரதேசம் வரலாற்றுச் சிறப்புக்களைக் கொண்டிருந்த போதும், அவற்றை நாம் பிறநாட்டவர்களினதும் தென் பகுதியிலிருந்தும் எழுதப்பட்ட ஆவணங்களைக் கொண்டே தெரிந்து கொள்ள வேண்டியுள்ளது என்று வருத்தப்பட்டதுடன், சித்தர்களின் வார்த்தைகளில் பொதிந்துள்ள உண்மைகளையும், தான் சித்தர்களுடன் பழகியவர் என்ற வகையில் அவர்கள் நடப்பதை நடக்கப்போவதை எப்படி எல்லாம் எடுத்துக் கூறுவார்கள் என்பதை யும் நினைவு கூர்ந்து சிங்கை ஆரம் நமக்குக் கிடைத்த பெரும் பொக்கிஷம் என்பதையும் ஞாபகமூட்டினார்.

இந்த மலரை ஆக்குவதற்கு கலாசார உத்தியோகத்தர் திருமதி ரஜனி, உதவித் திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன் மற்றும் மலர்க் குழுவினர் எடுத்துக் கொண்ட முயற்சி கனதியான ஒரு பிரதேச மலர் உருவாகக் காரணமாக இருந்துள்ளது. பிரதேச செயலர் செந்தில்நந்தனன், உதவிப் பிரதேச செயலர் திருமதி சுபாசினி மதியழகன், நூலின் சிறந்த வடிவமைப்புக்கும் தரமான ஆக்கங்களைப் பெறுவதற்கும் எடுத்த முயற்சிகளையும் பேராசிரியர் எஸ். கிருஷ்ணராசா வழங்கிய ஒத்துழைப்புக்கும் கலாசாரப் பேரவை தனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டது.

நூலின் முதல்பிரதியை வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனிடமிருந்து தொழிலதிபர் மோகனதாஸ் பெற்றுக்கொண்டார். சிறப்புப் பிரதிகளை உதவிப் பிரதேச செயலர் திருமதி சுபாசினி மதியழகன் யாழ். மாவட்ட கலாசார உத்தியோகத்தர் திருமதி சு.விஜயரட்ணம் ஆகியோர் வழங்கினார்கள்.


சிங்கைஆரம் நூல் வெளியீட்டு விழாவைச் சிறப்பித்த முதலமைச்சருக்கு பிரதேச செயலர் செந்தில்நந்தனன் பொன்னாடை போர்த்து மாலை அணிவித்து நினைவுப் பரிசில் வழங்கிக் கௌரவித்தார். நல்லூர் பிரதேச கலைஞர்கள் உத்தியோகத்தர்கள் பொதுமக்களெனப் பெருந்திரளனாவர்கள் கலந்து கொண்ட ஒரு நூல் வெளியீட்டு விழாவாக அமைந்திருந்தது குறிப்பிடத் தக்கது.



# மனசு போல வாழ்க்கை

வலையவன்

நல்ல சிந்தனை வேண்டும் என்பதைத் திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டியிருக்கிறது. கெட்ட சிந்தனை எளிதில் வருகிறது.
ஒரு கண் பார்வையற்ற மனிதன் மலை ஏறிச் சிகரத்தைத் தொட்டான் என்று செய்தி வந்தால் கூடப் பெரிய ஊக்கம் தோன்றுவதில்லை. சண்டையில் சதக் சதக் என்று குத்தினான் என்றால் ஆர்வமாய்ப் படிக்கிறோம். தொலைக்காட்சி நிகழ்ச்சியில் ஒரு பொருளாதார நிபுணர் பேசினால் அலுப்பு வருகிறது. ஆனால், அதிலேயே ஒரு மாமியார் மருமகளைக் கொடுமைப்படுத்தினால் கண் இமைக்காமல் பார்க்கிறோம்.
ஒருவரைப் பயமுறுத்துதல் எளிது. பெரிய அறிவு ஏதும் வேண்டியதில்லை. ஒரு பொய்த் தகவல் கூடப் போதும். ஆனால் ஒருவரை மகிழ்விப்பது பெரும் பணி. நிறையத் திறன் தேவைப்படுகிறது.
உங்கள் அலுவலகத்தில் வெடி குண்டு மிரட்டல் உள்ளது என்று பதற்றமாக யாராவது சொன்னால், எனக்கு ஏதும் மின்னஞ்சல் வரவில்லையே! வெடி குண்டு வைத்ததற்கு ஏதும் சாட்சி உண்டா? என்று எந்த அறிவு ஜீவியும் கேட்கமாட்டார். முதல் வேலையாக எழுந்து வெளியே ஓடுவார்.
அதேபோல, கோபப்படுத்துவதும் எளிது. ஒரு சிறு கொசுவால் கூட அதைச் செய்ய முடியும். உங்களுக்கு வேண்டாதவர் பற்றிய சிறு எண்ணம் கூடப் போதும். அதனால்தான் மிகச்சிறிய தூண்டுதலில் கூடப் பெரும் வன் முறைகள் நடந்துவிடுகின்றன.
ஏன் இப்படி? எமது மூளை அப்படி உருவாகியுள்ளது. அதுதான் காரணம். அடிப்படையில் எமது மனித மூளை இப்போதும் முக்கியமாக ஒரு மிருக மூளை தான். முதுகுத் தண்டின் மேற்பகுதியில் இணைக்கப்பட்டுள்ள மூளையின் பின் பகுதி தான் புலனறிவுகளின் செயலகம்.
மிருகத்தின் முக்கியத் தேவைகள் தனது உயிர் காப்பதும், இரை தேடுவதும், இனப்பெருக்க உணர்வும் தான். அதற்குத் தேவையான செயல்பாடுகள் அடிப்படையான ஆதார உணர்வுகளைச் சார்ந்தவை. அச்சம்தான் எமது முதல் உணர்ச்சி. கோபம் கூட அடுத்த கட்டத்தில்தான் தோன்றுகிறது. அதனால்தான் அச்சத்தை எமது மூளை தேடிப் பிடித்து உள்வாங்கிக்கொள்கிறது.
உங்கள் குழந்தையின் உணவில் போதிய போஷாக்கு இருக்கிறதா? உங்கள் பற்பசையில் உப்பு இருக்கிறதா? உங்களுக்குக் கொஞ் சமாவது துப்பு இருக்குதா? என்றெல்லாம் கேட்கும் விளம்பரங்கள் அடிப்படையில் அச்சத்தை உருவாக்கி அதன் மூலம் விற்பனையை வளர்க்க நினைக்கின்றன. காரணம் அச்சம் நமக்குச் சுலபமாக வரும்.
மூளையின் முன்பகுதி நவீனமானது. பல ஆயிரம் வருடங்களின் பரிணாமத்தில் வந்த நிர்வாக மூளை அது. சிந்தனை, பகுத்தறிவு, திட்டமிடுதல், செயலாக்கம் என மனிதனின் முன்னேற்றத்துக்கு ஆதாரமான அனைத்தும் இங்குதான் செயற்படுத்தப்படுகின்றன.
அதனால் கூர்ந்து நோக்குவது, யோசிப்பது, புதிதாகப் படைப்பது, நகைச்சுவை, நம்பிக்கை எல்லாம் சற்றுப் பக்குவமான மனநிலையில் மட்டுமே ஏற்படுபவை.
அடிப்படை உணர்ச்சிகள் எதிர் மறையான கெட்ட எண்ணங்களை வளர்க்கும். பக்குவப்பட்ட உணர்ச்சிகள் நேர்மறையான நல்லஎண்ணங்களைவளர்க்கும். இது இரு வழிப்பாதையும் கூட. எதிர்மறை எண்ணங்கள் அச்சம், கோபம் போன்ற அடிப்படை உணர்ச்சிகளை வளர்க்கும். நேர்மறை எண்ணங்கள் மகிழ்ச்சி, நம்பிக்கை போன்ற பக்குவப்பட்ட உணர்ச்சிகளை வளர்க்கும்!
இன்னொரு விடயமும் உள்ளது. நெருக்கடியான நிலையில் பின் மூளை உடனடியாகச் செயற்படும். முன் மூளை சற்று நேரமெடுக்கும்.





நீங்கள் உங்கள் மனைவியிடம் சின்ன வாக்குவாதம் செய்கிறீர்கள். அவர் சொன்ன ஒரு வார்த்தையில் சற்று நிதானமிழந்து நீங்கள் பதிலுக்கு அவர் குடும்பத்தையும் சேர்த்துத் திட்டிவிடுகிறீர்கள். பின்னர் சில நொடிகளில் செய்த பாதகமும் அதன் பின் விளைவுகளும் புரிகின்றன.
உங்கள் மனைவி ஒத்துழையாமை இயக்கம் நடத்தலாம். பதிலுக்கு உங்களது குடும்பத்தினரின் மொத்த வரலாறும் வரிசை மாறாமல் வரலாம். குறைந்த பட்சம் அன்றைய நிம்மதியும் தூக்கமும் போகலாம். இதெல்லாம் புரிந்து, நான் அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை..! என்றெல்லாம் சொல்லிச் சமாளிக்கிறீர்கள்.
ஆனால் உங்கள் பின் மூளை செயற்பாட்டின் தாக்குதல் உங்கள் மனைவியின் பின் மூளையைத் தாக்க, எல்லாம் சொல்லிட்டீங்க. உங்களைப் பற்றித் தெரியாதா? என்று கோபத்தில் எழுந்து போகிறார்.





பின்னர் அவரது முன் மூளை சற்று பகுத்தறிவுடன் யோசித்து, குழந்தைங்க முன்னாடி சண்டை போட்டா அது அவங்களை பாதிக்கும். ஹும்.. அவர் எப்பவும் இப்படித்தான் புதுசா என்ன? என்று தாமதமாகச் சமாதானமாகிறார்.

**ஓர் உறவில் ஏற்படும் உரசலின் அடிப்படை இது**

அதனால்தான் சொன்னேன். அச்சம், கோபம் போன்ற எதிர்மறை எண்ணங்கள் எல்லாம் முந்திக் கொண்டு வருகின்றன. அமைதி, மகிழ்ச்சி, நம்பிக்கை போன்ற சாதக எண்ணங்கள் அவ் வளவு இயல்பாக வருவதில்லை. அதற்கு அதிக முயற்சியும் பயிற்சியும் தேவைப்படுகின்றன.
இந்திய கிரிக்கெட் அணி ஆஸ்திரேலியாவிடம் தோற்றதும் என்னென்ன கருத்துகள் வந்தன? கோஹ்லி சரியில்லை. எல்லாம் அனுஷ்கா ஷர்மா ராசி. தோனியே சொதப்பிட்டார் இப்படி வந்தவை தான் அதிகம். அன்று ஆஸ்திரேலியா நம்மை விட நன்றாக விளையாடியது என்று சொல்லியவர்கள் எம்மில் எத்தனை பேர்?
வாழ்க்கையில் சிக்கல்கள் இல்லை. அதை நாம் பார்க்கும் கண்ணோட்டத்தில்தான் சிக்கல்கள் உள்ளன. எமது வாழ்க்கையில் நடப்பவை எம்மைத் துன்புறுத்துவதில்லை. அதைப் பற்றி நாம் எண்ணும் எண்ணங்கள்தான் எம்மைத் துன்புறுத்துகின்றன.
எம்மால் எமது எண்ணங்களையும் உணர்வுகளையும் மாற்ற முடியும். மூளையும் மனமும் இசைந்து அற்புதங்கள் நிகழ்த்தலாம்! இதுதான் உலகின் அத்தனை மதங்களும் ஒரே குரலில் சொல்லும் மந்திரம்!

---

# பயனுள்ள சொற்கள்

.சோபா

எமது எண்ணங்களை அப்படியே எழுத்தாலோ சொற்களாலோ வடிக்க முடிகிறதா என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். முழுதாய் வடிக்கும் சொற்கள் மிகக் குறைவு, தான் நினைப்பதைப் பாதி மட்டுமே அடைத்து அனுப்ப இயலுகிறது. மீதங்கள் அப்படியே நம் மனக் கிடங்குகளில் அடைபட்டுக் கிடக்கிறது .
எமது எண்ணங்கள் வலிமையானவை, விரிவானவை, வேகம் கொண்டவை. எமது எண்ணத்தை சொற்களால் மொழி பெயர்க்க முயற்சி செய்கிறோம். எமது சிந்தனையை சொல் வடிவமாக மாற்றும் போது அது நீர்த்துப் போகிறது. எண்ணங்களுக்குத் தகுந்த சொற்கள் கிடைக்காமல் நாம் சிரமப்படுகிறோம்.
அந்தச் சரியான தாய்ச் சொல் கிடைக்காத போது சிலநேரம் நாம் செவிலித்தாயைப் போலசில உபரி வார்த்தைகளை பயன்படுத்துகிறோம். எம்முடைய சொற்களில் எண்ணங்கள், அனுபவங்கள், குணங்கள் அதிகம் உணருவதை உணர்வின் மூலம்தான் முழுமையாக வெளிப்படுத்த முடியும். சொற்களின் மூலம் வெளிபடுத்த இயலாது .
பேசும் போது முழுவதுமாக எமது எண்ணத்தை வெளிப்படுத்த இயலாத போது சோர்வு ஏற்படுகிறது. அந்தச் சோர்வு எம்மை மௌனமாக்குகிறது . சரியான சொல்லைத் தேர்ந்தெடுக்க நிறையத் தேட வேண்டும். தங்கள் எண்ணத்தை ஓரளவாவது வெளிபடுத்தும் சொற்கள் கிடைக்காதவரை நாம் எழுதக் கூடாது. அப்படியே எழுதினாலும் அது திருப்தியைத் தருவதாக இருக்காது .
சொற்களைத் தேடுவது என்பது எமது எண்ணங்களை சலிப்பது ஆகும். ஒரு தேனீ பல்வேறு விதமான பூக்களை ஆராய்ந்து புலனறிந்து தேனைத் திரட்டிக் கொண்டு வந்து தேன் கூட்டில் சேகரிக்கிறது. அதற்கு எத்தனை நாள்கள்செலவிட்டு இருக்கும் அதன் உழைப்பை நாம் எண்ணி பார்ப்பதில்லை அதைத் துரத்தி விட்டு அபகரிக்கவே நாம் பார்க்கிறோம்.




அந்தத் தேனீக்கள் மகரந்தத்தைத் தேர்ந்தெடுத்து தேனாக ரசவாதம் செய்வது போல நாமும் சொற்களை தேடிச் சலித்து எமது எண்ணங்களுக்குத் தகுந்த சொற்களை மொழி பெயர்க்க வேண்டும் .
மல்லிகையின் மணமும் ரோஜாவின் மணமும் வேறாக இருந்தாலும், அவற்றை வேறு வகைப் படுத்தி சொற்களால் சொல்ல இயலுவதில்லை. அப்படித்தானே அன்பை, காதலை, மௌனத்தை எம்மால் மொழி பெயர்க்க முடிவதில்லை.
காதல் வந்த பின் கதையும் கவிதையும் எழுதுபவர்களைப் பாருங்கள். அந்தக் காதலை சரியான சொல்லில் அவர்களால் சொல்ல முடியாமல் திணறுவார்கள். ஆனால் முழுமையாக உணருவார்கள் அப்படிதான். எந்தச் சொல் எமது எண்ணத்துக்கு நெருக்கமாக இருக்கிறதோ அதை அங்கீகரிக்கிறோம்..
ஆகவே சொற்களைத் தேர்ந்தெடுப்பதில் கவனம் எங்கள். நிறையத் தேடுங்கள். சரியான சொற்களில் எண்ணங்களைப் பரிமாறுங்கள். அப்போது அதைப் பருகுபவர்களால் அதன் முழுமையை உணர முடியும். அதன் வீரியம் தெரியும். வலிமை புரியும்.
அதேபோல சொற்கள் சொல்லுபவர்களை விட கேட்பவர்களைத் தான் பாதிக்கிறது. ஆகையால் கவனமாகச் சொற்களை உபயோகியுங்கள். தேவையற்ற பயனற்ற சொற்களை நீங்கள் சொல்லும் போது அது கேட்பவரின் செவியை ஊராய்த்து செல்லுமே தவிர பயன் இருக்காது .
எனவே புலன்களை திறந்து சொற்களை கவனமாக உள்வாங்குங்கள். அவை முழுமையாக உங்களுக்குள் வந்தபின் அதன் சுவையை அறியுங்கள். அதன் பின்னர் மற்றவர்களுக்குப் பரிமாறுங்கள். அப்படிப்பட்ட தேர்ந்த சொற்கள் கல்வெட்டுகளை போல சொல்வெட்டுகளாய் மனதைச் சொக்க வைக்கும்.

# வீண் வார்த்தைகள்

(மிது)



பேச்சு எங்கள் மூச்சு என்று முழக்கமிடும் ஒரு சிலரைப் பார்க்கும் போதெல்லாம் இவர்களை பேசவிடாமல் சில நாள்கள் மௌன விரதத்தைக் கடைப் பிடிக்க வைத்தால் மூச்சை விட்டுவிடுவார்களோ ? என்ற எண்ணம் எமக்குள் வந்து போகும்.

வார்த்தைகள் தான் எமக்குள் எத்தனை பாதிப்புகளை உருவாக்குகிறது. பேசுவதுதான் பிரதானமாக இருக்கிறது பேசாமல் இருப்பவர்களை எவரும் கண்டு கொள்வதில்லை. எப்போதும் பேசிக் கொண்டு இருப்பவர்களையும் எவரும் கண்டுகொள்வதில்லை. அப்படியானால் எப்படித்தான் பேசுவது என்று கேட்கிறீர்களா?

நம் பேச்சுக்களில் பெரும்பாலும் அர்த்தமற்றவைகள் நிறைந்து காணப்படுகின்றன. ஒரு வரியில் சொல்ல வேண்டியதை பல பக்கங்களுக்குச் சொல்லுகிறோம் சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லுகிறோம். நாம் பேசும் வார்த்தைகள் பெரும்பாலும் கடன் வாங்கப்பட்ட வார்த்தைகளாகவே இருக்கிறது. நாம் உருவாக்கும் வார்த்தைகள் மிக குறைவானவை தான்.

நாம் பேசியதை நாமே கேட்க நேர்ந்தால் நாம் நிச்சயம் வருத்தப்படுவோம். அந்த அளவுக்கு அர்த்தமற்று பேசி இருப்போம். நம் பேச்சில் எத்தனை வீண் வார்த்தைகள் , எத்தனை உயிர்ப்பற்ற சொற்கள், காரணமற்ற நகைச் சுவைகள் என்று நாமே தலை குனியும்படியான வார்த்தைகள் அதிகமாக இருக்கும்.

அதற்குக் காரணம், பேசினால் மட்டுமே எம்மை எல்லோரும் கவனிப்பார்கள், எல்லோரைவிடவும் முன்னணியில் இருக்க வேண்டும் என்ற வேட்கை எம்மைப் பயனற்ற வார்த்தைகளின் எண்ணிக்கையைக் கூட்டத் தூண்டுகிறது. அதனால் எவரிடம் பேசுகிறோம் எதற்காகப் பேசுகிறோம், எந்த இடத்தில பேசுகிறோம் என்பதையெல்லாம் பொருட்படுத்தாமல் பேசிக்கொண்டே இருக்கிறோம்.

நமக்கு தெரிந்ததைப் பேச வேண்டும் என்பதே எமது இலக்காக இருக்கிறது. எதிரே இருப்பவர்கள் அதைக் கேட்பார்களா ? அவர்களுக்கு அதைப் புரிந்துகொள்ளும் திறன் இருக்கிறதா ? எம் பேச்சில் அவர்களுக்கு விருப்பம் இருக்கிறதா என்பதைப் பற்றி எல்லாம் நமக்கு கவலை இல்லை. நாம் பேச வேண்டும் அவ்வளவே.

நம் பேச்சில் எவ்வளவு உண்மை இருக்கிறது என்று நாம் உணர்வதில்லை. உதட்டில் இருந்து பேசுகிறோமா, உள்ளத்தில் இருந்து பேசுகிறோமோ, உண்மையைப் பேசுகிறோமா இல்லை ஊமையாய் பேசுகிறோமா என்றெல்லாம் ஒருபோதுமே ஆராய்ந்த தில்லை.

எதற்கு இந்தப் பேச்சுக்கள் இவை இல்லாமல் நாம் இருக்க முடியாதா, இயங்கமுடியாதா ? என்று என்றாவது யோசித்து இருக்கிறோமா ? இல்லை என்றால் உடனே யோசியுங்கள். பேச்சு என்பது கருத்துப் பரிமாற்றத்திற்கான ஒரு வழி. அதைஉபயோகிப்பதில்கவனம்கொள்வோம்.

தெரிந்தகதைதான் ராமாயணத்தில்சீதையைத் தொலைத்து விட்டு தேடும் ராமனுக்கு எந்த வார்த்தையைச் சொன்னால் அவன் பதற்றம் குறையும் அவனுக்கு மகிழ்ச்சி ஏற்படும் என்று உணர்ந்த அனுமன் கண்டேன் சீதையை என்று சொல்லுவதாகக் கம்பன் சொல்லுகிறார். இந்த வார்த்தை எத் தனை அர்த்தம் நிறைந்தது என்று நீங்களே உணருங்கள்.

ஒருவன் தன் உயிரினும் மேலான தன் துணைவியைக் காணாது தவித்துக் கொண்டு இருக்கிறான். அவளைத் தேடும் பொருட்டுச் சென்றவன் வருகிறான். அவன் சொல்லும் வார்த்தையில்தான் இவன் உயிர் அடங்கி இருக்கிறது என்கிறபோது அவன் எப்படி சொல்ல வேண்டும். நான் சீதையைத் தேடிப்போனபோது ஒரு பாலம் வந்தது. அந்தப் பாலத்தில் தண்ணீரின் அளவு அதிகமாக இருந்ததால் அதைக் கடந்து செல்ல இயலவில்லை. ஆகையால் ஒரு மரத்தை எடுத்துக் கொண்டு தண்ணீரைக் கடந்து அக்கரைக்குச் சென்று அதன் பின் அந்த வனாந்தரத்தின் வழியாக சீதா தேவியைத் தேடிக் கொண்டு போனேன். அதன்பின் ஒரு மரத்தடியில் அவர்களைக் கண்டேன். இவ்வாறு நீட்டி நெளித்து ஒரு விசயத்தை அவன் சொல்லியிருந்தால். ராமன் தன் உயிரை விட்டிருப்பார். இல்லையெனில் அனுமனின் உயிரை எடுத்திருப்பார். இந்த இரண்டில் ஏதாவது ஒன்றுதான் நடந்து இருக்கும்.

தேவையான வார்த்தைகளை விட தேவையற்ற வார்த்தைகள் அதிகமாகும்போது உறவுகளுக்குள் முறிவுகள் ஏற்படுகிறது. ஒரு கட்டாயத்துக்காக , சில நிர்ப்பந்தங்களுக்காக, சில தேவைகளுக்காக மட்டுமே பிறர் பேச்சைக் கேட்பது போல பாவனை செய்வார்கள். அந்தத் தேவைகளும், கட்டாயமும் இல்லாத நேரத்தில் நீங்கள் பேசிய அர்த்தமற்றவைகளை உங்கள் முன் முகச்சுழிப்போடு கொட்டிச் செல்வார்கள். அதைத் திரும்பப் பெறும்போது மட்டுமே அதன் கடினத் தன்மையை நீங்கள் உணருவீர்கள். ஆகையால் அவசியம் ஏற்படும்போதும் கூட சிக்கனமாகச் செலவிடுங்கள் வார்த்தைகளை.

ஒரு சொல் ஒருவரை உயிர்ப்பிக்கும். அதே போல ஒரு சொல் ஒருவரின் உயிரையும் பறிக்கும்.

உயிர்ப்பிக்கும் சொல்லுக்கு நம் அனுமனின் பதில் சரியாக இருக்கும். உயிர் பறிக்கும் சொல்லுக்கு எமக்குத் தெரிந்த கதை ஒன்று சிலப்பதி காரத்தில் கோவலன் தனது மனைவியின் காற்சிலம்பை விற்க மதுரைக்கு வருகிறான். கடை வீதியில் அதை விற்க முயலும்போது அரண்மனைக் காவலர்களால் அரசியின் சிலம்பைத் திருடியதாக குற்றம் சாட்டி அரசனிடம் செய்தியைச் சொல்லுகிறார்கள். அப்போது அவனைக் கொண்டு வா என்று சொல்வதற்குப் பதிலாக கொன்று வா என்று வார்த்தையை பிறழ்ந்து சொன்னதில் கோவலன் கொலை செய்யப்படுகிறான் காவலர்களால்.

நாம் சொல்லும் ஒரு சொல்லில் அடுத்தவர்கள் வாழ்வு அடங்கி இருக்கிறது. அதனால்தான் வள்ளுவர் கூட தீயினால் சுட்ட புண் உள்ளாறும் ஆறாதே நாவினால் சுட்ட வடு . என்ற குறள் மூலம் ஒருவருக்கு தீயினால் ஏற்படும் புண் கூட ஆறிவிடும். ஆனால் ஒருவரை நம் நாவினால் உருவாகும் வார்த் தைகளால் ஏற்படுத்தும் புண் ஆறாமல் அவர்கள் மனதில் வடுவாக இருந்து வலியைக் கொடுக்கும் என்று கூறுகிறார். முடிந்த வரை ஒருவரை உயிர்ப்பிக்கும்

# மனம் ஒரு குரங்கு

(றஜி)

மனம் ஒரு குரங்கு என்று சொல்லக் கேட்டு இருக்கிறேன். குரங்கு பல மரங்களைத் தாண்டும் என்றும் நிலைத்து ஒரு மரத்தில் வாசம் செய்யாது என்றும் சொல்லுவார்கள். அது மிகப்பெரும் உண்மை. அந்தக் குரங்கில் இருந்து பிறந்திருக்கிறோம் என்பதாலோ என்னவோ நாமும் அப்படிதான் இருக்கிறோம். ஒரு இடத்தில் நிலைத்து நிற்பதில்லை .அப்படியே நின்றால் மரமாகிப் போவோம். ஆகையால் தாவி கொண்டே இருப்பது இயல்பாகிப்போனது .

மாற்றங்களை வரவேற்கும் மனித மனம் இடம்பெயர்தலை வரவேற்கும் மனம் மனம் பெயர்வதை மட்டும் ஏன் மறுக்கிறது என்று நீண்ட நாள்களாக எனக்குள் சுழலும் இந்த கேள்விக்கு விடை பகல முனைகிறேன்.

இன்றைய பெரும்பான்மையான பிரச்சினை மன முறிவாக இருக்கிறது. அதற்குக் காரணம் அதீதமான எதிர்பார்ப்பு. அந்த எதிர்பார்ப்பு நிறைவடையாதபோது ஏற்படும் மனச்சிதைவு, மன அழுத்தம் இவற்றால் ஏற்படும் பாதிப்புகளால் வாழ்க்கை வெறுமையாகி விடுகிறது.

அந்த வெறுமையான வெற்றிடம் அப்படியே இருப்பதில்லை. சூழல் காரணமாக இயற்கையின் சீற்றம் காரணமாக காற்றடித்து நிரம்பும் மண் மேடு போல, நம் வாழ்க்கையிலும் எதிர்பார்த்தது போல நிறைவாய் இருப்பது போல வேறு ஒன்றை நோக்கி மனம் தாவும். ஆனால் அதுவும் எம்மை முழுதாய் நிறைப்பதில்லை .இப்படியே மனம் தாவிக்கொண்டே இருக்கிறது அன்பு , பாசம் காதல்,பணம் என்று எதையாவது நோக்கி.

நம் மனம் பெரும் ஆழி. அதை நிறைப்பது அவ்வளவு எளிதல்ல ஆனால் நம் மனம் எப்போது நிறையும் என்றால் போதும் என்ற பக்குவத்துக்கு மனதளவில் எம்மைத் தயார் செய்யும் போதுதான் நிறைகிறது. அதற்குத் தான் சமூகம் பல வரைமுறைகளை ஏற்படுத்தியது. திருமணம் மூலம் ஒருவனுக்கு ஒருத்தி என்றும் இறை நம்பிக்கை மூலம் தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்ளவும் அடுத்தவருக்கு இடை யூறு செய்யாமல் இருக்கவும் ஒரு பயத்தை எமக்குள் ஏற்படுத்தியது . எம்மைச் சுற்றி ஒரு வட்டத்தைப் போட்டு உலகம் இவ்வளவுதான் என்று ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தி மனதை போதும் என்ற நிறைவான மன நிலைக்கு எம்மைத் தயார்ப்படுத்தியது . ஆனால் உலகம் பெரும் காடு எல்லையற்றது என்பதை நாம் அறியும் போது, நம் மனம் மீண்டும் தாவுகிறது. அந்த எல்லையற்ற பரப்பை எட்டிப்பார்க்கத் துடிக்கிறது. ஒரு பகுதியைப் பார்த்தபின் சலிப்பு ஏற்படுகிறது. அடுத்த பகுதி இன்னும் அழகாய் இருக்கும் என்று எதிர்பார்த்து அங்கு தாவிச் செல்லுகிறது. ஒரு கட்டத்தில் முன்பு இருந்த பகுதியே பரவாயில்லை என்று திரும்பிவிடுகிறது . அக்கரைக்கு இக்கரை பச்சை என்று சொல்லுவார்களே. அது போலத்தான் வாழ்க்கையும் தூரத்திலிருக்கும் மேகம் போல, அதன் பக்கம் போகும் போது பனிபோல விலகியதும் கீழே இருக்கும் பூமி அழகாய் தெரியும் .

எனவே எதையும் ஒரு இடைவெளியில் தொலைவில் நின்று பார்க்கும் போது முழுதாய் உணரமுடியும் அருகில் பார்க்கும் போது அதன் ஒரு பகுதி மட்டுமே பூதாகரமாய் நம்மை அச்சுறுத்தும் . எனவே போதும் என்ற மன நிலைக்கு நம்மைத் தயார்ப் படுத்தலாம்.







## வவுனியா பிரதேச செயலகம் நடத்திய கலை இலக்கியப் பெருவிழா






வவுனியா பிரதேச செயலகமும், பிரதேச கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்திய கலை இலக்கியப் பெருவிழா வவுனியா கலாசார மண்டபத்தில் அண்மையில் பிரதேச செயலாளர் க. உதயராசா தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் சிறப்பு விருந்தினராக் க. சிதம்பரநாதன், வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி க.சத்திய சீலன்,வவுனியா நகர சபைச் செயலாளர் மற்றும் வவுனியா பிரதேச சபை ஊழியர்கள் பிரதேச கலாசாரப் பேரவையினர், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். நிகழ்வுகள் காலை, மாலை என இரு அமர்வுகளாக இடம்பெற்றன. நிகழ்வில் 'பள்ளிப்பட்டாம் பூச்சி' என்ற பாடல் இறுவட்டு வெளியீட்டு விழா, கவியரங்கம் மற்றும் பட்டிமன்றம் என்பன இடம்பெற்றன. தொடர்ந்து வவுனியா பிரதேச மலர் வெளியீடும் தேசிய ரீதியில் விருது பெற்ற கலைஞர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் இடம் பெற்றது.

(வ-421-402)

# வேண்டாம் முகமூடி உறவு

எம். சடகோபன்

உலகில் உறவுக்கு என்று ஒரு தனி அர்த்தம் உள்ளது. ஆனால், நவீன தொழில்நுட்பக் காலத்தில் உறவுகள் அனைத்தும் முகம் இல்லாமல் தொடர்கின்றன என்பதுதான் யதார்த்த உண்மை. மாயாஜால உலகில் எல்லாமே முகமூடி அணிந்த உறவுகளாகத் தொடர்வது தான் அதைவிட வேதனை.

தாய்-தந்தை, அண்ணன்-தம்பி, அக்காள்-தங்கை, மாமனார்-மாமியார், சகோதரன்-சகோதரி, தாத்தா-பாட்டி, பேரன்-பேர்த்தி என்று உறவுகளின் வரிசை நீண்டு கொண்டே செல்கிறது.

மேலும், உற்ற நண்பன், உற்ற நண்பி என்று அலுவலகங்களிலும் நட்பு என்ற பெயரிலும் உறவுகள் தொடர்கின்றன. எல்லாமே பணம் என்று ஆகிவிட்ட இந்த உலகில் உறவுகள் அனைத்தும் முகமூடி அணியத் தொடங்கிவிட்டன.

தந்தை, தாயை ஏமாற்றும் பிள்ளை. பணத்துக்காக சகோதரனையே வசைபாடும் சகோதரி. தனது சொந்த விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக மாமனார்-மாமியாரை உதறிவிடத் துடிக்கும் மருமகள். தனது ஆணவத்துக்கு அடங்காத மருமகளை விரட்டத் துடிக்கும் மாமியார். ஏதேதோ காரணங்களைக் கூறி, தாலி கட்டிய கணவனைக் கூட மறக்கத் துணியும் மனைவி. இதேபோல், அலுவலகங்களில் நட்புடன் பழகுவதுபோல் காட்டிக் கொள்ளும் பலர், ஒருவரை ஒருவர் புறம் பேசி தான் மட்டும் முன்னேற்றம் காண முகமூடி அணிகிறார்கள். இவ்வாறு அனைவரும் முகமூடியுடன் உறவுகளைத் தொடர்கின்றனர்.


சகோதரி ஸ்தானத்தில் வைத்துப் பேசிக் கொண்டிருக்கும் ஒரு பெண்ணை, பலர் முன்னிலையில் நகைச்சுவை என்ற பெயரில் விமர்சித்துக் கேலிப் பொருளாக்குவது, பிற ஆண்களுடன் இணைத்துப் பேசுவது போன்றவற்றை தன் உடன் பிறந்த சகோதரிக்கும் செய்ய முனைவார்களா..? இல்லையே..!

உடன் பிறப்பின் மானத்தை மட்டும்தான் காப்பார்கள் - பிற பெண்களின் மானத்தைப் பற்றி அவர்களுக்கு கவலை இல்லையா?

அண்ணன்-தம்பியுடன் பிறந்த பெண்கள் மற்றைய ஆண்களுடன் இயல்பாகப் பேசுவதற்குத் தயங்கமாட்டார்கள். தங்களைவிட மூத்தவர்களை அண்ணன் என்றும், இளையவர்களை பெயர் சொல்லியோ, தம்பி என்றோ அழைப்பார்கள். ஆனால், கூடப் பிறந்தவர்கள் அனைவரும் பெண்களாக இருந்துவிட்டால் எளிதில் வெளி ஆண்களுடன் பழகமாட்டார்கள் என்று நினைக்கிறோம்.

இந்தக் கலியுக காலத்தில் அப்படி இல்லையே..! பொதுவாக அண்ணனுடன் நண்பர்கள் வீட்டுக்கு வந்தால், மகளிடம் அம்மா சொல்வாள், அண்ணன்னு கூப்பிடு என்று. அப்படித்தான் நடக்கும். ஆனால், நாளடைவில் அண்ணனுடன் வந்தவர்களில் ஒருவரைக் காதலித்து கைப்பிடிக்கும் மகளின் அறியாமையை எண்ணிச் சொல்ல முடியாமல் தவிப்புக்கு உள்ளாகும் ஏராளமான தாய்மார்களைக் காண்கிறோமே.

இது இப்படி இருக்கையில், உறவுகளை எப்படிக் கையாள வேண்டும் என்று பண்பு தெரிந்த ஒருவர் 'முகமூடி' போட்டுக் கொள்ளாதவராகத்தான் இருப்பார். தன்னைக் குறித்து யாரும், எதுவும் சொல்லிவிட்டுப் போகட்டும்-கவலை



இல்லை. 'நான், நானாகத்தான் இருப்பேன்' என்று சொல்லிக் கொள்ளும் அவர், முகமூடி அணிந்து மனத்துக்குள் வக்கிர எண்ணம் கொண்டவர்கள் மத்தியில் வித்தியாசமானவராகத் தான் இருப்பார்.

தாலி கட்டிய கணவனுடன் மனைவியும், மனைவியுடன் கணவனும் 'முகமூடி' அணிந்து உறவைத் தொடரும் பலரைப் பார்க்கத்தான் செய்கிறோம். இது ஒருபுறம் இருக்க, தன் வீட்டாரின் செயலை நியாயப்படுத்தக் கணவனிடம் மனைவியும், மனைவியிடம் கணவனும் முகமூடி அணிகிறார்கள். சாயம் வெளுத்தபிறகு உறவைக் கிழிக்கிறது 'முகமூடி'.

சகோதர் பாசம் சாதாரணமானது அல்ல. அண்ணனை தந்தை போன்றும், தம்பியை மகன் போன்றும் பாவிக்கிறவள் பெண். உடன் பிறந்தவர், அடுத்தவர் என்ற பேதம் சகோதர பாசத்துக்குக் கிடையாது.

அண்ணன் என்றால் அண்ணன்தான் - அதைத் தவிர்த்து வேறு எதையும் சிந்தித்துக்கூட பார்க்கமாட்டாள் ஒரு நல்ல பெண். ஒரு குழந்தைபோல விடயங்களைப் பகிர்வதற்கும், சிக்கல் நிறைந்த பிரச்சினை குறித்துச் சொல்வதற்கும் முதலில் பெண்கள் நாடுவது சகோதரனையே.

நட்புகளிடம் சொந்த விடயங்களைப் பகிர்ந்துகொள்ள மிகவும் யோசிக்கும் பெண், சகோதர பாசம் துரோகம் இழைக்காது என்ற அசைக்க முடியாத நம்பிக்கையில், தன்னை சகோதரி என்று அழைக்கும் ஆணிடம் தயங்காமல் கூறிவிடுவாள். ஆனால், அதையே தனக்கோ, தனது மனைவிக்காகவோ சாதகமாக்கிக் கொண்டு ஏமாற்றுவோர் இருக்கத்தான் செய்கிறார்கள். முகமூடி தெரிந்த பிறகு அந்தப்பெண் சொல்வது 'குட்பை' தானே.

உன்னத உறவு-சுயநலம் இல்லாதது. சகோதர உறவு-ஆதரவாகத் தோள்கொடுக்கும். இவை இரண்டும் அமையப்பெற்றவர்கள் உண்மையிலேயே பாக்கியசாலிகள்தான். ஆனால், இதே உறவை சிலர் தங்கள் விருப்பம் போலக் கையாளும்போது தான் அது முகமூடி உறவாக மாறுகிறது. இதன்மூலம், கிடைத்த நல்ல உறவை தக்கவைத்துக் கொள்ள பலர் தவறிவிடுகின்றனர்.

எதிர்பார்ப்பு எதுவும் இன்றி தன்னை நேசிக்கும் உன்னத உறவை ஈகோ, போட்டி, பொறாமை, சுயநலம், தற்பெருமை போன்றவற்றுக்காக சிலர் இழந்துவிடுகிறார்கள் என்பதுதான் உண்மை.

நேரத்துக்கும், இடத்துக்கும் தகுந்தாற்போல ஆளுக்கொரு வேசம் தரிக்கும் முகமூடி உறவுக்காரர்கள், பிறரை மட்டும் அல்ல; தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்கிறார்கள்' என்பதுதான் உண்மையிலும் உண்மை...!

# கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | மாதகல் |
|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 700 | 700 | 600 |
| நண்டு | 300 | 350 | 400 | 300 | – |
| கணவாய் | 500 | 500 | 600 | 500 | 400 |
| பாரை | 350 | 400 | 600 | 450 | 370 |
| சுறா | 500 | 500 | 600 | 600 | 450 |
| சீலா | 400 | 400 | 500 | 400 | 350 |
| விளை | 400 | 400 | 550 | 450 | 350 |
| முரல் | 350 | 350 | 500 | 300 | 250 |
| கும்பிளா | 400 | 300 | 550 | 400 | – |
| கிழாக்கன் | 300 | 400 | 500 | 400 | 350 |
| ஓரா | 300 | 350 | 400 | 350 | – |
| திரளி | 250 | 250 | 300 | 250 | – |
| நகரை | 250 | 250 | 400 | 300 | – |
| சூடை | 130 | 150 | 200 | 160 | 100 |
| ஒட்டி | 180 | 200 | 250 | 250 | – |
| திருக்கை | 150 | 350 | 200 | 250 | 120 |
| பாலை | 300 | 300 | 350 | 400 | – |
| வாளை | 180 | 150 | 250 | 300 | 200 |
| கொய் | 80 | 150 | 80 | 100 | – |
| மதனம் | 300 | 250 | 350 | 270 | 200 |

# சாப்பிட வேண்டிய காய்கறிகள்

## பாகற்காய்



பாகற்காயில் பாலிபெப்டுடைட் எனும் இன்சுலின் சுரப்பை அதிகப்படுத்தும் வேதிப்பொருள் நிறைந்துள்ளது. நீரிழிவு நோயாளிகளுக்கு பாகற்காய் சிறந்த உணவாகும். வேறு ஆயுர்வேத மருந்துகள் சாப்பிடும்போது இதனைச் சாப்பிடக்கூடாது. மருந்தின் தன்மையை முறியடிக்கும், அடிக்கடி சாப்பிட்டால் ஆண்மைக்குறைவு ஏற்படும். தொற்று நோய்களைத் தடுத்து கிருமிகளை அழிக்கும், வயிற்றில் பூச்சிகள் சேராமல் தடுக்கும்.



## பூசணிக்காய்

பூசணிக்காயில் புரதம், கொழுப்பு உள்ளது, ஆஸ்துமா, தலைவலி, சைனஸ் நோயாளிகள், உடல் பருமனானவர்கள் இதனை சாப்பிடக் கூடாது. குழந்தைகளுக்கும், மூலச்சூடு நோய் உள்ளவர்களுக்கு மிகமிக நல்லது. நரம்புகளுக்கு வலுவூட்டும், வயிற்றுப் புண்களை ஆற்றும் தன்மை கொண்டது.



## கரட்

விற்றமின்; ஏ, கார்போவைதரேற், தாது உப்புகள், மெலோனி சைட்ஸ் என்ற நிறமி அணுக்கள் இவற்றில் உள்ளன. குழந்தைப் பேறு இல்லாதவர்கள் அதிகம் சேர்க்க வேண்டாம். நீரிழிவு நோயாளிகள் சாப்பிடக்கூடாது. கண் பார்வைக்கு உகந்தது. கரட் சாறுடன் பத்து மிளகு சேர்த்துச் சாப்பிட்டுவர உடல் கழிவுகள் வெளியேறும்.



## சுண்டைக்காய்

விற்றமின் சி அதிகம் உள்ளது, சிறுவர்கள் வாரம் இருமுறை சாப்பிட்டால் வயிற்றில் பூச்சி சேராது. ஆஸ்துமா நோயாளிகள் தினசரி சாப்பிட மூச்சுத்திணறல் குறையும். கர்ப்பிணிப் பெண்கள் மாதத்தில் ஒருநாள் சாப்பிடலாம். கிருமிகள், வயிற்றுப் பூச்சிகளை அழிக்கும். நுரையீரலுக்கு செயல்திறன் தரும், சளியைக் கரைக்கும் தன்மை கொண்டவை.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | | 4 | | 5 | | | | |
| | | 1 | | 3 | 4 | 2 | | 5 |
| | 3 | | 1 | | | | 8 | |
| | 4 | | | 8 | 5 | 6 | | 1 |
| | 9 | | 3 | | 1 | | 4 | |
| 2 | | 6 | 7 | 4 | | | 3 | |
| | 8 | | | | 6 | | 1 | |
| 1 | | 7 | 4 | 9 | | 8 | | |
| | | | | 1 | | 4 | | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற் படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல் களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட் டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என் றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ் வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரை யான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண் டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறி முகப் படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்ய மானது.

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 1 | 2 | 6 | 9 | 4 | 5 | 3 | 8 |
| 5 | 3 | 8 | 1 | 2 | 7 | 6 | 9 | 4 |
| 9 | 4 | 6 | 8 | 3 | 5 | 2 | 1 | 7 |
| 1 | 6 | 7 | 5 | 8 | 3 | 4 | 2 | 9 |
| 3 | 8 | 4 | 9 | 6 | 2 | 7 | 5 | 1 |
| 2 | 5 | 9 | 4 | 7 | 1 | 3 | 8 | 6 |
| 4 | 9 | 1 | 2 | 5 | 6 | 8 | 7 | 3 |
| 8 | 2 | 3 | 7 | 4 | 9 | 1 | 6 | 5 |
| 6 | 7 | 5 | 3 | 1 | 8 | 9 | 4 | 2 |

# மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | 40 | 50 | 50 | 40 | 60 | 50 |
| கத்தரி | 50 | 40 | 50 | 40 | 30–40 | 40 | 40–50 |
| கரட் | 90 | 110 | 100 | 110 | 80–90 | 110 | 100–110 |
| மரவள்ளி | 30 | 50 | 30 | 50 | 30–40 | 50 | 30–40 |
| பயிற்றை | 80 | 80 | 80 | 90 | 60–70 | 90 | 60–80 |
| பாகல் | 80 | 80 | 90–100 | 60 | 60–70 | 70 | 80–90 |
| கருணைக்கிழங்கு | 60 | 50 | 50 | 40 | – | – | 50–70 |
| பெ.வெங்காயம் | 90 | 70–80 | 70–80 | 80 | 70–80 | 80 | 80–90 |
| சி.வெங்காயம் | 50 | 60–80 | 70 | 70 | 50–60 | 80 | 80–100 |
| பூசணி | 30 | 30 | 40 | 20 | 25–30 | 60 | 40–50 |
| தக்காளி | 40 | 40 | 30 | 40 | 30–40 | 40 | 50–80 |
| வாழைக்காய் | 40 | 40 | 40 | 40 | 50–70 | 40 | 50–70 |
| கீரை | 20 | 20 | 30 | 10 | 20–30 | 20 | 30–40 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 30 | 20–30 | 20 | 10–15 |
| பச்சை மிளகாய் | 50 | 50 | 50 | 40 | 30–40 | 60 | 30–40 |
| புடோல் | 40 | 30 | 30 | 30 | 30–50 | 30 | 30–50 |
| கோவா | 40 | 40 | 40 | 30 | 20–30 | 30 | 50–[illegible] |
| வெண்டி | 50 | 40 | 40 | 40 | 40–50 | 30 | 30–40 |
| போஞ்சி | 90 | 100 | 80 | 80 | 70–80 | 120 | 40–60 |
| லீக்ஸ் | 140 | 150 | 140 | 120 | 140–150 | 200 | 60–[illegible] |
| தேங்காய் | 60 | 35–55 | 60 | 50–60 | 50–60 | 70 | 35–[illegible] |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 80–90 | 80 | 80–90 | 100 | 80–[illegible] |
| தேசிக்காய் | 90 | 80 | 90 | 60 | 100–120 | 80 | 80–1[illegible] |
| வல்லாரை | 20 | 20 | 20 | 20 | 30 | 20 | 10–1[illegible] |
| கறிமிளகாய் | 110 | 70 | 60–90 | 80 | 70–80 | 110 | 80–9[illegible] |
| இராசவள்ளி | 100 | – | 100 | 80 | 100–110 | 130 | 140–[illegible] |

## நாளை

**சித்திரை-03**
**வியாழக்கிழமை**
**16.04.2015**


திதி: துவாதசி கா.07.56 வரை

நட்சத்திரம்: பூரட்டாதி மு.இ.08.36 வரை

சுபநேரம்: 07.34–09.04 வரை

இராகுகாலம்: 01.34–03.04 வரை

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....




## பரந்த மனம் வேண்டும்

எல்லையற்ற ஆற்றலும், தூய்மையும் உனக்குள்ளேயே நிறைந்து இருக்கிறது. ஒவ்வொரு மனிதனும் தனக்கென தனி லட்சியத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியம்.

தன்னை நெறிப்படுத்தி வாழ்பவனே, உலகத்தையும் சரியான பாதையில் செலுத்தும் தகுதி படைத்தவனா கிறான். பரந்த இந்த உலகம் போல எப்போதும் உன் மனதையும் விரிவுபடுத்திக் கொள்.

மனிதன் எப்போதும் தாழ்ந்த உண்மையில் இருந்தே, மேலான உண்மைக்கு பயணம் செய்கிறான்.

# கிரகதோஷம் என்றால் என்ன? சோதிட விளக்கம்




அண்டவெளியில் சூரிய குடும்பத்தைச் சேர்ந்த கிரகங்கள் சூரியனை மையமாக வைத்து சுற்றி வருகின்றன என்றும் அவை ஒவ் வொன்றும் தமக்கென உள்ள வேகத்தில் குறிப்பிட்ட பாதையில் குறிப்பிட்ட தூரத்தில் சுற்றி வருகின்றன என்பதும் அறிவியல் கூறும் உண்மை.

ஆனால் சோதிடம் பூமியை மையமாக வைத்து பூமியில் தம் கதிர்களால் ஆக்கிரமிக்கும் கிரகங்களாக சூரிய குடும்ப கிரகங்களையும், பூமியின் உப-கிரகமான சந்திரனையும், நிழற் கிரகங்களான இராகு, கேது கிரகங்களையும் சேர்த்து அவற்றின் கதிர் வீச்சுகளால் பூமியில் வாழும் மக்களில் ஏற்படும் தாக்கங்களை விவரிக்கின்றன. சூரிய குடும்பத்தில் சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், சுக்கிரன், சனி, இராகு, கேது ஆகிய ஒன்பது கிரகங்கள் (நவகிரகங்கள்) உள்ளதாக சோதிடம் கணிக்கின்றது.

எல்லாக் கிரகங்களும் தாமும் சுழன்று கொண்டு சூரியனை சுற்றி வருகின்றன. இவற்றுள் ராகு கேது தவிர்ந்த மற்றைய கிரகங்கள் வலம்சுழி யாகவும்; இராகு கேது இடஞ்சுழியாகவும் சுற்றுவதாக சோதிடம் கூறுகின்றது. கிரகங்கள் ஒரே நிலையை பின்பற்றாது வித்தியாசமான வேகத்தில் சுற்றுவதனால் கிரக நிலைகள் நொடிக்கு நொடி மாற்றமடைகின்றன. இதனையே கிரகங்களின் கோசர நிலை எனகுறிப்பிடப்பெறுகின்றது.

சூரியனை சோதிடம் ஒரு கிரகமென கணித்தாலும், அது உண் மையில் ஒரு நட்சத்திரமே. நட்சத்திரங்கள் தானாக ஒளிர்வன என்பதும், கிரகங்கள் நட்சத்திரங்களின் ஒளியைப் பெற்று பிரகாசிக்கின்றனஎன்பதும்நிரூபிக்கப்பெற்றஉண்மைகள்.

எம்மைச் சூழ்ந்துள்ள ஒவ்வொரு கோளும் (நட்சத்திரங்களும், கிரகங்களும்) தனித்தனி ஆற்றல் கதிர்களைப் பெற்றுள்ளன. அவற்றின் பிரமாணம், தட்ப-வெட்பநிலை, அதில் அடங்கியுள்ள தாதுப்பொருள்கள் என்பனவற்றின் அடிப்படையில் அவற்றின் கதிர்வீச்சுகள் வெளிப்படுகின்றன. பூமியிலே விழும் கிரகங்களின் ஒளிக் கதிர்கள் அவற்றின் தன் மைக்கேற்ப பூமியில் வாழும் உயிரினங்களில் பொதுவாக மனிதர்களில் பல மாற்றங்களை பிரதிபலிக்கின்றன.

சனிக் கோள் கருநீல நிறத்தையும், செவ்வாய்க் கோள் சிகப்பு நிறத்தையும் கொண்டிருப்பது போல் ஒவ்வொரு கோளுக்கும் தனித்தனி நிறமும், வெவ்வேறு நிறங்கொண்ட ஒளிக் கதிர்களும் உண்டு.


அத்துடன் ஒளிக் கதிர்களின் அலை (வீச்சின்) நீளங்களும், ஒளிச் சிதறல் (தெறிப்பு) தன்மைகளும் வேறுபட்டவையாகும். ஜாதகக் குறிப்பில் குறிக்கப்படும் ஒன்பது கோள்களும் தத்தமது ஒளிக் கதிர்களை வெளிப்படுத்திக் கொண்ட வண்ணம் உள்ளன. அவை அமைந்துள்ள இடத்துக்கேற்ப பிற கோள்களில் இருந்தும் கதிர் வீச்சையும் பெறுகின்றன.

அதேபோல் உலகில் தோன்றி வாழும் உயிரினங்களின் உடலில் உள்ள தாதுப்பொருள்கள் கிரகங்களில் இருந்து வரும் (நல்ல-தீய) கதிர்வீச்சை எந்த அளவு உட்கிரகிக்கின்றதோ அதற்கேற்ற வகையில் அவற்றிற்கு நன்மைகளும், தீமைகளும் ஏற்படுகின்றன என ஜோதிடம் கூறுகின்றது.

அதனால் தீய பலன் தரக்கூடிய கதிர்களை தவித்து நன்மை தரக்கூடிய கதிர்களை உட்கிரகிக்ககூடியதாக அதிர்ஸ்டக் கற்களை பாவிக்கும்படி சோதிடர்கள் பரிந்துரை செய்கின்றனர். அதன் பயனாக வாழ்க் கையில் அதிக நன்மைகள் ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளதாக ஜோதிடர்கள் பரிந்துரைக்கின்றனர். (அதிர்ஸ்டக் கற்கள் பற்றிய விவரம் இவ் இணை யத்தளத்தில் அதிர்ஸ்டக் கற்களைப் பற்றிய பகுதியில் பதியப்பட்டுள்ளன).

பல்வேறு ஒளிக்கதிர்கள் ஒன்றையொன்று கலந்து திறன் குறைந்த கதிர்கள் அழியவும், திறன் மிகுந்த ஒளிக்கதிர் மேலோங்கவும் செய்யும். அன்றியும் இரு கதிர்களின் கூடுகையின் புதிய விளை கதிர்களும் உருவாகும். இவ்வாறு பிற கோள்களின் கதிர்களை அழிக்கும் கதிர் எந்தக் கோளிலிருந்து வருகின்றதோ அக்கோள் உச்சம் பெற்றதாக கணிக்கப்பெறுகின்றது. இதை கிரக வலிமை என்பார்கள்.

ஒவ்வொரு கோளும் தனித்தனி ஆற்றல் கதிர்களைப் பெற்றுள்ளது போன்று வேறுபட்ட மின் தன்மையும், வேறுபட்ட காந்தப் புலமும் பெற்றுள்ளன. கோள்கள் ஒன்றையொன்று கடக்க நேருகையில் இருவேறு காந்தப் புலக்கதிர் வெட்டினால் ஒத்த புலம் கொண்ட கோள்கள் விலக்கமடையும். இந்த ஒளிக்கற்றைகள் பூமியில் வாழும் மனிதர்கள் மீது படும்போது நரம்பு மண்டலத்தில் பல மாற்றங்களைச் ஏற்படுத்துகின்றது. சில கதிர்கள் மனிதனுக்கு நல்லனவாகவும், வேறுசில தீமை பயப் பனவாகவும் அமைந்து விடுகின்றன.




# மாமியார் மருமகள் மகிமைகள்

'என்னடி கல்யாணம் ஆனதும் எங்களை மறந்துட்டியா ?' என்று கேட்டதும்' அத ஏன் கேட்கற அவரு அம்மா பையன் போல கல்யாணம் ஆகியும் இன்னும் எதற்கெடுத்தாலும் அம்மா அம்மான்னு பின்னாடியே போறார் வாழ்கையே வெறுத்து போச்சு 'என்று ஆரம்பித்து கதை கதையாய் அவள் சொன்னதை வைத்து ஒரு திரைப்படமே உருவாக்கலாம்.அந்த அளவுக்கு மாமியார்கள் மேல் ஒரு வித வெறுப்பை விதைத்து வைத்திருகிறது கடந்துபோன தலைமுறை. அதன் பிடியில் இருந்து மீளமுடியாத இவர்களால் வாழ்வை மகிழ்ச்சியான போக்கில் நகர்த்த முடியாமல் தவிக்கிறார்கள் .

குடும்பம் என்ற அமைப்பில் அதிகம் பழிச்சொல்லுக்கு ஆளாகும் மனித உயிர் மாமியார் என்றால் மிகையாகாது .மாமியார் என்றாலே ஆபத்தானவள் என்ற முத்திரை குத்தி ஓரங்கட்டும் நிலை இன்று அதிகம். அவள் இல்லாமல் இருந்தால் தொல்லை இல்லை என்று நினைக்கும் எண்ணம் இன்று பலரிடம் மேலோங்கி இருக்கிறது . திருமணம் ஆகப் போகும் பெண்களின் முதல் விண்ணப்பம் மாமியார் இல்லாத வீடு என்றால் சம்மதம் என்பதுதான். இதற்குக் காரணம் மாமியார்களைத் தாக்கி அல்லது அவர்களைக் கேலி செய்து, மட்டம் தட்டும் நகைச்சுவைத் துணுக்குகள் ஏராளம். மாமியார் என்றாலே பக்கத்துக்கு வீட்டுகாரம்மாவுடன் சேர்ந்து புரணி பேசுபவளாகவும் குடும்பத்தில் உலா வரும் ஒரு ராட்சசியாகவும் இன்று வருகின்ற பெரும்பாலான கதைகளில்,தொடர் நாடகங்களில், திரைப்படங்களில் சித்திரிக்கிறார்கள் பெண் திருமண வயதை எட்டியவுடன் அந்த தாயுக்குள் ஓர் இனம் புரியாத தவிப்பு. தான் பொத்தி வளர்த்த மகனை திடீரென்று வேறு ஒருத்தி உரிமை கொண்டாடும்போது. தனக்கான பாசத்தில் பங்கு போடும்போது அந்த வலி அவளின் ஆழ் மனதைப் பாதிக்கிறது. தன் நேசதிற்குரியவன் தன்னைக் கடந்து போகிறான் என்ற பயம், தவிப்பு நம் எல்லோருக்குள்ளும் இருக்கும். அந்த தவிப்பால் உருவாகும் தடுமாற்றத்தை, இழப்புணர்வை, தாழ்வுணர்ச்சியை இன்னும் பல உணர்வுகளை இனம் கண்டு அதைச் சரிவர வெளிபடுத்த தெரியாத மாமியார்கள் தங்கள் வேதனையை வெறுப்பாகவும், தாழ்வுணர்ச்சியை காழ்ப்புணர்ச்சியாகவும், தடுமாற்றரத்தை வீராப்பாகவும் மாற்றுகின்ற எதார்த்தம் இன்று நிகழ்கிறது. அப்படிப் பட்ட குடும்பத்தில் கூச்சல் ,குழப்பம் அழுகை , பிரிவு என்பது சாதாரணமாக நிகழ்கிறது. தன் தாயின் தவறுகளை எப்படி இருந்தாலும் முழுமனதுடன் ஏற்றுகொள்ளும் தன்மை எத்தனை மகன்களுக்கு முதலில் இருக்கிறது என்பது கேள்விக் குறிதான். அதே போல தன் தாய் என்ன பேசினாலும் கண்டு கொள்ளாமல் செல்லும் பெண்கள் மாமியார் ஒரு வார்த்தை பேசினால் அதைப்பெரிதுபடுத்தி குடும்பத்தை இரண்டாக பிரித்து கணவனை அழைத்து தனிக்குடும்பம் செல்லும் பெண்கள் உள்ளனர். இப்படி பட்ட பெண்களால் இன்று மாமியார்கள் முதியோர் இல்லங்களிலும், அநாதை ஆசிரமங்களிலும் கஷ்டப்படும் சூழல் அதிகரித்து வருகிறது. மனிதாபிமானமற்ற இந்த செயலுக்கு பெண்களும் காரணமாக இருப்பது வேதனைக்குரிய விடயமாக இருக்கிறது. குடும்பங்கள் தூய்மையான அன்பின் உறவுகளால் பின்னப்பட்ட கூடு. அங்கே விட்டுகொடுத்தல் மிகுந்தும் தப்பு கண்டுபிடித்தல் குறைந்தும் காணப்பட வேண்டும். தாயா? தாரமா என்கிற போட்டி விபரீதத்தை விளைவிக்கும் ஆண்கள் எடுக்கும் முடிவுகள் பலவீனமானதாக இருக்க கூடாது கடந்து வந்த காலத்தில் பயணிதவளையும், எதிர் காலத்தில் உடன் பயணிப்பவளையும் சமமாக நேசிப்பதால் அவனின் வாழ்க்கை இனிமையாகும். ஒன்றை அழித்து மற்றொன்றை வளர்க்கும் வாழ்வு அழிவை நோக்கி பயணிக்க வைக்கும் இந்நிலை மாற மாமியார் மருமகளை எதிரியாக பார்க்காமல் தன் மகனுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கக் கூடியவளாகப் பார்க்க வேண்டும் மருமகள் மாமியாரை மகிழ்வாய் வைத்தால் மட்டுமே கணவன் உண்மையான மகிழ்ச்சியுடன் இருப்பான் என்பதை புரிந்துகொண்டும். தன் குழந்தைகளை உரிமையாய் பார்க்கும் ஒருவளாக நினைத்து கொண்டாட வேண்டும். இன்று ஆண் பெண் இருவரும் வேலைக்குச் சென்றால்தான் வீட்டில் உலை கொதிக்கும் நிலை, விலைவாசி உயர்வு. ஆகையால் அப்படி வேலைக்கு செல்லும் பெண்கள் குழந்தைகளை காப்பகத்தில் விட்டுவிட்டு அங்கு எப்படி பார்ப்பார்களோ என்று மனக்கவலையுடன் இருப்பதற்கு மாமியார் மாமனாரை அருகில் வைத்துகொண்டால் அவர்கள் பொறுப்பாக குழந்தைகளை கவனிப்பார்கள். நீங்கள் பொருளாதாரத்தை உயர்த்த பாடுபடுங்கள். கூட்டுக் குடும்பத்தை வளர்ப்பதால் மட்டுமே சமூகத்தின் தீய செயல்கள், வன்முறைகள், பாலியல் கொடுமைகள் இவைகளை ஒழிக்க முடியும். ஆகவே மாமியார்களின் மகிமையை மருமகள்கள் உணருங்கள் மருமகள்களின் மகிமையை மாமியார்கள் உணருங் கள்.இன்றைய மருமகள்தான் நாளைய மாமியார் என்பதை மனதில் கொண்டு செயல்படுங்கள்.

2015 ஏப்ரல் 15 புதன்கிழமை உதயன்

# 13 வருடங்களின் பின்னர் மருதடி விநாயகருக்கு தேர்

வலி வடக்கு ஏப் 15

வரலாற்றுப் புகழ் மிக்க மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய தேர்த் திருவிழா கடந்த 13 ஆண்டுகால இடைவெளியின் பின்னர் நேற்று மிகவும் பக்திப்பரவசமாக இடம் பெற்றது.

கடந்த காலத்தில்12 திருவிழாக்கள் இடம்பெற்று கடந்த 13 வருடங்களாக ஆலயத்தில் இடம்பெற்ற திருப்பணிகளைத் தொடர்ந்து இந்தாண்டு திருவிழாக்களின் நாள்கள் அதிகரிக்கப்பட்டு 25 தினங்களாக நடைபெறுகின்றது. நேற்று செவ்வாய்க்கிழமை 24 ஆம் நாள் தேர்த்திருவிழா இடம்பெற்றது.

காலையில் இடம்பெற்ற விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து பஞ்சமுகப் பிள்ளையார் உள்வீதியுலா வரும் நிகழ்வு இடம்பெற்று முற்பகல் 10 மணிக்கு சுவாமி எழுந்தருளி அழகிய திருத்தேரில் ஆரோகணித்தார்.

அதனைத் தொடர்ந்து அடியவர்களினால் தேரின் முன் தேங்காய்கள் உடைக்கப்பட்டு முற்பகல் 11 மணிக்கு சுவாமி தேரில் வெளிவீதியுலா வரும் நிகழ்வு இடம்பெற்றது.


அடியவர்கள் பக்திப்பரவசமாக தேரின்வடம் பற்றி இழுத்து வர தேரின் முன்னே கர்ப்பூரச்சட்டி ஏந்தியும் பின்னே அங்கப் பிரதட்சை மற்றும் அடியளித்தல் பஜனைபாடுதல் என அடியவர்கள் சென்றார்கள்.

விசேடமாக மானிப்பாய் ஆலயத்தை சுற்றியுள்ள கிராமங்களில் உள்ளவர்கள் தமது நேர்த்திகளை நிறைவு செய்யும் வகையில் தூக்குக் காவடிகள், பறவைக் காவடிகள் மற்றும் காவடிகள் எடுத்தும் நேர்த்திகளை நிறைவு செய்தார்கள்.

புதுவருடம் என்ற வகையில் அதிக எண்ணிக்கையான அடியவர்கள் தேர்த் நிகழ்வில் கலந்து கொண்டதுடன் மானிப்பாய் பொலிஸாரும் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப் பிரிவினரும் வீதிக் கடமை யிலும் மற்றும் ஆலயச் சுற்றாடல் பாதுகாப்பிலும் ஈடுபட்டு இருந்தார்கள். (வ−86)








வரலாற்று சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் இடம்பெற்ற மன்மத சித்திரை புத்தாண்டு பூசை வழிபாடுகளில் பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்து கொண்டனர். (வ−17−135)



நீர்வேலி தெற்கு மனோன்மணி அம்மன் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கடைசிப் பங்குனித் திங்கள் உற்சவத்தின் போது பொங்கல் விசேட அபிஷேகம் இடம்பெற்றது. ம்டைபரவி பூசைகள் நடைபெற்றன. (வ−17)





யாழ்.அத்தியடி சிதம்பர நடராஜ விரகத்திப் பிள்ளையார் ஆலய தேர்த்திருவிழா நேற்று புது வருடப் பிறப்பன்று நடைபெற்றது. விநாயகர் தேரில் ஆரோகணித்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார். (வ−135)



நல்லூர் வடக்கு சந்திரசேகரப் பிள்ளையார் ஆலய வருடாந்த பெருந்திருவிழாவின் தேர் திருவிழா சித்திரைப் புத்தாண்டான நேற்றைய தினம் சிறப்பாக நடைபெற்றது. தேர்த் தி விழாவில் பெருமளவிலான பக்தர்கள் கலந்துகொண்டனர். (வ−1

# போர்க்குற்றங்கள் தொடர்பில் விசாரணை நடத்த வேண்டும்

## பிரிட்டனின் ஆளும் மற்றும் எதிர்கட்சித் தலைவர்கள் புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் வலியுறுத்து

கொழும்பு, ஏப்.15
இலங்கையில் கடந்த காலங் களில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பில் 'விசாரணைகள் முன் னெடுக்கப்பட வேண்டும் என்றும், அதற்கு இலங்கை அரசு முழுமை யான ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும், பிரிட்டனின் ஆளும் மற்றும் எதிர்கட்சித் தலை வர்கள் புத்தாண்டு வாழ்த்துச் செய் தியில் வலியுறுத் தியுள்ளனர்.

'போரின் இறுதிக் கட்டத்தில் இடம் பெற்ற அட்டூழியங்கள் குறித்த ஐ.நா. விசாரணைக ளுக்கு இலங்கை அரசு முழுமையான ஆதரவை அளிக்க வேண்டும்' என்று பிரிட்டன் பிரதமர் கமரூனும், 'மனித நேயத்துக்கு எதி ரான போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வ தேசத்தின் நியாயமான விசார ணைகள் முன்னெடுக்கப்பட வேண் டும்' என்று தொழிற் கட்சியின் தலை வர் டேவிட் மிலிபான்டும் தமது புத்தாண்டு வாழ்த்துச் செய்திகளில் வலி யுறுத்தியுள்ளனர்.

பிரிட்டன் பிரதமரின் வாழ்த்துச் செய்தியில்,

பிரிட்டனிலும் – இலங்கையிலும், உலகின் ஏனைய நாடுகளிலும் புத்தாண்டைக் கொண்டாடும் அனை வருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரி வித்துக் கொள்கிறேன். மில் லியன் கணக்கான மக்கள் தமது குடும்பத்தினர் – நண்பர்கள் – அயல வர்களுடன் இணைந்து புத்தாண் டைக் கொண்டாடு கின்றனர். பிரிட் டனில் தமிழ் – சிங்கள சமூகங்களின் அற்பு தமான பங்களிப்புகளையும் இந்த தருணத்தில் நினைவு கூர வேண்டும். பலர், வெளிநாடுகளில் உள்ள தமது அன்புக்குரியவர்களை நினைத்து, குறிப்பாக இலங் கையில் உள்ளவர்களை நினைத்து புத்தாண் டைக் கொண்டாடுகின்றனர்.

கடந்த மாதம், ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவை சந்தித்த போது, கடந்த கால விவகாரங்களுக்குத் தீர்வு காண அவரது அரசு எடுக்கின்ற முயற் சிகளுக்கு எனது ஆதரவை வழங்குவ.தாக உறுதியளித்துள் ளேன். ஆனால், இலங்கை அரசு ஐ.நா. விசாரணைகளுக்கு முழு ஆதரவையும் வழங்க வேண்டும் என்றும், இன்னும் மேலே செல்ல வேண்டும் என்றும் தெளிவாக எடுத்துக் கூறியிருந்தேன்.

இந்தப் புத்தாண்டு கடந்த கால காயங் களை குணப்படுத் துவதற்கு உதவுவ துடன், சமூகங் களுக்கு இடையில் நெருக்கத்தையும் கொண்டு வரும் என்று நம்புகிறேன். புத்தாண்டைக் கொண்டாடும் அனைவருக் கும், மிகவும் மகிழ்ச்சியான, வளம்மிக்க ஆண்டாக அமைய வாழ்த்துகி றேன், என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பிரிட்டனின் எதிர் கட்சித் தலைவர் மிலிபான்ட் குறிப் பிடுகையில்:

இலங்கையில் இடம்பெற்ற மனித நேயத்துக்கு எதிரான போர்க்குற் றங்கள் தொடர்பில் சர்வதேசத்தின் நியாயமான விசாரணைகள் முன் னெடுக்கப்பட வேண்டும்.

இலங்கையில் நடத்தப்படும் போர்க் குற்ற விசாரணைகள் உட்பட்ட நல்லிணக்க நடவடிக் கைகளுக்கு எமது கட்சி ஆதரவ ளிக்கும் – என்று குறிப்பிட் டுள்ளார்.

(வ-5)

# இ.போ.சவுக்கு மஹிந்த 142மில். செலுத்த வேண்டும்

கொழும்பு, ஏப்.15
கடந்த ஜனாதிபதித் தேர்தலில் முன் னாள் ஜனாதிபதி பயன்படுத்திய இலங்கை போக்கு வரத்துச் சபை யின் பஸ்களுக்கான கட்டணம் இன்னமும் செலுத்தப்படவில்லை என்றும் இதற்காக 142மில்லியன் ரூபா அறவிட வேண்டியுள்ளதாக போக்குவரத்துச் சபை தெரிவித்துள் ளது.

இலங்கை போக்குவரத்துச் சபை யின் தலைவர் ரமல் சிறிவத்தன இது தொடர்பில் தெரிவிக்கையில்:

கடந்த ஜனாதிபதி தேர்தல் காலத்தில் முன்னாள் ஜனாதிபதி இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ் களை தேர்தல் நடவடிக்கைகளுக்காக பயன் படுத்தியதாகவும் இதற்காக 50மில்லியன் மட்டுமே செலுத் தப்பட்டுள்ளதாகவும் இன்னமும் உள்ள 142மில்லியனை செலுத்து மாறு கோரிக்கைக் கடிதம் அனுப்பப் பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இதேவேளை போக்குவரத்துச் சபை ஊழியர்களுக்கு நிலுவைச் சம் பளம் வழங்குவதற்கு 150 மில்லி யன் தேவையாக உள்ள நிலையில், இந்த பஸ்களுக்கான கட்ட ணங்கள் கிடைக்கப்பெற்றால் அவற்றை சரி செய்ய முடியும் என்று அமைச்சர் ரஞ்சித் மத்துமபண்டார தெரிவித் துள்ளார்.

(வ)

# ஜனாதிபதி சிறிசேன தலைமையில் புத்தாண்டுக் கொண்டாட்டங்கள்

கொழும்பு, ஏப்.15
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான புதிய அரசின் முத லாவது தமிழ் சிங்கள புத்தாண்டு கொண் டாட்டங்கள் அமைதிச் சூழ லில் கிழக்கு மாகாணத்தில் மிகவும் மகிழ்ச் சிகரமான முறையில் கொண் டாடப்பட்டு வருகின் றன.

மட்டக்களப்பு சிறைச்சாலை யில், சிறைச்சாலை நலன்புரி சங்கம் ஏற் பாடு செய்த சிறைக்கைதிகளுக் கான சித்திரை புத்தாண்டு விழா நேற்று முதல் நாள் நிகழ்வாக சிறைச்சாலை வளாகத்தில் சங்கத்தின் தலைவர் என்.பீ. ரஞ்சன் தலைமையில் நடை பெற்றது.

மட்டக்களப்பு மாநகர ஆணையா ளர் எம்.உதயகுமார் பிரதம அதிதி யாக கலந்து கொண்டார். மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி அமைப்பா ளர் இராஜன் சத்திய மூர்த்தி சிறைச் சாலை அத்தியட்சகர் எஸ்.ஏ.பிரி யங்கர உட்பட பலர் கலந்து கொண் டனர். ஆண், பெண் சிறைக்கைதி களின் பல்வேறு வகை யான விளை யாட்டு நிகழ்வுகளும் இடம்பெற் றதுடன் வெற்றி பெற்றவர் களுக்கு பரிசில்களும் வழங்கப் பட்டன. (வ)

# நோயாளர் பரிசோதனை கட்டிலுக்கு திரைச்சீலை

தென்மராட்சி, ஏப்.15
சாவகச்சேரி ஆதார மருத்து வமனை வெளிநோயாளர் பிரிவில் நோயாளர் பரி சோதனைக் கட்டிலுக்கு உரு மறைப்பு திரைச்சீலை போடப் பட்டுள்ளது.

மருத்துவமனை நோயாளர் நலன்புரி சங்கத்தினர் தமது செலவில் திரைச்சீலையினை அமைத்துக் கொடுத்துள்ளனர்.

இதுவரை காலமும் வெளி நோயாளர் பிரிவில் உள்ள கட்டிலுக்கு மடிப்பு திரைச்சீலை (ஸ்கிரீன்)மூலமே மறைப்புச் செய்யப்பட்டு வந்தது. இது தொடர்பாக நோயாளர்கள் சங்கத்திடம் முறை யிட்டதை அடுத்து சங்க நிதியிலிருந்து மறைப்புச் திரைச் சீலை யைப் பொருத்தியுள்ளதாகத் தெரி விக்கப்பட்டது. (வ-9)




4ஆம் ஆண்டு நினைவு நாள்
அமரர் சசிகாந்தன் நிமலன்
நிமலா....
நீ எம்மை விட்டுச் சென்று
ஆண்டுகள் நான்கு ஆகிவிட்டன
எங்கள் எல்லோரினதும் இதயங்களில்
நீங்காத நினைவாக என்றும்
நிலைத்திருக்கின்றாய் நிமலா
மலர்ந்தது 02.03.1997
மறைந்தது 15.04.2011
உன் அன்பான
அப்பா, அம்மா, அண்ணா, அத்தான், அக்கா.

31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர் கனகரத்தினம் தெய்வேந்திரன்
கடந்த16.03.2015 திங்கட்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் கனகரத்தினம் தெய்வேந்திரன் அவர்களின் அந்தியேட்டி வீட் டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (15.04.2015) புதன் கிழமை மு.ப. 11.00 மணியள வில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தரு ணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
மீனாட்சி அம்மன் கோயில் வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.
குடும்பத்தினர்.


# பறவையினங்கள் அழிவடையும் அபாய நிலை

கொழும்பு, ஏப்.15
சர்வதேச பேணிப்பாதுகாத்தல் சங்கத்தின் சிவப்புத் தரவுகள் புத்தகத்துக்கு அமைய முன் னரைவிட இன்று உலகிலுள்ள பறவையினங் கள் வேகமாக அழிந்து போகும் அபாய நிலை ஏற்பட்டுள்ளதாக சூழலிய லாளர்கள் சுட்டிக் காட்டு கின்றனர்.

உலகிலுள்ள 1,227 பறவை யினங்கள் அல்லது 12வீதமான வைகள் இவ்விதம் அழிந்து போகும் அச்சுறுத்தலுக்கு முகம் கொடுத்திருப்பதாக அவர்கள் சுட்டிக்காட் டுகின்றனர். அவற்றுள் 192 இனங்கள் கடு மையான அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக் கும் பறவை இனங்களாகப் பெயரிடப்பட் டுள்ளன.

சிவப்புத் தரவுகள் புத்தகத்துக்கு உயிரினங் களை உள்ளடக்கும் குழுவின் தலைவரான டீமன்ஸ் ருவார்ட், இந்த நிலைப்பாடு பெரிதும் கவலைக்குரியதாகும் என்று தெரிவிக்கிறார். மிகக் கடுமையான விதத்தில் அழிவுற்றுப் போகும் அச்சுறுத் தல்களுக்கு உள்ளாகி யுள்ள பறவைகளை பேணிப்பாது காப்பது குறித்து அக்கறை கொள் ளாததன் காரண மாக தொடர்ச் சியாக அவற்றை உலகம் இழந்து விடும் அச்சுறுத்தலுக்கு உள்ளாவது பிரச்சினைக்குரிய ஒன்றே எனவும் அவர் சுட்டிக்காட்டுகிறார். (வ-22)

# கோசன்ஸ் நகர் நூலகத்தில் தமிழின அழிப்பை வெளிப்படுத்தும் கண்காட்சி



காலாதிகாலமாக ஈழதேசம் இன அழிப்புக்கு உள்ளாக்கப் பட்டு வரு வதை டெனிஸ் மக்க ளுக்கும் வேற் றின மக்க ளுக்கும் எடுத்துக்காட்டும் முகமாக கடந்த மாதம் 5 ஆம் திகதி கோசன்ஸ் நகரில் உள்ள பொது நூலகத்தில் டெனிஸ் தமிழ் அமைப் புக்க ளின் ஒன்றியத்தின் ஏற்பாட் டில் ஓர் கண்காட்சி நடைபெற்றது.

இதுதொடர்பில் அந்த அமைப்பு தெரிவிக்கையில்:

இவ்வாறான சிறிய செயற் பாட்டின் ஊடக நாம் வாழ்ந்து வரும் நகரங் களில் எமது தாயகம் சம்பந்தமாக விழிப்பு ணர்வை ஏற்படுத்த முடி யும். ஆகையால் இதேபோல் நீங்க ளும் உங்கள் நகரங்களில் உள்ள நூலகங்களில், கண்காட்சியை வைப்பதற்கு விரும் பினால் எங்களு டன் தொடர்பு கொள் ளலாம்.

தாயக விடுதலைக்காக விலை மதிப்பற்ற அர்ப்பணிப்புகள் செய்த எமது மக்களையும், மாவீரர்களின் தியாகங் களையும் பேணிக்காக்க வேண் டியது எங்கள் எல்லோரு டைய கடமையாகும் என்று மேலும் தெரிவித்துள்ளது.

(வ)

# கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் கலை இலக்கியப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஏப் 15
கலாசார அலுவல்கள் திணைக் களத் தின் மூலம் ஏற்பாடு செய்யப் படும் தேசிய கலை இலக்கியப் போட்டி கள் பிரதேச, மாவட்ட, தேசிய மட்டங் களில் நடைபெறவுள்ளன.

கட்டுரைப் போட்டி (கனிஷ்ட, சிரேஷ்ட பிரிவு), கவிதைப் போட்டி (கனிஷ்ட, சிரேஷ்ட பிரிவு), கவிதைப் பாடல் போட்டி (கனிஷ்ட, சிரேஷ்ட பாலர் பிரிவு), கையெழுத்துப் போட்டி (பாலர் பிரிவு), பாடல் நயத்தல் போட்டி (சிரேஷ்ட பிரிவு) என்ற வாறு மட்டுப் படுத்தப்பட்ட நிலையில் மேற்படி போட்டிகள் இடம் பெறவுள்ளன.

மேற்படி போட்டிகள் பாடசாலை மாணவர்களுக்கானது எனவும் பாலர் பிரிவில் 6–10 வரை யுள்ள மாணவர் களும் கனிஷ்ட பிரிவில் 11–15 வரை யுள்ள மாணவர்களும் சிரேஷ்ட பிரிவில் 16–19 வரையான மாணவர் களும் 19 வயதின் மேல் திறந்த பிரி விலும் பங்குபற்றலாம் என்றும் கவிதை பாடல் போட்டி மற்றும் கையெழுத்துப் போட்டி என்பன பிரதேச செய லர் பிரிவில் தெரிவு செய்யப் பட்ட நிலையத்தில் நடத்தப்படும் என்றும் யாழ்.பிரதேச செய லகம் தெரிவித் துள்ளது.

இதேவேளை பாடல் ஆக்கப் போட்டி, நாட்டார் கலை,கற்றல் போட்டி, இலக் கிய விவரணப் போட்டி, சிறுகதைப் போட்டி, கவிதைப் போட்டி, சிறுவர் கதை ஆக்கப்போட்டி என்பவற்றில் 10 வயதுக்கு மேற்பட்ட அனைத்துத் தனி நபர்களும் சுயமாக அல்லது பொது நிறுவனங்களான சன சமூக நிலை யங்கள், கலாமன்றங்கள், கிராம அபி விருத்திச் சங்கங்கள் மூலமாக பங்கு கொள்ளலாம் என்று தெரிவிக் கப்பட் டுள்ளது.

போட்டிகளில் பிரதேச மட்டத்தில் வெற்றி பெறும் மூவருக்கு புத்தகப் பொதிகளும், சான்றிதழ்களும் வழங் கப்படும் என்றும் பிரதேச மட்டங் களில் தெரிவு செய்யப்படும் ஆக்கங் கள் மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப் பட்டு தேசிய மட்டத் துக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் யாழ்ப் பாண பிரதேச செயலகம் தெரிவித் துள்ளது. (வ-10)

# மூன்று நூல்களின் வெளியீடு இன்று

மானிப்பாய், ஏப்.15

ஜீவகுமாரன் கதைகள்–ஜேர்மனிய கரப்பான் பூச்சிகள் –கடவுச்சீட்டு உள்ளிட்ட மூன்று நூல்களின் அறிமுக விழா இன்று புதன்கிழமை இடம்பெறும்.

வலி.மேற்கு பிரதேச சபை தவிசாளர் திருமதி. நா. ஐங்கரன் தலைமையில் இன்று மாலை 3 மணிக்கு பிரதேச சபை கலாசார மண்டபத்தில் இடம்பெறும்.

நிகழ்வில் ஆசியுரையை வித்தியாசாகரம் சிவஸ்ரீ சபா.வாசுதேவக் குருக்களும், வாழ்த்துரையை ஆசுகவி வ.சிவசுப்பிரமணியமும் வழங்குவர்.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக தேசிய கல்வியியற் கல்லூரி இணைப்பாளர் பா.தனபாலனும், சிறப்பு விருந்தினர்களாக வலி.மேற்கு பிரதேச சபையின் செயலாளர் திருமதி உ.சாரதா, பொறுப்பதிகாரி, து.கிருபாகரன் ஆகியோரும் கலந்து கொள்வார்கள்.

நூல் நயப்புரைகளை ஜீவநதி முதன்மை ஆசிரியர் கலாமணி பரணீதரன், யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி செ.கண்ணதாசன், யாழ்.பல்கலைக்கழக ஆங்கில மொழி கற்பித்தல் மையத்தின் இணைப்பாளரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன், செல்வன் திருஷன் ஜயச்சந்திரன் ஆகியோர் வழங்குவர்.

அன்றையதினம்ஜீவகுமாரனால்வலி.மேற்குசங்கானை உப அலுவலக நூலகத்திற்கு கணினித் தொகுதி ஒன்றும் அன்பளிப்பாக வழங்கப்படும்.

இறுதியாக வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர் த.நடனேந்திரன் நன்றியுரை வழங்குவார். (வ–50)

# பகலில் ஆடு திருட்டு

சங்கானை, ஏப்.15

சங்கானை குளத்தடி வீதியைச் சேர்ந்த அரச ஊழியர் ஒருவரின் மறி ஆடு வயலில் மேய்ச்சலுக்காகக் கட்டியிருந்த போது பட்டப்பகலில் களவு போயுள்ளது. ஓட்டோவில் வந்த மூவர டங்கிய குழு சங்கானை மாவடி வைரவர் ஆலய பின்புறத்தில் அமர்ந்து மதுபானம் அருந்தி விட்டு அருகில் நின்ற ஆட்டை ஓட்டோவில் கடத்திச் சென்றுள்ளனர்.



வயலில் வேலை செய்தோர் இதனைக்கண்டு துரத்திய போதும் விரைவாகச் சென்று தப்பிவிட்டனர்.

ரூபா 12000 பெறுமதியான நல்ல இன ஆடு என உரிமையாளர் தெரிவித்துள்ளார். சங்கானைப் பகுதியில் இவ்வாறாக ஆடு, மாடு, கோழிக் களவுகள் அடிக்கடி நடைபெறுவதாகவும் திருடர்களைக் இனங்காண முடியாமல் உள்ளது என்றும் பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (வ–29)

# 605 பேர் போதையில் சாரத்தியம்

யாழ்ப்பாணம், ஏப்.15

புதுவருடத்தை முன்னிட்டு நாடு முழுவதிலும் உள்ள பொலிஸ் நிலையங்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் 605 பேர் மது போதையில் வாகனம் செலுத்தியுள்ளமை இனங்காணப் பட்டுள்ளது.

அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப் படவுள்ளது.

புதுவருடத்தைமுன்னிட்டு நாடு பூராகவும் உள்ள பொலிஸ் நிலையங்களால் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் மது போதையில் மோட்டார் சைக்கிள் ஓடியவர்களே அதிகம்.

91பேர் மது போதையில் மோட்டார் சைக்கிள் செலுத்தியுள்ள தாகவும் அவர்களில் 59பேர் ஓட்டோச் சாரதிகள் என்றும் மேலும் 25பேர் ஏனைய வாகனச் சாரதிகள் என்றும் தெரிய வந்துள்ளது. (வ)

# வேப்பமரக் குற்றிகள் கடத்தியவர் சிக்கினார்

யாழ்ப்பாணம், ஏப்.15

சட்டவிரோதமாக 30 வேப்ப மரக்குற்றிகளைக் கடத்தியவரைத் துரத்திப் பிடித்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு ஒரு மணியளவில் நிலாவரை ஈவினைப் பகுதியில் ஹன்ரர் வாகனத்தில் 30 வேப்பமரக் குற்றிகளைக் கடத்திக் கொண்டு சென்றபோது அவர்களை அச்சுவேலிப் பொலிஸார் வழிமறித்துள்ளனர். ஆனால் குறித்த ஹன்ரர் சாரதி வாகனத்தை நிறுத்தாது சென்றுள்ளார். அதனால் பொலிஸார் வாகனத்தைத் துரத்திப் பிடித்தனர். அதிலிருந்த 2 பேர் தப்பியோடிவிட்டனர். எனினும் சாரதியைக் கைது செய்துள்ள தாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ–4)

# சேவை நயப்பு விழா நாளை

தென்மராட்சி, ஏப்.15

தென்மராட்சி கல்வி வலய ஊழியர் நலன்புரிக் கழகத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் இளைப்பாறிய உத்தியோகத்தர்களின் சேவை நயப்பு விழாவும் நாளை வியாழக் கிழமை பி.ப. 1.30 மணிக்கு வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் இடம் பெறும் என்று கழகச் செயலாளர் அறிவித்துள்ளார். (வ–9)

**கடை வாடகைக்கு**

சுன்னாகம் ரயில் நிலையத்துக்கு முன்பாக நவீன வசதிகளுடன் கூடிய விசாலமான கடைத் தொகுதி (4 கடைகள்) வாடகைக்கு உண்டு. (நிலத்துக்கு மாபிள் பதிக்கப்பட்டுள்ளது)

தொடர்பு: 077 644 6693
077 219 8518 (58831) (45.3)

**வீட்டுடன் காணி விற்பனைக்கு**

பாற்பண்ணை றோட், திருநெல்வேலியில் சகல வசதிகளையும் கொண்ட வீட்டுடன் 3பரப்பு 7 குழி காணியும் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 896 0623
076 858 7753 (58834) (45.3)

**வீடு வாடகைக்குண்டு**

யாழ்.இந்துக் கல்லூரிக்கு அருகில் Church Lane இல் மூன்று (03) அறைகளுடன் (இணைந்த குளியல் அறைகளுடன்) சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.

(58470) (45.3.7) தொடர்பு: 077 787 2907



* பல் முக சீராக்கல் (Consultant orthodontist)
* முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்.

* மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
* ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
* நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
* வேர்முறை சிகிச்சை (Root canal Filling)
* நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
* பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
151, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (நர்மினி)

**Association for Rehabilitation of the Disabled (AROD)**
47/2, Adiyapatham veethy, Thirunelvely, Jaffna

**Post of ADMINISTRATOR**

Application are called by AROD for the above post from eligible candidates

The candidate should devoted to the welfare of Disabled and be between 40 and 65 years of age. The applicant should be with at least 10 years experience in office managment, financial managment and be able to maintain all routine official records. Basic computer literacy is essential.

**Eligible candidates should apply with**

01. Full bio data with experience (including contact number( written in the applicant's own handwriting
02. List of places worked
03. Salary expected
04. Reference from his/her last employer
05. Name of two non-related referees with their contact numbers.

The completed application should reach us by
21st April 2015

President
Association for Rehabilitation of the Disabled (AROD)
47/2, Adiyapatham Road,
Thirunelvely North, Jaffna.
(அ/18814)(4.3.7)

**விசேட கட்டணச்சலுகையில் புதிய பிரிவுகள் ஆரம்பம்**

DMI COMPUTER EDUCATION

* Diploma in Information Technology
* Adv. Dip. in Hardware & Networking
* Dip. in Pre-Press Desktop Publishing
* Dip.in Web Designing & Development
* Dip. in Computerized Accounting
* Tally Financial Accounting Training
* Master Dip. in Multimedia & Animation

#AutoCAD # C& C++ #JAVA

ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க யாழில் பெருமளவு மாணவர்கள் தெரிவு செய்யும்
Diploma in English (Veta Fluency Dip.)

IELTS
•Unique Test Tips
•Latest course Materials

ஒவ்வொரு வாரமும் புதிய பிரிவுகள் ஆரம்பம்.

அங்கீகரிக்கப்பட்ட முழுமையானதும் தரமானதுமான கல்விக்கு

DMI COMPUTER EDUCATION

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
|---|---|---|---|
| No.113 கஸ்தூரியார் வீதி, | M.M.V வீதி, | கண்டி வீதி, | கே.கே.எஸ். வீதி, |
| | | (HNB அருகில்) | (NSB வங்கி அருகில்) |
| Tel.: 021-222 4403 | Tel.:021-226 2470 | Tel.:021-227 0775 | Tel.:021-224 1970 |

**புதுக்கடைத் திறப்பு விழா**

நிகழும் மங்கலகரமான மன்மத வருடம் சித்திரை மாதம் 02 ஆம் நாள் இன்று (15.04.2015) புதன்கிழமை மு.ப. 10.23 மணிமுதல் 11.56 மணி வரை உள்ள சுபவேளையில்

"புதுக்கடைத் திறப்பு விழா"

மந்திகை பருத்தித்துறை வீதியில் (செல்வி சேவிஸ் ஸ்ரேசன்முன்பாக) உள்ள எமது புதிய கட்டடத்துக்கு எமது "றெயின் போ ரைல்ஸ் ஸ்ரோர்ஸ்" ஸ்தாபனத்தை மாற்றும் இவ் விழாவில் தங்களைக் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.




தங்கள் நல்வரவை இனிதே நாடும்
ஜெ.துஸ்சாந் (கோபி)
0778695418, 0212262696

டென்மார்க் பிரான்டாபதி ஸ்ரீ அபிராமி உபாசகியின்

**அருள் ஒளி தர்சன மாலையும்**

**சித்திரை மன்மத புதுவருட விசேட பூஜையும்**



# சு.க. பிரதமர் வேட்பாளராக களமிறங்குவார் சந்திரிக்கா

## கட்சி வட்டாரங்களில் இருந்து கசிந்தது தகவல்

கொழும்பு, ஏப்.15

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பிரதமர் வேட்பாளராக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க போட்டியிடவுள்ளார் என்று அந்தக்கட்சி வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சுதந்திர கட்சியிலிருந்து ஓரம் கட்டும் விதமாகவே கட்சிக்குள் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அறிய வருகிறது.

இது தொடர்பாக அரசியல் வட்டாரங்களிலிருந்து மேலும் தெரிய வருவதாவது,

முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சுதந்திரக் கட்சியின் பிரதமர் வேட்பாளராக களமிறக்குவதற்கு வாசு, தினேஷ், விமல் மற்றும் கம்மன்பில, பிரசன்ன ரணதுங்க உட்பட குழுவினர் கடந்த காலங்களில் முயற்சிகளை மேற்கொண்டு வந்தனர். அத்துடன், மஹிந்தவிற்கு ஆதரவாக பொது கூட்டங்களையும் நடத்தியுள்ளனர்.

மஹிந்தவும் ஜனாதிபதி தேர்தலின் தோல்விக்கு பின்னர் ஒதுங்கியிருக்காது விகாரைகளில் நடைபெறும் விழாக்களிலும் மற்றும் மத அனுஷ்டானங்களிலும் கலந்துகொள்வதோடு அவ்வப்போது ஊடகங்களுக்கு கருத்துக்களையும் வெளியிட்டார்.

கொழும்பு நாரஹேன்பிட்டி அபயராம விகாரையில் மஹிந்தவுக்கு என தனியான அலுவலகமும் வழங்கப்பட்டுள்ளது. மறுபுறம் ஏ.எஸ்.பி. லியனகேவுக்கு சொந்தமான பீகொக் மாளிகையையும் மஹிந்த தங்குவதற்கு வழங்கப்பட்டுள்ளதோடு அங்கு தற்போது யாகங்களும் நடைபெற்றுள்ளன.

இவ்வாறு மீள அரசியல் பிரவேசத்திற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வரும் சூழ்நிலையிலேயே, நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைக்கும் 19 வது திருத்தத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசு முன்வைத்தது.

இதற்கு ஆதரவு வழங்குவது தொடர்பாக அரசின் பங்காளிக் கட்சியான ஹெல உறுமய மற்றும் சுதந்திரம் கட்சியின் சிலராலும், ஐக்கிய மக்கள்சுதந்திர முன்னணியின்சிலராலும் முரண்பாடுகள் தலைதூக்கின. தமிழ் தேசிய கூட்டமைப்பும், ஜே.வி.பி.யும் இதற்கு ஆதரவை வெளியிட்டன. இந்நிலையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 19 க்கு ஆதரவு வழங்கா விட்டால் பாராளுமன்றத்தை கலைப்பதாக அறிவித்தார்.

இதன் பின்னர் கலவரமடைந்த சுதந்திர கட்சியினர் ஜனாதிபதியை சந்தித்து 19 க்கு ஆதரவு தெரிவிக்கவும் அத்தோடு 20ஆவது திருத்தமாக தேர்தல் முறைமையில் மாற்றத்தையும் கொண்டு வந்து நிறைவேற்றவும் இணக்கம் தெரிவித்தனர்.


ஜாதிக ஹெல உறுமயவின் பொது செயலாளரும், அமைச்சருமான சம்பிக்கவும் திருத்தங்களுடனான ஆதரவுக்கு இணக்கம் தெரிவித்துள்ளார். இவ்வாறானதோர் நிலையிலேயே மஹிந்தவை சுதந்திரக் கட்சியிலிருந்து ஓரம் கட்டும் நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளதோடு பொதுத் தேர்தலில் சுதந்திரகட்சியின் பிரதமர் வேட்பாளராக சந்திரிகா போட்டியிட தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, புதிய அணியொன்றை உருவாக்கி பொதுத்தேர்தலில் களமிறங்க மஹிந்த திட்டமிட்டுள்ளதாகவும் அத்தோடு பீகொக் மாளிகையை மஹிந்தவுக்கு வழங்கும் ஏ.எஸ்.பி. லியனகே தனது கட்சியான இலங்கை தொழிலாளர் கட்சியை மஹிந்தவுக்கு வழங்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். எதிர்வரும் 20ஆம், 21ஆம் திகதிகளில் 19ஆவது, 20ஆவது திருத்தங்கள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பின்னர் இலங்கையின் அரசியல் களம் சூடுபிடிக்க ஆரம்பித்து விடுவதோடு தேர்தல் திருவிழாவும் ஆரம்பமாகிவிடும்.(வ)

# மரண அறிவித்தல்கள்

## மருதப்பா யோகநாதன்

**(ஓய்வுநிலை அத்தியட்சகர் அன்னபூரணி எஸ்ரேட்)**



உடுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மருதப்பா யோகநாதன் 13.04.2015 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மருதப்பா -சின்னம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான சிவராசா, பாலசிங்கம், குணநேசன் மற்றும் பத்மநாதன் (ஓய்வுநிலை பிரதி அதிபர்-யா/ அருணோதயக் கல்லூரி), இரட்ணேஸ்வரி காலஞ்சென்ற லில்லிமலர் மற்றும் அல்லிமலர், புனிதவதி ஆகியோரின் சகோதரனும், மகேந்திரன், காலஞ்சென்ற இராசசுப்பிர மணியம், தெய்வேந்திரம் மற்றும் சிவகாமசுந்தரி, பத்மாவதி, சௌபாக்கிய கௌரி, (ஓய்வுநிலை பிரதி அதிபர்-யா/ மகாஜனக் கல்லூரி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.04.2015) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ரான்ஸ் போமர் லேன்,
உடுவில் தெற்கு,
சுன்னாகம்.

(58840) (45.3.7)

தகவல் :
சகோதரர்கள்.

## குமாரசாமி நடேசன்

**(பிரபல வர்த்தகர் - குமாரசாமி அன்கோ கம்பளை, அகில இலங்கை சமாதான நீதிவான்)**



காரைநகர், களபூமி, சத்திரந்தையைப் பிறப்பிடமாகவும் கம்பளையை வசிப்பிடமாகவும் களபூமி விளானையில் வசித்தவருமாகிய குமாரசாமி நடேசன் 12.04.2015 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமி மற்றும் பாக்கியம் தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் மருமகனும், இராசபூபதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, சுந்தரமூர்த்தி மற்றும் தேவராணி (பூரணம்), பத்மநாதன் (கம்பளை), சந்திரமதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான செந்தில்நாயகி, அம்பலவாணர், கனகரத்தினம், மகேஸ்வரன் மற்றும் ராகினி, காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, பொன்னுத்துரை, சிவசுப்பிரமணியம், இரத்தினபூபதி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற தேவகுஞ்சரி மற்றும் அருணகிரிநாதர், இராசகுமாரி, கமலக்கண்ணன் சாந்தகுமாரி ஆகியோரின் சிறிய தந்தையும், அஜந்தன், சிந்துஜா, தினேஸ் ஆகியோரின் பெரிய தந்தையும், தவநாயகி, தவபாலன், சாந்தகுமாரி, சதானந்தன் விஜயா, கீதாஞ்சலி, கஜன், வினோதினி, கஜானி ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.04.2015) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக [illegible] மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

[illegible] களபூமி,
[illegible].
077 588 4589

(58732) (45.3)

தகவல்: மனைவி.

# சிங்கப்பூர் குடிவரவுச் சட்டங்களை மீறினார் மத்திய வங்கி ஆளுநர்

## குற்றஞ்சாட்டுகின்றார் வசந்த சமரசிங்க

கொழும்பு, ஏப்.15



இலங்கை மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் சிங்கப்பூரின் குடிவரவு சட்டங்களை மீறியுள்ளார் என ஊழலுக்கு எதிராகக் குரல் கொடுக்கும் அமைப்பின் ஏற்பாட்டாளர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அர்ஜுன மகேந்திரனுக்கு எதிராக சிங்கப்பூரில் வைத்தே வழக்கு தொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார் என ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சிங்கப்பூரின் குடிவரவு சட்டங்களை மீறியமைக்காக அந்த நாட்டின் நீதிமன்றங்களிலேயே அவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வது குறித்து ஆலோசனை செய்து வருவதாகவும் வசந்த சமரசிங்க கூறியுள்ளார்.

சிங்கப்பூர் சட்டங்களின் படி அந்நாட்டின் பிரஜை ஒருவர் வேறு நாடுகளில் நிரந்தர குடியுரிமை பெறமுடியாது. எனவே அர்ஜுன மகேந்திரனுக்கு எதிராக வழக்கு தொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்


இதேவேளை தற்போதைய அரசாங்க அமைச்சர்கள் சிலர் மோசடிகளில் ஈடுபட்டுள்ளதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன. இது குறித்து சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளோம் என அவர் தெரிவித்துள்ளார்

அதேவேளை, ஊழலுக்கு எதிராகக் குரல் கொடுக்கும் அமைப்பு தங்களையும் தங்களது குடும்பத்தினரையும் தொந்தரவு செய்வதாக எதிர்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குற்றம் சுமத்தியுள்ளார்கள். அத்துடன் இன்று அப்பாவிகளை குற்றம் சுமத்துவது அரசாங்கத்தின் நாகரிகமாக மாறிவிட்டதாக குறித்த உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

ஊழலுக்கு எதிராக குரல் கொடுக்கும் அமைப்பு சுமத்திய குற்றங்கள் அனைத்தும் உண்மை என வழக்கறிஞர்கள் மற்றும் தணிக்கை நிபுணர்கள் குழு நிபுணர்களே இவற்றை உறுதி செய்துள்ளதாகவும் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை முதலீட்டுச் சபை மோசடிகள் தொடர்பாக மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலுக்கு எதிராகவும் வழக்குத் தாக்கல் செய்யவும் தீர்மானித்துள்ளதாக ஊழலுக்கு எதிராக குரல் கொடுக்கும் அமைப்பின் ஏற்பாட்டாளர் வசந்த சமரசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (வ)

# மரண அறிவித்தல்



## முருகேசு குமாரசாமி (KUM)

**(முன்னாள் ஆசிரியர் - புலோலி ஆண்கள் பாடசாலை, Oki International School wattala)**

தும்பளை, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், இல.145, புதுச்செம்மணி வீதி, கல்வியங்காட்டினை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு குமாரசாமி 12.04.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நேசமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இராசையா (தும்பளை, பருத்தித்துறை), பொன்னுச்சாமி (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், மகிந்தனின் (ஆஸ்திரேலியா), அன்புத் தந்தையும், தெய்வயாணியின் அன்பு மாமனும், கிரன், றெபேக்கா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.04.2015) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் ஒரு மணியளவில் பூதவுடல் செம்மணி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


145, புதிய செம்மணி வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

(58843)
(45.3.7)

தகவல் : மகிந்தன் (மகன்)
011 344 3088, 072 273 3689

15 APR 2015

# ராஜஸ்தான் ரணகளம் முடங்கியது மும்பை



ரஹானேயின் நிதான தொடக்கமும் சிமித்தின் அதிரடி முடிவும் பின்னியினதும் குல்கர்னியினதும் வேகங்களும் கைகொடுக்க 07 இலக்குகளால் மும்பையை வீழ்த்தி அடுத்த சுற்றுக்கான தன்னைப்பலப்படுத்தியது ராஜஸ்தான்.

சந்தித்த அனைத்து ஆட்டங்களிலும் தோல்வி. தொடரில் ஓரளவு ஆதிக்கம் செலுத்த வேண்டுமாயின் ராஜஸ்தானை தோற்கடித்தேயாக வேண்டும் என்ற கட்டாயத்தில் களமிறங்கியது மும்பை. மும்பையைப்போன்ற நெருக்கடியான நிலைமைகள் ராஜஸ்தானுக்கு இல்லை. இதனால் பதட்டமில்லாத சூழ்நிலையில் பதறாத வெற்றிக்காக களமிறங்கியது ராஜஸ்தான்.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்றது சிறிது சாதகமாக அமைந்த போதிலும் களத்தடுப்பை தெரிவு செய்து வம்மை விலை கொடுத்து வாங்கினார் ரோகித் சர்மா. ஆரம்ப வீரராக எதிர்பார்க்கப்பட்ட ரோகித் புது வியூகங்களுக்கேற்ப மத்திய வரிசை வீரராக களமிறங்கினார். பத்து ஓட்டத்தைப் பெற்ற வேளையில் உபாதை காரணமாக ஆட்டமிழப்பற்ற ஓய்வினை அறிவித்துச் சென்றார் பின்ஞ். மும்பையை துரத்தும் துரதிர்ஷ்டம் பின்ஞ் வடிவில் நேற்று பின்தொடர ஆரம்பித்தது. பட்டேலும் சந்தும் பதின்மத்துடன் பவிலியன் திரும்பினார்கள். வியூகங்கள் காற்றில் பறக்க கடந்த ஆட்டத்தைப்போலவே இந்த ஆட்டத்திலும் டக்கில் வெளியேறினார் ரோகித். அண்டர்சன் நிதானிக்க அதிரடியைத் தொடங்கினார் பொலார்ட். கடந்த இரண்டு ஐ.பி.எல் தொடருக்குப் பின்னர் பழைய பொலார்ட் நேற்று மும்பைக்குக் கிடைத்தார். அதிரடியென்றால் அப்படியொரு அதிரடி. 28 பந்துகளில் அரைச்சதம் கடந்து 34 பந்துகளில் 70 ஓட்டங்களைக் குவித்து வெளியேறினார். அண்டர்சன் இறுதிக்கட்ட அதிரடியைக் காட்டி தனது பங்குக்கு ஒரு அரைச்சதத்தை தனது பெயரில் பதிய முடிவில் மும்பை 164-5.

120 பந்தில் 165 ஓட்டங்கள். பார்க்கத்தான் ராஜஸ்தான் எலி ஆனால் பக்காப் புலி. ராஜஸ்தானின் ஆட்டத்துக்கு இதெல்லாம் ஒரு இலக்கேயில்லை. களத்தில் ரஹாகேயுடன் சாம்சன். சாம்சன் ஏமாற்றினாலும் ரஹானே விடவில்லை. முழுப்போராட்டத்தைக் காண்பித்தார். ரஹானேக்கு இணையாக சிறந்த தலைமைத்துவ இன்னிங்ஸை அரங்கேற்றினார் சிமித். இலக்குகள் சரிவது நிறுத்தப்பட்டாலும் ஓட்டங்களின் வேகம் அவ்வளவு பெரிதாக இருக்கவில்லை. இதனால் நேரம் செல்லச்செல்ல மும்பைக்கான வாய்ப்பும் பிரகாசமாக இருக்கத்தான் செய்தது. 39 பந்துகளில் 46 ஓட்டங்கள் குவித்து விடைபெற்றார் ரஹானே. 39 பந்துகளைச் சந்தித்து 46 ஓட்டங்களைப் பெறுவதென்பது ஐ.பி.எல்லில் ஒரு விடயமே இல்லை. ராஜஸ்தானின் அதிரடி மன்னன் கூடா களம்புகுந்தார். வந்த வேகத்தில் தொடர்ச்சியாக இரண்டு சிக்சர்களை விண்ணுக்கு உயர ஏவினார். ஆனால் நிலைமையின் தீவிரத்தை உணர்ந்த மலிங்க கூடாவை நிற்கவிடாமல் பத்திரமாக வழியனுப்பி வைத்தார். தற்பொழுது ராஜஸ்தான் 113-3 (15ப.பரிமாற்றங்கள்). இறுதி 30 பந்துகளில் 52 ஓட்டங்கள் பெற வேண்டிய நிலை. மலிங்கவின் பந்துக்கு பவுண்டரி, சிக்சர் என்று வெளுத்து வாங்கினார் சிமித். செய்வதறியாது திகைத்தார் சர்மா. சிமித்தின் வேட்டை தொடர மேலதிக இலக்குகள் இழப்பின்றி பதட்டமில்லாமல் வெற்றியை எட்டியது ராஜஸ்தான். ஆட்டநாயகனாக சிமித் தெரிவானார்.

(ரி)

# பெல் அபார சதம் வலுவான நிலையில் இங்கிலாந்து



மே.தீவுகள் இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்று டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது டெஸ்ட் ஆட்டம்

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தீவுகள் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. களமிறங்கினார்கள் குக்கும் ருரொட்டும். குக் உலகக்கிண்ண தொடரில் இருந்து களற்றி விடப் பட்டவர் ருரொட் 16 மாதங்களின் பின்னர்தான் இங்கிலாந்து அணி யில் இடம்பிடித்தவர். இருவருமே சொதப்பினார்கள். பதினாறு வருடங்களுக்குப் பிறகு மட்டை பிடித்தால் மே.தீவுகளின் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியுமா? வாய்ப்பேயில்லை. டக்கில் வெளியேறினார் ருரொட். ரோச்சின் மின்னல் வேகப்பந்து குக்கின் துடுப்புக்கால் புகுந்து இலக்குகளில் ஒன்றை தூக்கி வீசியது பதின்மத்துடன் நடையைக் கட்டினார். ஹோல்டனின் பந்தில் பலன் ஸிற்குபலன்ஸ் இல்லாமல்போக அவரும் பத்துடன் பவிலியன் திரும்பினார். மொத்தத்தில் இங்கி லாந்து 34-3. இணைந்தனர் பெல்லும் ரூட்டும். ஆமையோடும் தோற்றுப் போகும் வேகத்தில் பயணத்தாலும் நேரம் செல்லச் செல்ல படிப்படியாக சற்று போர்முக்கு திரும்பினார்கள். அணியின் ஓட்டம் உயர ஆரம்பித்தது. ஓட்டங்களோடு இணைந்து கிரிக்கெட்டின் தாயகமும் தலைநிமிர ஆரம்பித்தது. சக வீரர்களின் நெஞ்சில் நிம்மதிப் பெருமூச்சு. இணைப்பாட்டம் ஐம்பது நூறு என்று கடந்து கொண்டே சென்றது. ஆளுக் கொரு அரைச்சதமும் கண்டனர். சதத்தை நோக் கிப் பயணித்த வேளையில் 83 ஓட்டங்களுடன் ரெய்ல ரின் பந்தில் எதிர்பாராமல் போல் டானார் ரூட். ஆனால் மறுமுனையில் சதம் கடந்து அசத்தி னார் பெல். பெல்லுடன் இணைந்து சற்று அதிர டியில் பயணித்துக்கொண்டிருந்தார் ஸ்ரோக்ஸ். 59 பந்துகளில் அரைச்சதம் கடந்தார். டெஸ்ட் ஆட்டத்தில் 59 பந்தில் அரைச்சதம் கடந்து அசத்தினார். ஸ்ரோக்ஸின் பாணியில் பெல் அடித்தாட முற்பட்ட வேளையில் 143ஓட்டங்களுடன் விடை பெற்றார் முடிவில் முதலாம் நாள் ஆட்டநேர முடிவில் இங்கிலாந்து 346-5.

பந்துவீச்சில் தீவுகள் சார்பாக ரெய்லர் மற்றும் ரோச் தலா இரண்டு இலக்குகளையும் ஹோல்டர்


உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**Jaffna Alagappa University Campus**
Adiyapatham Road, Thirunelvely

- BA (History)
- BSc (Psychology)
- MA English
- BA (English)
- BBA
- MA Education
- B.Com
- BA Public Administration
- MSc (IT)

மேற்படி கற்கைநெறிகளுக்கான (December) விண்ணப்பங்கள் ஏற்கப்படுகின்றன.

BSc (Psychology) MA Education
விரிவுரைகள் இடம்பெறுகின்றன
சனி, ஞாயிறு 9.00 - 12.00 தொடர்பு: 0773867458

**சிங்கள மொழி வகுப்புக்கள்**

அடிப்படையிலிருந்து பேச்சு, அரச ஊழியர்களுக்கு விசேட வகுப்பு, A/L,O/L மாணவர்களுக்கும், சிங்கள மொழி வகுப்புக்கள். தனிப்பட்ட வகுப்புக்களும். (நேர ஒழுங்குகள் வசதிப்படி செய்து கொள்ளலாம்)

வகுப்புக்கள் நடைபெறும் இடங்கள்

1. சதாபொன்ஸ் கல்வி நிலையம் - அல்வாய்
   சனி 18.04.2015 மாலை 3.00 மணி 0212263206
2. பாரதி கல்வி நிலையம் சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி
   சனி 18.04.2015 மாலை 3.00 மணி 0777353339
3. இல. 364, ஸ்ரான்லி வீதி, ஆரியகுளம் (DMI நிறுவனம் அருகில்)
   19.04.2015 ஞாயிறு காலை 9.00 மணி - 0768580155

ஆசிரியர் : திருமதி. நஸ்மி கவிஷா விஜேபண்டார




நுணாவில் மற்றும் சாவகச்சேரியில் அமைந்துள்ள
I.O.C எரிபொருள் நிரப்பு நிலையம் சிவா சேவிஸ்ரேசன் S.T.C
சுப்பமாக்கெற் ஸ்தாபன உரிமையாளர் நிர்வாகத்தினர் மற்றும் ஊழியர்கள்
தமது வாடிக்கையாளர்கள் நண்பர்கள் அன்பர்கள் அனைவருக்கும்
உளம்கனிந்த புத்தாண்டு நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

அத்துடன் நுணாவில் நிலையத்தில் 15.04.2015 புதன் காலை 9.57மணிக்கும், சாவகச்சேரி நிலையத்தில் முற்பகல் 10.45 மணிக்கும் புத்தாண்டு கைவிசேடம் வழங்கும் நிகழ்வு இடம்பெற உள்ளதாக ஸ்தாபனத்தின் உரிமையாளர் மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றார்.

# ஹெலிப் பயணத்தின் கட்டணத்தை செலுத்துவது ஜனாதிபதியின் கடமை

வீரவன்ஸ கூறுகிறார்

கொழும்பு, ஏப் 15

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரசாரத்திற்காகப் பயன்படுத்திய விமானப் படை ஹெலிகொப்டர்களுக்கான கட்டணத்தைச் செலுத்துவது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கடமை எனவிமல்வீரவன்ஸதெரிவித்துள்ளார்.

பி.பி.சி செய்திச் சேவைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் பரப்புரைகளுக்கு விமானப்படையின் ஹெலிகொப்டர்கள் பயன்படுத்தியதை தான் ஏற்றுக்கொள்வதாகவும், அதற்கான ஏற்பாடுகளை செய்தவர் முன்னணியின் தலைவரே எனவும் அவர் கூறியுள்ளார்.

குறித்த விமானப் பயணங்களுக்கான கட்டணப் பட்டியலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பெயரிலேயே பதியப்பட்டுள்ளது. அதற்குத் தனிபட்ட ரீதியில் நான் பொறுப்புக் கூற முடியாது.

எனவே அதற்கான கட்டணத்தை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தற்போதைய தலைவர் ஜனாதிபதி மற்றும் செயலாளர் உட்பட அனைவரும் தேர்தல் பரப்புரைக்கு பயன்படுத்தப்பட்ட ஹெலி கொப்டருக்கான செலவுகளை விமானப் படைக்குச் செலுத்த வேண்டிய கடமைகள் உள்ளன.

சக வேட்பாளரிடையே முரண்பாடு காணப்பட்ட போதிலும் தேர்தல் பரப்புரை செலவுகளைத் தவிர்ப்பது நெறிமுறையற்றது என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதிப் பதவிக்காக போட்டியிடும் வேட்பாளர் ஒருவருக்கு ஹெலிகொப்டர் பலவற்றை பெற்றுக் கொள்வதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் தனது சக வேட்பாளருக்கு அவ்வாறான சந்தர்ப்பத்தினை வழங்காமல் இருப்பது சதாரணமான ஒரு விடயமா என கேள்வி எழுப்பியிருந்தார்.

பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவிற்கு ஹெலிகொப்டர் அல்ல விமானமே பெற்றிருந்தாலும் அதற்கான கட்டணத்தைச் செலுத்துவதற்கு நிதி உதவிகள் வெளிநாடுகளில் வழங்கப்பட்டி ருந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (த)

# 2 கோடி ரூபா பெறுமதியான தங்கம் கடத்திய இந்தியப் பிரஜைகள் கைது

சுமார் இரண்டு கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய தங்காபரணங்களைத் தமிழகத்தின் மதுரைக்குக் கடத்திச்செல்ல முற்பட்ட இரண்டு இந்தியப் பிரஜைகளைச் சுங்கப் பிரிவினர் நேற்று அதிகாலை கைது செய்துள்ளனர்.

கைதானவர்களிடமிருந்து 4.2 கிலோகிராம் முழுமையாக வடிவமைக்கப்பட்ட தங்க ஆபரணங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகச் சுங்க ஊடகப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்தார்.

35 வயதான இந்திய பிரஜைகள் இருவரே மூன்று பொதிகளில் தங்காபரணங்களைக் கடத்திச் செல்ல முற்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்று மதுரை நோக்கிப் புறப்படவிருந்த விமானத்தில் தங்கத்தைக் கடத்திச் செல்ல முற்பட்டுள்ளதாகவும் சுங்க ஊடகப் பேச்சாளர் கூறினார்.

கைதான இந்திய பிரஜைகளிடம் சுங்கப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, மூன்று கிலோகிரா[illegible]முக்கும் அதிக நிறையுடைய [illegible] தங்க பிஸ்கட்களை சென்னைக்கு கடத்திச் செல்ல முற்பட்ட இந்திய பிரஜை ஒருவரும் நேற்று அதிகாலை விமான நிலைய சுங்கப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். (த)

# துஷார பெரேரா பொலிஸாரால் கைது

கொழும்பு, ஏப் 15

ஐக்கிய தேசியக் கட்சியின் மஹர தொகுதி அமைப்பாளராக இருந்து, கடந்த மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் ஆளும்தரப்புக்குத் தாவிய துஷார பெரேராவை[illegible] கசியப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

போலி ஆவணங்கள் தயாரித்த குற்றஞ்சாட்டின் அடிப்படையில் கைது செய்யப்பட்டிருக்கும் துஷார பெரேராவுக்கு எதிராகக் காசோலை மோசடிக் குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

இவர், ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு மிகவும் நெருக்கமானவர் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

# பொலிஸ் கான்ஸ்டபிளை தாக்கிய ஐந்து பேர் கைது

கொழும்பு, ஏப் 15

மொனராகலை – ஆயித்திமலைப் பிரதேசத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள் மற்றும் அவரது சகோதரி மீது தாக்குதல் நடத்திய ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஓட்டோவில் சென்ற சிலர் பொலிஸ் கான்ஸ்டபிளை அவரது வீட்டில் வைத்துத் தாக்கியதுடன் அதனைத் தடுத்த சகோதரி மீதும் தாக்குதல் நடத்தியுள்ளனர். காயமடைந்த இருவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தாக்குதலுடன் தொடர்புடைய எழுவரில் ஐவரைக் கைது செய்துள்ள பொலிஸார் மேலும் இருவரைத் தேடி வருகின்றனர். (த)

## மரண அறிவித்தல்கள்

### செல்வி மிதுசுஜி இராஜசூரியா (சுஜிக்குட்டி)



இல.635, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும், யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் தரம் 9 இல் கல்வி கற்றுவருபவருமாகிய செல்வி மிதுசுஜி இராஜசூரியா நேற்று (14.04.2015) செவ்வாய்க்கிழமை காலை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் திரு.திருமதி இராஜசூரியா (உதவிப் பொறியியலாளர், தேசிய வீடமைப்பு அதிகார சபை), மஞ்சுளா தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும், தார்ஷிகா (த பினான்ஸ், நெல்லியடி), ஜதிஷன் (கட்டடங்கள் திணைக்களம் வட மாகாணம்), தர்ஷன் (முகாமைத்துவப் பீடம், 2ஆம் வருடம், யாழ். பல்கலைக்கழகம்), சஜீந்திரா (யா/இந்துக் கல்லூரி, உயர்தரம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.04.2015) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 2.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.635, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்.



### சின்னப்பு வேலுப்பிள்ளை

கள்ளிநகர் கைதடி கிழக்கைப் பிறப்பிடமாகவும், கைதடி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு வேலுப்பிள்ளை 13.04.2015 திங்கட்கிழமை இரவு காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பு-பொன்னி தம்பதியரின் அருமைப் புதல்வனும், சிவலை-குஞ்சி தம்பதியரின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், லண்டனில் வசிக்கும் பற்குணராஜாவின் அன்புத் தந்தையும், லண்டனில் வசிக்கும் தனுஷாவின் அன்பு மாமனும், காலஞ்சென்ற கண்மணி மற்றும் சின்னம்மா (மட்டுவில்), குஞ்சம்மா, இராசம்மா, தவமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான நாகன், சண்முகம், கிருஸ்ணன் மற்றும் மகாலிங்கம், நவரத்தினம், மணி, சின்னம்மா, கணேசன், தவமலர், நாகராஜா, மல்லிகாதேவி, செல்வமலர் ஆகியோரின் மைத்துனரும், பொன்னு, காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் இராஜபூபதி, தம்பிஜயா, சறோசாதேவி, திருச்செல்வநாதன், பஞ்சலிங்கம் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.04.2015) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரியான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கைதடி தெற்கு, கைதடி.
021 373 7723

தகவல் :
குடும்பத்தினர்.

### திருமதி செல்லம்மா செல்லர்



தச்சந்தோப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா செல்லர் நேற்று (14.04.2015) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வினாசி-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லரின் அன்பு மனைவியும், சந்திரா, மனோகரி, ரதி, சுதா, காலஞ்சென்ற செல்வராசா மற்றும் தேவதாஸ் (பனை அபிவிருத்தி சபை கடமையாளர்) சுதாகரன், பாஸ்கரன், காலஞ்சென்ற குமாரதாஸ் மற்றும் சிவராஜா ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை மற்றும் தவமணி, கோபாலசிங்கம் சற்குணவதி (யாழ்.தாதியர் பயிற்சிப் பாடசாலை), நளாயினி, சர்மிளாதேவி, விஜயவனிதா, சிதம்பரப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.04.2015) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தச்சந்தோப்பு பிணமுருங்கை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நாவற்குழி கிழக்கு,
தச்சந்தோப்பு, கைதடி.

தகவல் :
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மனோரஞ்சிதமலர் சிவரத்தினம்



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், 182, சேர் பொன். இராமநாதன் வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோரஞ்சிதமலர் சிவரத்தினம் கடந்த (13.04.2015) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம்-சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற செ.சிவரத்தினத்தின் அன்பு மனைவியும், சி.செல்வநாயகத்தின் (செல்வா மாஸ்டர், சிரேஷ்ட அதிகாரி, வாழ்வெழுச்சி அபிவிருத்தித்திணைக்களம், முன்னாள் வருகைநிலை விரிவுரையாளர்-வணிகத்துறை, நிர்வாக உறுப்பினர் ACCA, நிர்வாக சபை அங்கத்தவர், பழைய மாணவர் சங்கம்-கொக்குவில் இந்துக் கல்லூரி) அன்புத் தாயும், திருஞானகௌரி (கௌரி)யின் (பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், உடுவில்) அன்பு மாமியும், நிஷாஜினி, அஷ்வினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.04.2015) புதன்கிழமை மு.ப. 10.00 மணியளவில் திருநெல்வேலி பல்கலைக்கழகம் முன்பாக உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லபடும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

182, இராமநாதன் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

தகவல் :
S. செல்வநாயகம் (மகன்)
0776021794

### Dr. சின்னையா சின்னத்துரை

மலர்வு: 21.03.1932 உதிர்வு: 13.04.2015



ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் L 1/1 பம்பலப்பிட்டி அரச தொடர்மாடியை வதிவிடமாகவும் கொண்ட Dr. சி.சின்னத்துரை 13.04.2015 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் 18.03.2015 சிவபதமடைந்த கமலாசினியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான சின்னையா-நாகமுத்து தம்பதியரின் அன்புப் புதல்வரும், சுதுமலை கிழக்கு ஆறுமுகம்-அருந்ததி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்றவர்களான தங்கம்மா-மயில்வாகனம், ஞானம்மா-சிவஞானசுந்தரம், பாக்கியம்-முத்துராசா மற்றும் இராசையா, கனகசபை ஆகியோரின் பாசமிகு சகோதரரும், மனோன்மணி, பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் இன்று (15.04.2015) புதன்கிழமை காலை 9.00 மணி முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, மாலை 5 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

L 1/1. பம்பலப்பிட்டி
அரச தொடர்மாடி,
பம்பலப்பிட்டி

தகவல் : மருமக்கள் -
சி.ஏகாம்பரேஸ்வரி (குஞ்சு)
ச.உமாபதி, ச.குமரன்
பேரமக்கள் க.சந்திரகாந்தி (பவா)
அ.சாந்தி

# நான்காவது அகவையில் உதயன் இணைய வானொலியின் பிறந்தநாள் கொண்டாட்டம்









இலங்கையின் முதற்தர தமிழ் இணைய வானொலியான உதயன் இணைய வானொலியின் நான்காவது பிறந்தநாள் கொண்டாட்டம் நேற்றைய தினம் உதயன் சிறப்புக் கலையகத்தில் சிறப்புற இடம்பெற்றது. இதில் உதயன் குழுமத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரணவணபவன் கலந்து சிறப்பித்திருந்தார். இதே சமயம் இந்த நிகழ்வில் ஈழத்துக் கலைஞர்கள், இலக்கிய விவாதிகள், நேயர்கள் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

உதயன் 30 ஆண்டு

# மாணவர் இலக்கியப் போட்டிகள் - 2015

## கட்டுரைப் போட்டி - B (தரம் 6-09) பிரிவின்

## மாவட்ட மட்ட பெறுபேறுகள்

### யாழ்ப்பாண மாவட்டம்

1 ஆம் இடம் - ஜெ.மாதவன், யா/இந்துக் கல்லூரி
2 ஆம் இடம்- ஜீவராஜா அபிராமி, யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்
3 ஆம் இடம்- மாதங்கி குபேரமூர்த்தி, யா/இணுவில் இந்துக் கல்லூரி

பாராட்டுச் சான்றிதழ் பெறுவோர்.:-

- தக்ஷாயினி தவராசசிங்கம், யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை
- ஜெ.நிதர்சனா, யா/ஊர்காவற்றுறை புனித மரியாள் றோ.க. பெண்கள் வித்தியாலயம்
- ர.கோசல்யா, யா/ அராலி அ.த.க.பாடசாலை
- வானதி செங்கதிர்ச் செல்வன், யா/இந்துமகளிர் கல்லூரி
- கு.தயாளந்தினி, யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை
- அபர்ணா கிருஷ்ணமூர்த்தி, யா/ விக்ரோறியாக் கல்லூரி
- யேந்தினி ஸ்ரீஸ்கந்தராசா,யா/உசன் இராமநாதன் ம.வி
- ப.துளசிகா, யா/புற்றளை ம.வி.
- அ.திலோத்தமன், யா/யாழ்ப்பாணக் கல்லூரி
- அ.ஷண்முகப்பிரியா, யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

### கிளிநொச்சி மாவட்டம்

1 ஆம் இடம் - லோ.நிதுஷா, கிளி/அக்கராயன் ம.வி
2 ஆம் இடம் - கங்கேஸ்வரன் டர்ஜிகா..கிளி/கிளிநொச்சி ம.வி
3 ஆம் இடம் - பா.குமுதகலா, கிளி/செஞ்சோலை சிறுவர் இல்லம்

### முல்லைத்தீவு மாவட்டம்

1 ஆம் இடம் - சிவகடாட்சம் நிவேதிகா, மு/விசுவமடு ம.வி
2 ஆம் இடம் - ம.டிலான்ஷன், மு/பாலிநகர் ம.வி
3 ஆம் இடம் - ஜெ.கவினயா, மு/உடையார்கட்டு ம.வி

பாராட்டுச் சான்றிதழ் பெறுவோர்.:-

- இராமகிருஷ்ணன் பிரசாந்தி, மு/விசுவமடு ம.வி
- யோகரட்ணம் சங்கீத் மு/விசுவமடு ம.வி
- ச.சுபாகரன் மு/விசுவமடு ம.வி
- இ.ரோஜிதா மு/முள்ளியவளை மேற்கு
- றஞ்சித் சுரபி மு/விசுவமடு ம.வி
- நாராயணசாமி பாணுகா மு/உடையார்கட்டு ம.வி
- ம.டிலக்ஷனா மு/பாலிநகர் ம.வி

### வவுனியா மாவட்டம்

1 ஆம் இடம்: செறூபன் சாயீசன், வவு/விபுலானந்தக் கல்லூரி
2 ஆம் இடம்: சுகுமார் ஆரணன், வவு/வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்
3 ஆம் இடம் ச.மதுஷாலினி வவு/விபுலானந்தக் கல்லூரி

பாராட்டுச் சான்றிதழ் பெறுபவர்.:-

- க.டிலக்ஷனா, வவு/வவுனியா பூந்தோட்டம் ம.வி

*இவர்களில் முதலாமிடம் ரூபா 3,000.00 - இரண்டாம் இடம் ரூபா 2,000.00 மூன்றாம் இடம் ரூபா 1,000.00 பரிசுபெறுபவர்கள் ஆவர்.*

**இவர்களுக்கான பரிசளிப்பு விழா நிகழ்வு இடம், காலம், உரிய முறையில் அறிவிக்கப்படும்.**


இவர்களில் மாகாண மட்டத்துப் பரிசு முதலாமிடம் ரூபா 7,000.00 இரண்டாம் இடம் ரூபா 5,000.00, மூன்றாம் இடம் ரூபா 3,000.00 பெறுபவர்கள் தேர்வு செயலொழுங்கு இடம்பெற்று வருகின்றது. மாவட்ட மட்டத்தில் தேர்வு செய்யப்பட்டவர்களில் மாகாண மட்டப்பரிசு பெறுவோர் விவரம் பரிசளிப்பு தினத்தன்று நடுவர்களால் தெரிவிக்கப்பட்டு, அன்றைய தினமே பரிசுத் தொகை வழங்கப்படும் என்பதனை மிக மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

# நிறைவுக்கு வருமா தொடர் தோல்விகள் ?



கடந்த வருடத்துக்கான ஐ.பி.எல் தொடரிலும் சரி நடப்பு ஐ.பி.எல் தொடரிலும் சரி டெல்லி அணி வரிசையாக தொடர்ந்து தோல்விகளைச் சந்தித்து வருகின்றது. இந்த நிலையில் இன்றைய பஞ்சாப்புக்கு எதிரான ஆட்டத்திலாவது டெல்லியின் தோல்விப்பயணம் முற்றுப் பெற்று டெல்லிக்கான வெற்றிப் பாதை ஆரம்பமாகுமா? என்று டெல்லி ரசிகர்களுடன் அணியின் உரிமையாளர்களும் காத்துத் தவம் கிடக்கின்றனர்.

டெல்லியணி கடந்த வருட ஐ.பி.எல். தொடரில் இறுதியாகத் தான் சந்தித்த 9 ஆட்டங்களிலும் தோல்விமேல் தோல்வியைச் சந்தித்தது. இந்த நிலையில் அணியின் உரிமையாளர்கள் நிர்வாகிகள் என்று அனைவரும் இணைந்து துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு என்று முற்றிலும் சிறந்த புதிய அணியை கோடிக்கணக்கில் செலவழித்து உருவாக்கினார்கள். டெல்லியின் சகலதுறை வீரரான யுவராஜை மட்டும் வேண்டுவதற்காக பெங்களூருடன் போட்டியிட்டு 16 கோடிக்கு வாங்கியது டெல்லி நிர்வாகம். இவ்வாறு பணத்தைக் கொட்டியும் நடப்பு ஐ.பி.எல் தொடரில் டெல்லியின் சோகங்கள் தொடர்ந்து கொண்டு தான் உள்ளது. இந்த நிலையில் இன்று பஞ்சாப்பை வீழ்த்தி பதினொரு தோல்விகளின் பின்னர் முதல் வெற்றியை டெல்லி தொட்டுப்பார்க்குமா? என்பதே ஐ.பி.எல் ரசிகர்களிடம் தற்பொழுது உள்ள பலத்த எதிர்பார்ப்பு. ஆனாலும் காயம் காரணமாக தொடர்ந்து அவதிப்பட்டுவரும் வேகப்பந்து வீச்சாளர்களான ஷகீர்கானும், சமியும் அணியுடன் இன்றும் இணைய வாய்ப்பில்லை என்பது டெல்லிக்கு சற்று கடினமான விடயமே. (ரி)



# சிறப்பான களத்தடுப்பில் கரை கண்டவர் ஜடேஜா

ஜடேஜாவின் களத்தடுப்பு மிகவும் சிறப்பாக உள்ளது. இந்திய அணியின் மிகச் சிறந்த களத்தடுப்பாளர்களில் ஜடேஜாவும் ஒருவர் என்று இந்திய தேசியஅணியினதும் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியினதும் களத்தடுப்பு பயிற்சியாளரான ஶ்ரீதர் தெரிவித்துள்ளார்.

ஜடேஜாவின் களத்தடுப்பு தொடர்பாக ஶ்ரீதர் தெரிவித்ததாவது 'துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சைப் போல், களத்தடுப்பும் ஒரு அணிக்கு அதி முக்கியத்துவம் வாய்ந்தது. தற்போது அனைத்து அணிகளும் வீரர்களுக்கு முதலில் களத்தடுப்பு பயிற்சியைத்தான் அளிக்கின்றன. களத்தடுப்பு என்றவுடன் பந்தை நோக்கி தாறுமாறாக விழுவது மட்டுமன்றி விரட்டிச்சென்று பிடிப்பதும் அடங்கும். பந்தை விரட்டுவதில் ஜடேஜா தேர்ச்சி பெற்றவர். அவர் பந்தை நேராக விரட்டுவதில்லை. அவரின் களத்தடுப்பு ஏனைய வீரர்களில் இருந்து வேறுபடுகின்றது. பந்தை நெருங்கும் வேளையில் தனது உடலை லாவகமாக ஒரு பக்கமாக சரித்துகொண்டும் அதே நேரம் வேகம் குறையாமலும் விரைகின்றார். இதனால் அவர் பந்தை நோக்கி விழும்போது காயங்கள் ஏற்படுவதும் குறைக்கப்படுவதுடன் நூறு வீதம் கச்சிதமாக களத்தடுப்பையும் செய்கின்றார். இது ஒரு அசாத்தியத் திறமை. பயிற்சிகள் அதிகரிக்கும் பொழுது இவ்வாறான திறமையை நாம் மெருகேற்றிக்கொள்ளலாம்.' என்றார். (த–ரி)

# சாவைத் தேடிச் செல்லுமா இலங்கைக் கிரிக்கெட்?



தாக்குதலின் பின்னர் அவசரமாக மைதானத்தில் இருந்தே நாடு திரும்பும் இலங்கை வீரர்கள்



தாக்குதல் நடத்திய தீவிரவாதிகள் பாகிஸ்தான் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டபோது



தாக்குதல் நடத்திய தீவிரவாத அமைப்பின் தலைவர் அண்மையில் விடுதலை பெற்றபோது



உயிர்தப்பிப் பிழைத்த இலங்கை வீரர்கள் குடும்பத்துடன் இணைந்த போது

இலங்கை கிரிக்கெட் அணி பாகிஸ்தானுக்குக் கடைசியாகச் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த வேளையில் தீவிரவாதிகள் இலங்கை அணியின் மிது துப்பாக்கிச்சூட்டுத்தாக்குதல் நடத்தினார்கள். இதன்பின்னர் எந்த அணியும் பாகிஸ்தானுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொள்வதில்லை. இந்த நிலையில் பாகிஸ்தானுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டால் இலங்கை அணிக்கு சிவப்பு பெட்டி பாதுகாப்புடன் சிறந்த வரவேற்பு வழங்கப்படும் என்று பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

இலங்கை பாகிஸ்தானுக்கு சுற்றுப் பயணம் செய்வது தொடர்பாக பாகிஸ்தான் அதிகாரி ஒருவர் தெரிவித்ததாவது இலங்கை அணிக்கு எதிராக லாகூரில் நடைபெற்ற தாக்குதல் துரதிர்ஷ்டவசமானது. இருப்பினும் இலங்கை தனது முதுகை திருப்பிக்கொள்ளவில்லை. நாங்கள் அவர்களின் சகோதர மரியாதையை மதிக்கி றோம். தற்போது எங்களிடம் சிறந்த ராணுவ பாதுகாப்பு உள்ளது. சிம்பாப்வே அணி பாகிஸ்தானுக்கு விரைவில் வரவுள்ளது. இது சர்வதேச நாடுகள், தற்போதைய அரசாங்கத்தின் மேல் கொண்டுள்ள நம்பிக்கையைக் காட்டுகிறது என்று தெரிவித்துள்ளார். சிம்பாப்வேயை தொடர்ந்து இலங்கை அணியும் பாகிஸ்தானுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டால் பாகிஸ்தானில் பாதுகாப்பு இல்லை என்கின்ற பயம் உலகநாடுகளுக்கு இல்லாமல் போகும். இது பாகிஸ்தானில் கிரிக்கெட் மீண்டும் உயிர் பெற உதவும் என்றார். பாகிஸ்தானில் ஏனைய நாடுகள் வந்து விளையாட பாகிஸ்தான் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் இல்லாவிடில் பாகிஸ்தானில் கிரிக்கெட் செத்துவிடும் என்று அண்மையில் வக்கான் யுனிஸ் தெரிவித்திருந்தார்.

சில நாட்களுக்கு முன்னர் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாகிஸ்தானுக்கு உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. அதே நேரம் இலங்கை அணிமீது தீவிரவாதத்தாக்குதல் நடத்திய தீவிரவாத அமைப்பின் தலைவர் சில மாதங்களின் முன்னர்தான் பாகிஸ்தான் அரசினால் விடுவிக்கப்பட்டதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். (ரி)



# சிகரம் தொடும் ஹியூக்ஸ்

மறைந்த பிலிப் ஹியூக்ஸின் தனது ஒருநாள் ஆட்டங்களில் அதிகமாக அணிந்திருந்த சீருடை, இறுதியாட்டத்தில் பயன்படுத்திய துடுப்பு மட்டை என்பன உலகின் மிக உயரமான எவரெஸ்ட் சிகரத்தின் உச்சிக்குக் கொண்டு செல்லப்படவுள்ளது. ஆஸ்திரேலிய அணி வீரர் பிலிப் ஹியூக்ஸ், கடந்த வருடம் நவம்பர் மாதம் 27ஆம் திகதி ஆஸ்திரேலிய உள்ளூர் தொடர் ஒன்றில் சியான் அபொட் வீசிய பவுன்சர் பந்து தாக்கியதில், தலையின் பின்புறம் உள்ள தமணி என்ற இடத்தில் அடிபட்டு, மரணமடைந்தார். இந்த நிலையில் இவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், ஹியூக்ஸின் துடுப்பும், சீருடையும் எவரெஸ்ட் சிகரத்துக்கு கொண்டு செல்லப்படவுள்ளது.

எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த முதல் மலையேற்ற வீராங்கனை என்ற கின்னஸ் சாதனையை கடந்த 2012ஆம் ஆண்டில் நிலைநாட்டிய சுரிம் ஷேர்பா ஹியூக்ஸின் உ[illegible]கரணங்களை கொண்டு செல்வ[illegible]காகத் தெரிவு செய்யப்பட்டுள்ள[illegible] வானிலை சீராக இருக்கும் பட்சத்தில் ஹியூக்ஸின் உபகரணங்களைக் கொண்டு ஷேர்பா நாளை மறுதினம் எவரெஸ்டுக்குப் பயணத்தைத் தொடங்குவார். தனதுபணியை முடித்து மே 31 இல் மீண்டும் திரும்புவார் எனத் தெரிகிறது. (த–ரி)

## கெயில் 200

ஐ.பி.எல் தொடர்களில் ஒட்டு மொத்தமாக 200 சிக்சர்களை அடித்து புதிய சாதனையை நிலை நாட்டியுள்ளார் கிறிஸ் கெயில். நடப்பு ஐ.பி.எல் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் பெங்களூர் ஹைதரபாத் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் கெயில் ஒரேயொரு சிக்சரைத்தான் அடித்தார். ஆனால் ஐ.பி.எல்.தொடரில் ஒட்டமொத்தமாக 200 சிக்சர்கள் என்ற இலக்கை எட்டிய முதல் வீரர் என்ற சாதனையை இந்த சிக்சர் மூலம் கெயில் படைத்தார். (ரி)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.04.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.